# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## நிதித்தொழில்

**நிதித்தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டமூலம்**

*பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரால் 2011, ஏப்பிறல் மாதம் 8 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2011, மாச்சு மாதம் 28 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***101 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 84.00** **தபாற் செலவு : ரூபா 25.00**

2-PL 005687-650 (2011/04)

ச.வ.ஓ- 20/2010

**நிதித்தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2011 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நிதித்தொழிற் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## பாகம் I

**நிதிக்கம்பெனிகளுக்கு உரிமமளித்தல்**

அதிகாரமின்றி நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதும் வைப்புக்களை ஏற்றுக் கொள்வதும் தவறொன்றாதல்.

**2.** (1) இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஆளொருவர் தவிர்ந்த ஆளெவரும் நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துதலாகாது.

(2) இச்சட்டத்தின்கீழ் நிதித்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உரிமமளிக்கப்பட்ட ஆளொருவர் தவிர்ந்த அல்லது 3 ஆம் பிரிவின் நியதிகளின்படி இச்சட்டத்தின் ஏற்பாடுகளினது ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆளொருவர்தவிர்ந்த ஆளெவரும் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதலாகாது.

(3) ஆளொருவர் 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பெனியொன்றாக இருந்தாலொழியவும், அத்தகைய கம்பெனி, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கருத்துக்குட்பட உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்றாக, தனியார் கம்பெனியொன்றாக, கரைகடந்த கம்பெனியொன்றாக அல்லது வெளிநாட்டுக் கம்பெனியொன்றாக இல்லாதிருந்தாலொழியவும், அத்தகைய ஆள் இச்சட்டத்தின்கீழ் நிதிக்கம்பெனியொன்றாக உரிமமளிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலாகாது.

2-PL 005687-650 (2011/04)

(4) ஓராம் அல்லது (2)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் குறித்தசில நிறுவனங்களுக்கு ஏற்புடையனவாகாமை.

**3.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றாக அல்லது உரிமமளிக்கப்பட்ட தனித்துவமான வங்கியொன்றாக 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வங்கிக்கும் அத்துடன் அது தொடர்பாகவும் அல்லது அதன் 76அ என்னும் பிரிவின் நியதிகளின்படி விலக்களிக்கப்பட்டதும், இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டதுமானவொரு நிதிக்கம்பெனி தவிர்ந்த ஏதேனும் நிறுவனத்துக்கும் அத்துடன் அதுதொடர்பாகவும், அல்லது ஒரு மாகாணசபையின் நியதிச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டவொரு கூட்டுறவுச் சங்கத்துக்கும் அத்துடன் அதுதொடர்பாகவும் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் இச்சட்டத்தின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கப்பட்டவொரு நிறுவனத்துக்கும் அத்துடன் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலாகாது.

உரிமமொன்றுக்கான விண்ணப்பம்.

**4.** உரிமமொன்றுக்கான விண்ணப்பம், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சபைக்கு எழுத்திற் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பத்திற் கூறப்பட்ட விபரங்கள், விண்ணப்பகாரக் கம்பெனியின் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை, உண்மையானவையும் செம்மையானவையும் என விண்ணப்பகாரக் கம்பெனியினால் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

நிதிக்கம்பெனிகளாகக் கம்பெனிகளுக்கு உரிமமளித்தல்.

**5.** (1) இச்சட்டத்தின்கீழான உரிமமொன்றுக்காகச் சபைக்கு விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, சபையானது, விண்ணப்பம் தொடர்பில் பணிப்பாளர் தமது விதப்புரையைச் செய்வதனைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், பணிப்பாளர், அவசியமென அவர் கருதக்கூடியவாறான தகவலையும் கோரலாம்; அத்துடன் உரிமமொன்றுக்காக விண்ணப்பிக்கும் கம்பெனியினதும் அதன் வைத்திருக்கைக் கம்பெனியினதும், ஏதேனும் துணைநிலைக் கம்பெனியினதும் ஏதேனும்

இணைக்கம்பெனியினதும் அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் ஏதேனும் துணைநிலைக் கம்பெனியினதும் அல்லது இணைக்கம்பெனியினதும் அல்லது பணிப்பாளரின் கருத்தில் உரிமத்துக்காக விண்ணப்பிக்கும் கம்பெனியில் கணிசமானளவிலான நிதி அக்கறையை அல்லது குறிப்பிடத்தக்க முகாமைத்துவ அக்கறையைக் கொண்டுள்ளதான வேறேதேனும் கம்பெனியினதும் எத்தகையனவுமான விவரணத்தினவான புத்தகங்களையும், பதிவேடுகளையும், ஆவணங்களையும் கோரிப் பரிசோதனை செய்யலாம் அல்லது பரிசோதனை செய்விக்கலாம் என்பதுடன், தமது விதப்புரையைச் சபைக்குச் செய்தலும் வேண்டும்.

(2) சபையானது, (3)ஆம் உட்பிரிவின்கீழ் உரிமமொன்றைக் கம்பெனியொன்றுக்கு வழங்குமுன்னர் எந்நேரத்திலேனும், விண்ணப்பகாரக் கம்பெனியின் பொருத்தமாந்தன்மைபற்றித் தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்வதற்கு அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய நுண்ணாய்வுகளைச் செய்விக்கலாமென்பதுடன், விண்ணப்பகாரக் கம்பெனியின் பொருத்தமாந்தன்மைக்கு இயைபானதும், குறிப்பாகப் பின்வருவனபற்றியதுமான ஏதேனும் கருமத்தின்மீது சபையைத் திருப்திப்படுத்தும்படி விண்ணப்பகாரக் கம்பெனியையும் தேவைப்படுத்தலாம்:-

(அ) விண்ணப்பகாரக் கம்பெனியினாற் சமர்ப்பிக்கப் பட்ட ஆவணங்களினதும் விபரங்களினதும் உண்மையான தன்மையும் அவற்றின் செல்லுபடியாந்தன்மையும்;

(ஆ) விண்ணப்பகாரக் கம்பெனியின் நிலைமையும் வரலாறும்;

(இ) சபையானது அவசியமெனக் கருதக்கூடியவாறாக, பணிப்பாளர் சபையினதும், பிரதான நிறைவேற்ற லுவலரினதும், முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரினதும் கல்விசார் மற்றும் உயர்தொழிற் சார் தகைமைகளும், அனுபவமும், நிதிநிலைமையும், பொருத்தமாந்தன்மையும் ;

(ஈ) விண்ணப்பகாரக் கம்பெனியின் மூலதனத்தின் போதுமாந்தன்மையும் அல்லது விண்ணப்பகாரக் கம்பெனியினால் கொடுத்துதவப்பட்ட தகவலின் அடிப்படையில், போதிய மூலதனத்தைத் திரட்டுவதற்கு அத்தகைய கம்பெனிக்குள்ள ஆற்றலும்;

(உ) அத்தகைய கம்பெனியின் நிதித்தொழிலை நடாத்துவதில் உறப்படக்கூடிய எல்லாக் கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் மேவுவதற்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கும் விண்ணப்பகாரக் கம்பெனிக்குள்ள ஆற்றல் ; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின்கீழான உரிமத்துக்கான விண்ணப்பம் தொடர்பாக இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு விண்ணப்பகாரக் கம்பெனி இணங்கியொழுகுகின்றமை.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் சபைக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தையும் பணிப்பாளரின் விதப்புரைகளையும் கவனத்துட்கொண்டதன்மேலும் (2) ஆம் உட்பிரிவின்கீழான அத்தகைய நுண்ணாய்வுகளின் பின்னரும் -

(அ) (i) இருநூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத, அல்லது 17 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு உயர்வான தொகையினதான மைய மூலதனத்தை விண்ணப்பகாரக் கம்பெனி கொண்டுள்ளதென்றும்;

(ii) விண்ணப்பகாரக் கம்பெனி, நிதிக்கம்பெனிகளுக்கு ஏற்புடையற்பாலனவான பணிப்புகளுக்கும் விதிகளுக்கும் இணங்கியொழுகுவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளதென்றும்; அத்துடன்

(iii) சபைக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்பட்ட தகவலின் ஆதாரத்தின்மேல், விண்ணப்பகாரருக்கு உரிமமொன்றை வழங்குதல் அதன் கடன் கொடுத்தோரி

னதும் ஏனைய அக்கறை கொண்டுள்ளோரினதும் நலன்களுக்குப் பங்கம் விளைவிக்கமாட்டாதென்றும்,

சபை திருப்திப்படின், சபையானது, சபை தகுதியானவையெனக் கருதக்கூடியவாறான அத்த கைய நியதி நிபந்தனைகளுக்கமைய, நிதித்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான நிதிக்கம்பெனி யொன்றாக விண்ணப்பகாரக் கம்பெனிக்கு உரிமமளிக்கலாம்;

(ஆ) விண்ணப்பகாரக் கம்பெனிக்கு உரிமமொன்றை வழங்குதல் அதன் கடன்கொடுத்தோரினதும் ஏனைய அக்கறை கொண்டுள்ளோரினதும் நலன்களுக்குப் பங்கம் விளைவிக்கமாட்டாதெனவும், (அ) என்னும் பந்தியின் (i) ஆம், (i) ஆம் உட்பந்திகளிற் குறித்துரைக் கப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை விண்ணப்பகாரக் கம்பெனி உடையதெனவும் சபை திருப்திப்படின், சபையானது, சபை தகுதியானவை யெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிநிபந்தனை களுக்கமைய, தற்காலிக அங்கீகாரமளிக்கலாம்; அல்லது

(இ) விண்ணப்பகாரக் கம்பெனிக்கு உரிமமொன்றை வழங்குதல் அதன் கடன் கொடுத்தோரினதும் ஏனைய அக்கறை கொண்டுள்ளோரினதும் நலன்களுக்கு அல்லது நிதிமுறைமையின் நலனுக்கும் நிலையுறுதிக்கும் பங்கம் விளைவிக்குமெனச் சபை திருப்திப்படின், சபையானது விண்ணப்பத்தை நிராகரித்து அது அவசிய மெனக் கருதுகின்றவாறான அத்தகைய பணிப்புகளை வழங்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் வழங்கப்பட்ட தற்காலிக அங்கீகாரம், சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய ஒரு காலப்பகுதிக்குச் செல்லுபடியாதல் வேண்டும். விதிவிலக்கான சூழ்நிலைகளில் சபையானது தற்காலிக அங்கீகாரத்தின் செல்லுபடிக் காலப்பகுதியை நீடிக்கலாம்: ஆயின், எவ்வாறாயினும், தற்காலிக

அங்கீகாரத்தின் செல்லுபடிக் காலப்பகுதி, (3)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தற்காலிக அங்கீகாரம் எத்தேதியன்று வழங்கப்பட்டதோ அத்தேதியிலிருந்து பதினெட்டு மாதங்களை விஞ்சுதலாகாது.

(5) எந்த விண்ணப்பகாரக் கம்பெனி தொடர்பில் தற்காலிக அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதோ அந்த விண்ணப்பகாரக் கம்பெனி, இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்று அதற்கு வழங்கப்படுமுன்னர் நிதித்தொழிலைத் தொடங்குதலாகாது. அத்தகைய கம்பெனியினால் வழங்கப்பட்ட ஏதேனும் விவரமஞ்சரி அல்லது அறிவித்தல் அல்லது செய்யப்பட்ட ஏதேனும் விளம்பரம் அல்லது வேறு வெளியீடு, அத்தகைய வெளிப்படுத்துகை ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்டாலொழிய, (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழான தற்காலிக அங்கீகாரம் அதற்கு அளிக்கப்பட்டுள்ளதென்ற நிகழ்வைக் கூறுதலாகாது.

(6) (அ) உரிமமொன்றுக்கான விண்ணப்பத்தில் அடங்கியுள்ள ஏதேனும் தகவல் அல்லது விண்ணப்பகாரக் கம்பெனியினால் அதுசம்பந்தமாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் தகவல் பொய்யானதென, பூரணமான தற்றதென அல்லது பிழையானதெனக் காணப்படின்; அல்லது

(ஆ) சபைக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்பட்ட ஏதேனும் தகவலைக் கருத்திற்கொண்டு, விண்ணப்பகாரக் கம்பெனிக்கு உரிமமொன்றை வழங்குதல் நிதிமுறைமையின் நலன்களுக்கும் நிலையுறுதிக்கும் பங்கம் விளைவிக்கின்றதென வெளிப்படையாகக் காணப்படின்,

சபையானது, தற்காலிக அங்கீகாரத்தை மீளப்பெறலாம்.

(7) மூன்றாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் விதிக்கப்பட்ட நியதிநிபந்தனைகளை நிறைவேற்றியமையையும் தற்காலிக அங்கீகாரத்தை அளித்த பின்னர் பெறப்பட்ட தகவலையும் சபையானது கவனத்துட்கொண்டும், விண்ணப்ப

காரக் கம்பெனிக்கு உரிமமளித்தல் அதன் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன் கொடுத்தோரினதும் நலன்களுக்கு அல்லது நிதிமுறைமையின் நிலையுறுதியினது நலனுக்குப் பங்கம் விளைவிக்கமாட்டாதெனத் தன்னைத் திருப்திப்படுத்திக் கொண்டும், சபை அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய விண்ணப்பகாரக் கம்பெனிக்கு உரிமமொன்றை வழங்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், தற்காலிக அங்கீகாரம், விண்ணப்பகாரக் கம்பெனிக்கு உரிமமொன்றை அளிப்பதற்குச் சபையைப் பிணித்தலாகாது.

(8) விண்ணப்பகாரக் கம்பெனியொன்றுக்கு உரிமமொன்றை வழங்குவதன்மேல், சபையானது, அத்தகைய விண்ணப்பகாரக் கம்பெனி நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அதிகாரமளிக்கின்ற அத்தகைய உரிமம் அதற்கு வழங்கப்பட்டமைபற்றிப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கின்ற அறிவித்தலொன்றை, வர்த்தமானியிலும் இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது ஒரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்தச் செய்தித்தாளிலும் வெளியிடச் செய்தல் வேண்டும்.

(9) பொய்யானதாகவுள்ள, பூரணமற்றதாகவுள்ள அல்லது பிழையானதாகவுள்ள தகவலை, உரிமமொன்றுக்கான விண்ணப்பத்தில் அல்லது அதுசம்பந்தமாகச் சமர்ப்பிக்கப்பட்ட வேறேதேனும் ஆவணத்தில் அல்லது இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்று வழங்கப்படவுள்ள கம்பெனியின் பொருத்தமாந்தன்மையை நிச்சயிப்பதற்கு நடாத்தப்பட்ட ஏதேனும் விசாரணையின்போது அல்லது நுண்ணாய்வின்போது சமர்ப்பிக்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

**6**. இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு நிதிக் கம்பெனியும், விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தொகையில் வருடாந்த உரிமக் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும். உரிமக் கட்டணம்.

*நிதிக்கம்பெனிகள் பற்றிய இடாப்பும் நிதிக் கம்பெனிகளின் பெயர்களை வெளியிடுதலும்.*

**7**. (1) சபையானது, இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனிகள்பற்றிய இடாப்பொன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

(2) சபையானது, காலத்துக்குக்காலம், சபை தகுதியானதெனக் கருதுகின்றவாறானவொரு முறையிலும் படிவத்திலும் இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட நிதிக்கம்பெனிகளின் பெயர்களைக் கொண்டுள்ள அறிவித்தலொன்றை வெளியிடச் செய்யலாமென்பதுடன், அக்கம்பெனிகளின் மேற்பார்வை ரீதியிலான மதிப்பீட்டையும் அது உள்ளடக்கலாம்.

*நிதிக்கம்பெனியின் உரிமத்தை வெளிக்காட்டுதல்.*

**8**. ஒவ்வொரு நிதிக்கம்பெனியும், அதன் உரிமத்தை, எல்லா நேரங்களிலும், அத்தகைய நிதிக்கம்பெனியின் பிரதான அலுவலகத்திலும் அல்லது தொழிலிடத்திலும் அத்துடன் அத்தகைய உரிமத்தின் பிரதியொன்றை அதன் கிளைகளுள் ஒவ்வொன்றிலும் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

*நிதித்தொழில் இல்லாதொழிந்தமைபற்றிச் சபைக்கு அறிவிப்பதற்கு நிதிக்கம்பெனிக்குள்ள கடமை.*

**9**. (1) இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் நிதிக் கம்பெனி நிதித்தொழிலைக் கொண்டுநடாத்தாதொழிந்துள்ள விடத்து, அத்தகைய இல்லாதொழிதல்பற்றிய அறிவித்தல், அத்தகைய இல்லாதொழிதலின்மேல் அத்தகைய கம்பெனியினால் சபைக்கு உடனடியாகக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் இல்லாதொழிதல் பற்றிய அறிவித்தலைப் பெற்றதன்மேல், சபையானது, நிதிக்கம்பெனியின் நிதித்தொழிலை ஒடுக்குவதற்கான அல்லது உரிமை துறப்பதற்கான அல்லது நிதிக்கம்பெனியின் வைப்புப்பொறுப்புக்களைச் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் கொடுத்துத்தீர்ப்பதற்கான பணிப்புகளையும், அவற்றின் இடைநேர்விளைவான அத்தகைய வேறு பணிப்புகளையும் அத்தகைய நிதிக்கம்பெனிக்கு வழங்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் நிதிக்கம்பெனி நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துவதில்லையென நம்புவதற்குச் சபைக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, நிதித்தொழிலை அது கொண்டுநடாத்தாதொழியவில்லை

யென்பதற்கான எண்பிப்பைப் பதிவஞ்சல்மூலமான அறிவித்த லொன்றின் தேதியிலிருந்து இருவாரங்களினுள் கொடுத்துதவும் படி அத்தகைய கம்பெனியைத் தேவைப்படுத்தி, அத்தகைய அறிவித்தலை அத்தகைய கம்பெனிக்குச் சபையானது அனுப்ப லாம். அத்தகைய அறிவித்தற்றேதியிலிருந்து இருவாரங்கள் முடிவுற்றபின்னர் அல்லது கம்பெனியானது எண்பிப்பைக் கொடுத்துதவும்பட்சத்தில் அத்தகைய எண்பிப்பைக் கவனத்துட் கொண்டபின்னர், சபையானது அத்தகைய அறிவித்தலை மீளப்பெறலாம் அல்லது நிதிக்கம்பெனியின் நிதித்தொழிலை ஒடுக்குவதற்கான அல்லது உரிமைதுறப்பதற்கான அல்லது நிதிக்கம்பெனியின் வைப்புப் பொறுப்புக்களைச் சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் கொடுத் துத்தீர்ப்பதற்கான பணிப்புகளையும், அவற்றின் இடைநேர்விளை வான அத்தகைய வேறு பணிப்புகளையும் அத்தகைய நிதிக்கம் பெனிக்கு வழங்கலாம்.

(4) நிதிக்கம்பெனியொன்று, சபையினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, (அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவதற்கு நிதிக் கம்பெனியினால் எடுக்கப்பட்ட நடபடிகளைக் கவனத்துட் கொண்டு அத்தகைய காலப்பகுதி விதிவிலக்கான சூழ்நிலைகளில் சபையினால் நீடிக்கப்படலாம்) சபையானது, நிதிக்கம்பெனியை ஒடுக்குவதற்கான வழக்கைக் கோப்பிடும்படி பணிப்பாளரைத் தேவைப்படுத்தலாமென்பதுடன், 32ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அதற்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

“நிதி” என்னும் சொல்லின் பயன்பாடு.

**10.** (1) நிதிக்கம்பெனியொன்று, அதன் பெயரின் பாகமாக, “நிதி”, “நிதியளித்தல்” அல்லது “நிதிசார்” என்னும் சொல்லை அல்லது அதன் உருப்பெயர்ப்புகளுள் எவற்றையும் அல்லது வேறேதேனும் மொழியில் அவற்றுக்குச் சமமானதைக் கொண்டிருத்தல் வேண்டும். “நிதி”, “நிதியளித்தல்” அல்லது “நிதிசார்” என்னும் சொல்லை அதன் பெயரில் அல்லது அதன் உருப்பெயர்ப்புகளுள் எவற்றையும் அல்லது வேறேதேனும் மொழியில் அவற்றுக்குச் சமமானதை அதன் பெயரில் கொண்டி

ராத ஏதேனும் நிதிக்கம்பெனி, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள், ''நிதி'', ''நிதியளித்தல்'' அல்லது ''நிதிசார்'' என்னும் சொல்லை அல்லது அதன் உருப்பெயர்ப்புகளுள் எவற்றையும் அல்லது வேறேதேனும் மொழி யில் அவற்றுக்குச் சமமானதை அதன் பெயரில் உள்ளடக்கும் வகையில் அதன் பெயரை மாற்றுவதற்கு அவசியமானவாறான அத்தகைய நடபடிகளை உடனடியாக எடுத்தல் வேண்டும்.

(2) நிதிக்கம்பெனியொன்றும் (6) ஆம் உட்பிரிவிற் குறித் துரைக்கப்பட்ட நிறுவனமொன்றும் தவிர்ந்த வேறு ஆளெவரும், சபையின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடனன்றி, ''நிதி'', ''நிதியளித்தல்'' அல்லது ''நிதிசார்'' என்னும் சொல்லை, அத்தகைய ஆளினது பெயரின் அல்லது விவரணத்தின் அல்லது வியாபாரப் பெயரின் பாகமாகத், தனியாகவோ அல்லது இன் னொரு சொல்லுடன் அல்லது அதன் வழிச்சொற்களுள் அல்லது உருப்பெயர்ப்புகளுள் எவற்றுடனும் அல்லது வேறேதேனும் மொழியில் அவற்றுக்குச் சமமானதுடன் சேர்த்தோ, பயன்படுத்து தலாகாது.

(3) ஓராம் மற்றும் (6)ஆம் உட்பிரிவுகளுக்கமைய, எவரேனும் ஆளினது பெயரின் அல்லது விவரணத்தின் அல்லது வியாபாரப் பெயரின் பாகமாக, ''நிதி'', ''நிதியளித்தல்'' அல்லது ''நிதிசார்'' என்னும் சொல்லை அல்லது அதன் வழிச்சொற்களுள் அல்லது உருப்பெயர்ப்புகளுள் எவற்றையும், அல்லது வேறேதேனும் மொழியில் அவற்றுக்குச் சமமானதைப் பயன்படுத்துகின்ற அத்தகைய ஆள், அவர் சபையின் எழுத்திலான அங்கீகாரத்தைப் பெற்றிருந்தாலொழிய, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஆறுமாதங்களினுள், அத்தகைய பெயரிலிருந்து அல்லது அத்தகைய விவரணத்திலிருந்து அல்லது அத்தகைய வியாபாரப் பெயரிலிருந்து ''நிதி'', ''நிதியளித்தல்'' அல்லது ''நிதிசார்'' என்னும் சொல்லை அல்லது அதன் வழிச்சொற்களுள் அல்லது அதன் உருப்பெயர்ப்புகளுள் எவற்றையும், அல்லது வேறேதேனும் மொழியில் அவற்றுக்குச் சமமானதை நீக்கிவிடுவதன்மூலம், அத்தகைய பெயரை அல்லது அத்தகைய விவரணத்தை அல்லது அத்தகைய வியாபாரப்பெயரை மாற்று தல் வேண்டும்.

(4) பணிப்பாளர், கம்பெனிகள் பதிவாளர் தலைமையதி பதியை, தன்னிச்சையான சமூக சேவை ஒழுங்கமைப்புகளின் பதிவாளரை, இலங்கையின் வியாபாரப் பெயர்கள் பதிவாளர் களை மற்றும் வேறேதேனும் இயைபான அதிகாரசபையை, அத்தகைய அதிகாரசபையின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட அத்தகைய குழுக்களின் பெயரில் அல்லது விவரணத்தில் அல்லது வியாபாரப் பெயரில் ''நிதி'', ''நிதியளித்தல்'' அல்லது ''நிதிசார்'' என்னும் சொல்லை அல்லது அதன் வழிச்சொற்களுள் அல்லது உருப்பெயர்ப்புகளுள் எவற்றையும் அல்லது வேறேதேனும் மொழியில் அவற்றுக்குச் சமமானதைப் பயன்படுத்துகின்ற கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுக்கள்பற்றிய தகவலைக் கொடுத் துதவும்படி தேவைப்படுத்தலாமென்பதுடன், அத்தகைய பதிவாளர் அல்லது அதிகாரசபை, பணிப்பாளரினால் தேவைப் படுத்தப்பட்டவாறான தகவலைக் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(5) சபையானது, பொதுமக்களின் நலன்கருதி, இப்பிரிவின் ஏற்பாடுகளை மீறியும், அத்தகைய மீறுகைதொடர்பில் இச்சட்டத் தின் வேறேதேனும் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது அல்லது எடுக்கப்படவுள்ளது என்பது எவ்வாறிருப்பினும், எவரேனுமாள், அத்தகைய ஆளினது பெயரின் அல்லது விவரணத்தின் அல்லது வியாபாரப் பெயரின் பாகமாக ''நிதி'', ''நிதியளித்தல்'' அல்லது ''நிதிசார்'' என்னும் சொல்லை அல்லது அதன் வழிச்சொற்களுள் அல்லது அதன் உருப்பெயர்ப்புகளுள் எவற்றையும், அல்லது வேறேதேனும் மொழியில் அவற்றுக்குச் சமமானதைப் பயன்படுத்துமிடத்து, பின்வருவனவற்றை எத்தகையனவுமான வழிவகைகள்மூலமும் பிரசித்தஞ்செய்யலாம்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட ஆட்கள் குழுவொன்றின் விடயத்தில், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பெயரும், விவரணமும், முகவரியும், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர்களினது பெயர்களும் முகவரிகளும்;

(ஆ) கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவின் விடயத்தில், அத்தகைய குழுவின் பெயரும், விவரணமும், முகவரியும், சபை தகுதியானதென எண்ணினால், அத்தகைய குழுவுறுப்பினர்களின் பெயர்களும் முகவரிகளும்; அத்துடன்

(இ) தனியாளொருவரின் விடயத்தில், அத்தகைய தனியாளின் பெயரும் முகவரியும் அவரது விவரணமும் அல்லது வியாபாரப் பெயரும் அல்லது அவரது விவரணம், வியாபாரப் பெயர் ஆகிய இரண்டும்; அத்துடன்

அத்தகைய ஆளுக்கு, ''நிதி'', ''நிதியளித்தல்'' மற்றும் ''நிதிசார்'' என்னும் சொற்களை அல்லது அவற்றின் வழிச் சொற்களுள் அல்லது உருப்பெயர்ப்புகளுள் எவற்றையும் அல்லது வேறேதேனும் மொழியில் அவற்றுக்குச் சமமானதை, அத்தகைய ஆளினது பெயரின் அல்லது விவரணத்தின் அல்லது வியாபாரப் பெயரின் பாகமாகப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்படவில்லையென்றும்.

(6) இப்பிரிவிலுள்ளதெதுவும் -

(அ) ''நிதி'', ''நிதியளித்தல்'' அல்லது ''நிதிசார்'' என்னும் சொல்லை அல்லது அதன் உருப்பெயர்ப்புகளை அதன் பெயரின் பாகமாக அல்லது வேறேதேனும் மொழியில் அதற்குச் சமமானதை அதன் பெயரில் கொண்டிருப்பதற்கு எந்தக் கம்பெனி சபையினால் தேவைப் படுத்தப்படுகின்றதோ அந்தக் கம்பெனியொன்றுக்கும்;

(ஆ) நிதிக்கம்பெனிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்ட அவற்றின் கழகமொன்றுக்கும்;

(இ) (138 ஆம் அத்தியாயமான) தொழிற்சங்கங்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டதும், ஒரு நிதிக்கம்பெனியின் ஊழியர்களாகவுள்ள வேலையாளர்களின் கழகம் அல்லது சேர்க்கை ஒன்றாகவுள்ளதுமான தொழிற்சங்கமொன்றுக்கும் ;

(ஈ) எந்நிறுவனம் தொடர்பில் அத்தகைய வழக்காறு சட்டத்தினால் அல்லது சர்வதேச உடன்படிக்கையினால் தாபிக்கப்படுகின்றதோ அல்லது ஏற்றங்கீகரிக்கப்படுகின்றதோ அந்நிறுவனமொன்றுக்கும்; அத்துடன்

(உ) கல்வி அல்லது ஆலோசனைச் சேவைகளைப் புறநீங்கலாக வழங்குகின்ற கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுக்கும்,

ஏற்புடையதாதலாகாது.

(7) ஒவ்வொரு நிதிக்கம்பெனியினாலும் பயன்படுத்தப்படுவதற்கான குறிவொன்றை அல்லது குறியொன்றைச் சபையானது அறிமுகப்படுத்தலாம். நிதிக்கம்பெனியொன்று தவிர்ந்த வேறு ஆளெவரும் அத்தகைய குறிவைப் பயன்படுத்துதலாகாது.

ஒரு நிதிக் கம்பெனியின் சுருக்கப் பெயரை அல்லது தலைப் பெழுத்துச் சொல்லைப் பயன் படுத்துவதன் மீதான மட்டுப்பாடு.

**11.** (1) கம்பெனி, உரிமையாண்மை, பங்காண்மை அல்லது வேறு உருவகம் எதுவும், பணிப்பாளரின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, ஏதேனும் நிதிக்கம்பெனியின் சுருக்கப்பெயரை அல்லது தலைப்பெழுத்துச் சொல்லை அதன் பாகமாகக் கொண்டுள்ள பெயருடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுதலாகாது:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள், 2007ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 7ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பாதிக்கக்கூடிய அத்தகைய முறையில் பொருள் கொள்ளப்படுதலாகாது.

(2) அந்தந்த நிதிக்கம்பெனிதவிர்ந்த ஆளெவரும், பணிப்பாளரின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, அதன் தொழிலை மேம்படுத்துகின்ற அதன் விளம்பரங்களுள் எவற்றிலும் ஒரு நிதிக்கம்பெனியின் பெயரை, சுருக்கப்பெயரை அல்லது தலைப்பெழுத்துச் சொல்லைப் பயன்படுத்துதலாகாது.

## பாகம் II

### நிதிக்கம்பெனிகளின்மீதான பணிப்புகள், விதிகள் மற்றும் தேவைப்பாடுகள்

சபையின் பணிப்புகள்.

**12.** (1) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நிதிக்கம்பெனிகளின் அல்லது ஏதேனும் தொகுதியினவான அல்லது வகுதியினவான நிதிக்கம்பெனிகளின் தொழில் மற்றும் கூட்டிணைப்பு அலுவல்களின் ஏதேனும் அம்சம் எம்முறையில் நடாத்தப்பட வேண்டுமோ அம்முறை தொடர்பாகவும், குறிப்பாக-

(அ) அத்தகைய கம்பெனிகளினால் எந்நியதி நிபந்தனைகளின்கீழ் வைப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படலாமோ அந்நியதிநிபந்தனைகளும், அத்தகைய வைப்புக்களின் மீது செலுத்தப்படற்பாலனவான ஆகக்கூடிய வட்டி வீதங்களும், எந்த ஆகக்கூடிய காலப்பகுதிக்கு வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படலாமோ அந்த ஆகக்கூடிய காலப்பகுதியும் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கணக்குகளில் ஓராளின் பெயரில் ஒரு கம்பெனியில் வைப்பீடு செய்யப்படக்கூடிய ஆகக்கூடிய தொகையும்;

(ஆ) எந்த நியதிநிபந்தனைகளின்கீழ் ஏதேனும் கடன், கடன்வசதி அல்லது ஏதேனும் வகையினதான நிதிவசதி அத்தகைய கம்பெனிகளினால் வழங்கப்படலாமோ அந்த நியதிநிபந்தனைகளும், அத்தகைய கடன்கள், கடன்வசதிகள் அல்லது வேறுவகையினவான நிதிவசதிகள் என்பனமீது இறுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வட்டி வீதங்களும் மற்றும் அத்தகைய ஏதேனும் கடன், கடன்வசதி அல்லது வேறு வகையினதான நிதிவசதி எந்த ஆகக்கூடிய காலப்பகுதிகளுக்காக வழங்கப்படலாமோ அந்த ஆகக்கூடிய காலப்பகுதிகளும்;

(இ) தரகுகள், கழிப்பனவுகள், கட்டணங்கள் அல்லது எத்தகையனவுமான வேறு பெறுகைகள் அல்லது கொடுப்பனவுகள் என்ற வகையாக அத்தகைய கம்பெனிகளுக்குச் செலுத்தப்படக்கூடிய, அல்லது அவற்றினால் இறுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வீதங்களும்;

(ஈ) அத்தகைய கம்பெனிகளினால் எந்நியதி நிபந்தனைகளின்கீழ் முதலீடுகள் செய்யப்படலாமோ அந்நியதி நிபந்தனைகளும்;

(உ) அத்தகைய கம்பெனிகளினால் வழங்கப்பட்ட கடன்கள், கடன்வசதிகள் அல்லது வேறு வகையினவான நிதிவசதிகள் மற்றும் செய்யப்பட்ட முதலீடுகள் என்பவற்றுக்கான ஆகக்கூடிய அனுமதிக்கத்தக்க முதிர்வுகளும், பல்வேறு வகையினவான கடன் கொடுத்தல், கடன் வழங்குதல் மற்றும் முதலீட்டுத் தொழிற்பாடுகள் என்பவற்றுக்குத் தேவைப்படக் கூடிய அல்லது அனுமதிக்கப்படக்கூடிய பிணைப் பொறுப்பின் தன்மையும் தொகையும்;

(ஊ) கணக்குப் புத்தகங்கள் அல்லது வேறு பதிவேடுகள் அல்லது ஆவணங்கள் எப்படிவத்திலும் எம்முறையிலும் அத்தகைய கம்பெனிகளினால் பேணப்பட வேண்டுமோ அப்படிவமும் அம்முறையும்;

(எ) வழங்கப்பட்ட கடன்கள் காலங்கடந்தனவாக வந்திருப்பின், அத்தகைய கடன்கள் தொடர்பில் செலுத்தப்படாத வட்டியை முழுமையாக அல்லது பகுதியளவில் அத்தகைய கம்பெனிகளின் வருமானத்திலிருந்து தவிர்த்தலும்;

(ஏ) அத்தகைய கம்பெனிகளின் திரவச் சொத்துக்கள், அத்தகைய கம்பெனிகளின் மொத்த வைப்புப் பொறுப்புக்களுக்கு எந்த ஆகக்குறைந்த விகிதத்தைக் கொண்டிருக்கவேண்டுமோ அந்த ஆகக்குறைந்த விகிதமும்;

(ஐ) சபையினால் அவ்வாறு தேவைப்படுத்தப்படின், மத்திய வங்கியில் நிதிக்கம்பெனிகளினால் காசுமீதிகள் பேணப்படுதலும், அத்தகைய காசுமீதிகள் நிதிக் கம்பெனிகளின் வைப்புப் பொறுப்புக்களுக்கு எந்த ஆகக்குறைந்த விகிதத்தைக் கொண்டிருக்க வேண்டுமோ அந்த ஆகக்குறைந்த விகிதமும்;

(ஒ) முதிர்வடையுமுன்னர் வைப்புக்களின் வைப்பீட்டாளர் களினால் மீளப் பெறப்படுவதற்கு ஏற்புடையற்பால னவாகவேண்டிய நிபந்தனைகளும்;

(ஓ) அத்தகைய கம்பெனிகள் அவர்களின் கடன்கள், கடன் வசதிகள், வேறுவகையினவான நிதி வசதிகள் அல்லது முதலீடுகள் என்பவற்றின் தொகையை அதிகரிப்பத னைத் தடைசெய்தலும்;

(ஔ) அத்தகைய கம்பெனிகளினால் வழங்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட எவையேனும் கடன்களின், முதலீடுகளின் அல்லது நிதிவசதி களின் தொகை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிகளினுள் எந்த வீதத்தில் அதிகரிக்கப்பட லாமோ அந்த வீதத்துக்கான வரையறைகளை நிர்ண யித்தலும்;

(க) அத்தகைய கம்பெனிகளின் கடன்கள், முதலீடுகள் அல்லது நிதிவசதிகள் என்பவற்றின் தொகையை, குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதியினுள் குறித் துரைக்கப்பட்ட வரையறைகளுக்குக் குறைக்கும்படி அவர்களைத் தேவைப்படுத்துதலும்;

(ங) (i) ஒரு கம்பெனியினால், கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அல்லது தனியாளினால்; அத்துடன்

(ii) (அ) ஒரு கம்பெனியினால் மற்றும் பின்வருவன வற்றுள் ஒன்றினால் அல்லது அதற்கு மேற் பட்டதினால் :-

(அஅ) அதன் துணைநிலைக் கம்பெனிக ளினால்;

(ஆஆ) அதன் வைத்திருக்கைக் கம்பெனியி னால்;

(இஇ) அதன் வைத்திருக்கைக் கம்பெனி யின் துணை நிலைக்கம்பெனி யினால்; அல்லது

(ஈஈ) அத்தகைய கம்பெனி அல்லது அதன் துணைநிலைக் கம்பெனி அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனி, அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனி எந்தக் கம்பெனியில் கணிசமானளவிலான அக்கறையைக் கொண்டுள்ளதோ அந்தக் கம்பெனியினால் ; அல்லது

(ஆ) தனியாளொருவரினால் மற்றும் பின்வருவோரில் ஒருவரினால் அல்லது அதற்கு மேற்பட்டோரினால் அல்லது பின்வருவனவற்றுள் ஒன்றினால் அல்லது அதற்கு மேற்பட்டதினால் :-

(அஅ) அவரது உறவினரினால்;

(ஆஆ) அவர் எந்தக் கம்பெனியில் கணிசமானளவிலான அக்கறையைக் கொண்டுள்ளாரோ அல்லது அவரது உறவினர் எந்தக் கம்பெனியில் கணிசமானளவிலான அக்கறையைக் கொண்டுள்ளாரோ அந்தக் கம்பெனியினால்;

(இஇ) அத்தகைய கம்பெனியின் துணைநிலைக் கம்பெனியினால்;

(ஈஈ) அத்தகைய கம்பெனியின் வைத்திருக்கைக் கம்பெனியினால்;

(உஉ) அத்தகைய கம்பெனியின் வைத்திருக்கைக் கம்பெனியினது துணைநிலைக் கம்பெனியினால்;

(ஊஊ) அத்தகைய கம்பெனி அல்லது அதன் துணைநிலைக்கம்பெனி அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனி அல்லது அதன் வைத்திருக்கைக் கம்பெனியின் துணைநிலைக் கம்பெனி எந்தக் கம்பெனியில் கணிசமானளவி லான அக்கறையைக் கொண்டுள் ளதோ அந்தக் கம்பெனியினால் ; அல்லது

(எஎ) அத்தகைய தனியாள் அல்லது அவரது உறவினர், கம்பெனி யொன்று தவிர்ந்த எந்தக் கூட்டி ணைக்கப்பட்ட குழுவில் கணிச மானளவிலான அக்கறையைக் கொண்டுள்ளாரோ அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால், அல்லது

(இ) எந்தக் கம்பெனி ஒவ்வொன்றிலும், விடயத் துக்கேற்ப, தனியாள் அல்லது கம்பெனி யொன்று, ஒன்றில் நேரடியாகவோ, நேரடியாகவல்லாமலோ அல்லது நன்மை பயக்கும் வகையில் கணிசமானளவிலான அக்கறையை அல்லது குறிப்பிடத்தக்க முகாமைத்துவ அக்கறையைக் கொண்டுள் ளாரோ அல்லது கொண்டுள்ளதோ அந்தக் கம்பெனிகளினால்,

கூட்டுமொத்தத்தில்,

வைத்திருக்கப்படக்கூடியதும், நிதிக்கம்பெனியொன்றிலுள்ளது மான பங்கு மூலதனத்தின் ஆகக்கூடிய நூற்றுவீதமும்;

(ச) பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட நிதிவசதிகள் தொடர் பில் அத்தகைய கம்பெனிகளினால் பேணப்பட வேண்டிய விளிம்புகளும் ;

(ஞ) நிதிக்கம்பெனிகளினால் கொண்டுநடாத்தப்படக் கூடிய செயற்பாடுகளின் வகைகள் மீதான மட்டுப்பாடும்;

(ட) சம்பளம், படி, மேலதிக வருவாய்கள், செலவுகளை மீளளித்தல், முடிவுகால நன்மைகள், பணிக்கொடை மற்றும் வேறு மூப்போய்வூதியக் கொடுப்பனவுகள் என்றவகையாக அத்தகைய கம்பெனிகளின் பணிப் பாளர்களுக்கு அல்லது ஊழியர்களுக்குக் கொடுப்பனவு செய்தலும்;

(ண) ஒரு நிதிக்கம்பெனியினால் பேணப்படவேண்டிய மைய மூலதனத் தொகையும்;

(த) ஒரு நிதிக்கம்பெனியின் பணிப்பாளர்கள், பிரதான நிறைவேற்றலுவலர் மற்றும் முக்கியமான முகாமைத் துவ ஆளணியினர் என்போரிடமிருந்து தேவைப்படுத் தப்பட்ட கல்வி மற்றும் உயர் தொழில்சார் தகைமை களும் அனுபவமும்;

(ந) அத்தகைய கம்பெனிகளின் பணிப்பாளர் சபையினது அமைப்பும் கூட்டநடப்பெண்ணின் அமைத்துருவாக்க மும் ;

(ப) அத்தகைய கம்பெனிகளின் பணிப்பாளர்களை நியமிப் பதற்கும், தேர்ந்தெடுப்பதற்கும் அல்லது பெயர்குறித்து நியமிப்பதற்கும் சபையின் முன்னங்கீகாரத்தைப் பெறுவதற்கான தேவைப்பாடும்;

(ம) நிதிக்கம்பெனியொன்றின் பிரதான நிறைவேற்ற லுவலரை நியமிப்பதற்குப் பணிப்பாளரின் முன்னங் கீகாரத்தைப் பெறுவதற்கான தேவைப்பாடும்;

(ய) காணியைக் கொள்வதிலும், அதற்கு விலையிடு தலிலும் அத்தகைய கம்பெனிகளினால் பின்பற்றப்பட வேண்டிய நியதிநிபந்தனைகளும் நடவடிக்கைமுறை களும்;

(ர) அத்தகைய கம்பெனிகளினால் துணைநிலை மற்றும் இணைக்கம்பெனிகள் அமைக்கப்படுதலும்;

(ல) இச்சட்டத்தின்கீழ் சபையினால் விதிக்கப்படக் கூடிய ஏதேனும் தண்டத்தின் கொடுப்பனவை உறுதிப்படுத்து வதற்குச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பெறுமதிக்காகவும் அத்தகைய நியதிகளின் மீதும் நிதிக்கம்பெனியொன்றினால் வங்கி உத்தரவாத மொன்று சமர்ப்பிக்கப்படுதலும்,

என்பவற்றுக்காகவும் சபையானது அத்தகைய நிதிக்கம்பெனிக ளுக்குப் பணிப்புகள் விடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்பொன்று, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னராயினுஞ்சரி பின்னராயினுஞ்சரி கொள்ளப்பட்ட அல்லது உறப்பட்ட நிதிக்கம்பெனியொன்றின் சொத்துக்களுள் அல்லது பொறுப்புக் களுள் எவற்றினதும் தன்மையில் அல்லது தொகையில் மாற்றமொன்றைச் செய்யும்படி அத்தகைய பணிப்பு அதனைத் தேவைப்படுத்தும் என்பது எவ்வாறிருப்பினும், பயனுடையதாதல் வேண்டும் :

ஆயின், மேலே கூறப்பட்டவாறு ஒரு மாற்றத்தைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஒரு நிதிக்கம்பெனிக்கு, அத்தகைய மாற்றத்தை அக்காலப்பகுதியினுள் செய்வதற்கென அத்தகைய பணிப்புத் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களைக் கொண்ட வொரு காலப்பகுதி, அல்லது அத்தகைய நோக்கத்துக்காகச் சபையினால் வழங்கப்படக்கூடிய அத்தகைய நீடித்த காலப்பகுதி அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (ங) என்னும் பந்தியின்கீழ் நிதிக்கம் பெனியொன்றுக்கு வழங்கப்பட்டவொரு பணிப்புக்கு இணங்கி யொழுகுவதற்கென, அது, அத்தகைய நிதிக்கம்பெனியில் பங்குகளை வைத்திருக்கும் ஆளொருவரை, அத்தகைய பங்குகள் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ அத்தகைய ஆளினால் கொள்ளப்பட்டதாயினுஞ்சரி, அத்தகைய

பணிப்பில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய ஆளினால் அத்தகைய நிதிக்கம்பெனியில் வைத்திருக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கும்படி பணிக்கலாம். அத்தகைய பணிப்புக்கு இணங்கியொழுகுதல் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(4) சபையானது, அதன் தற்றுணிபில், (1)ஆம் உட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியின்கீழ் அதற்கு வழங்கப்பட்டவொரு பணிப்பைப் பின்பற்றி, மத்திய வங்கியில் நிதிக்கம்பெனியொன்றினால் பேணப்பட்ட ஏதேனும் காசுமீதியின்மேல், சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதத்தில் வட்டி செலுத்தலாம்.

(5) சபையானது, அவசியமானவிடத்து, குறிப்பாக (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய கருமங்களின் மீது ஏதேனும் நிதிக்கம்பெனிக்குப் பணிப்புகள் விடுக்கலாம்.

(6) நிதிமுறைமையின் நிலையுறுதியை உறுதிப்படுத்துவதற்கென, சபையானது, நிதிக்கம்பெனிகளின் வைத்திருக்கைக் கம்பெனிகள், துணைநிலைக் கம்பெனிகள் மற்றும் இணைக் கம்பெனிகள் என்பவற்றின் தொழிலினது ஏதேனும் அம்சம் எம்முறையில் நடாத்தப்படவேண்டுமோ அம்முறைதொடர்பாக அத்தகைய கம்பெனிகளுக்கு பணிப்புகள் வழங்கலாம்.

பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவதனைக் கண்காணித்தல்.

**13.** சபையானது, 12 ஆம் பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதலைக் கண்காணிக்கும் முறைதொடர்பாகப் பணிப்பாளருக்கு வழிகாட்டுநெறிகளை வழங்கலாமென்பதுடன், ஒன்றில் உடனடியாக அல்லது பணிப்பாளரினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய பணிப்புகளுக்கு இணங்கியொழுகும்படி நிதிக்கம்பெனிகளைப் பணிக்குமாறும் பணிப்பாளருக்கு அதிகாரமளிக்கலாம்.

*பணிப்புகளுக்கு இணங்கியொழுகத் தவறுவதன் மீதான நடவடிக்கை.*

**14.** (1) பன்னிரெண்டாம் பிரிவின் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு இணங்கியொழுகுவதற்கு ஏதேனும் நிதிக்கம்பெனி தவறினால், பணிப்பாளர், 13ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் வழிகாட்டுநெறிகளில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய நிகழ்வைச் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் 25ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய பட்சத்தில் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் நிதிக்கம்பெனி, 13ஆம் பிரிவின்கீழ் சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளின் நியதிகளின்படி பணிப்பாளரினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுவதற்குத் தவறினால், பணிப்பாளர் அத்தகைய நிகழ்வைச் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய பட்சத்தில் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*ஆவணங்களையும் தகவலையும் சமர்ப்பிப்பதற்கான பணிப்புகள்.*

**15.** பணிப்பாளர், நிதிக்கம்பெனியொன்றின் தொழில் மற்றும் கூட்டிணைப்பு அலுவல்கள் எம்முறையில் நடாத்தப்படுகின்றனவென நிச்சயிக்கும் நோக்குடன் அல்லது அத்தகைய வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்துக்காக, அத்தகைய பணிப்பில் குறித்துரைக்கப்படவேண்டிய முறையிலும், அத்தகைய படிவத்திலும், அத்தகைய கால இடைவெளிகளிலும் அல்லது அத்தகைய நேரங்களிலும் ஆவணங்களையும் தகவலையும் சமர்ப்பிக்குமாறு ஏதேனும் நிதிக்கம்பெனியைப் பணிக்கலாம்.

*விதிகள்.*

**16.** (1) இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது விதித்துரைக்கப்படவேண்டுமெனக் கூறப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் கருமத்தின்மீது சபையானது விதிகளை ஆக்கலாம்.

(2) குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும், சபையானது பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவைதொடர்பிலும் விதிகளை ஆக்கலாம் :-

(அ) நிதிக்கம்பெனிகளுக்கு உரிமமளித்தலும் நிதிக் கம்பெனிகளினால் சபைக்குச் செலுத்தப்படற்பாலனவான வருடாந்த உரிமக்கட்டணங்களும்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பயன்படுத்தப்படவேண்டிய படிவங்கள்;

(இ) நிதித்தொழிலின் ஏதேனும் அம்சம்தொடர்பான ஏதேனும் விவரமஞ்சரியை அல்லது விளம்பரத்தை ஏதேனும் நிதிக்கம்பெனி வழங்குவதனை ஒழுங்குபடுத்துதலும் அல்லது தடைசெய்தலும், அத்தகைய ஏதேனும் விவரமஞ்சரி அல்லது விளம்பரம் எந்நிபந்தனைகளுக்கமைய வழங்கப்படலாமோ அந்நிபந்தனைகளும்.

**17.** (1) சபையானது, காலத்துக்குக்காலம், இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்படுவதற்காகக் கம்பெனியொன்று வைத்திருக்க வேண்டிய ஆகக்குறைந்த மைய மூலதனத்தொகையைத் தீர்மானிக்கலாம்; ஆயின், எவ்வாறாயினும், சபையினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய தொகை இருநூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையவிருத்தலாகாது. மைய மூலதனம்.

(2) நிதிக்கம்பெனியொன்று, எல்லா நேரங்களிலும், நிதிக் கம்பெனியொன்றாக உரிமமளிக்கப்பட்ட நேரத்தில் அது வைத்திருந்த தொகைக்குக் குறையாதவொரு மட்டத்தில் அதன் மைய மூலதனத்தைப் பேணுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் நியதிகளின்படி மைய மூலதனத்தின் கூடுதலான தொகையை அல்லது ஒரு நிதிக்கம்பெனியின் சொத்துக்களும் அல்லது பொறுப்புக்களும் தொடர்பாக மைய மூலதனப் பேணுகையை விதிக்கின்ற பணிப்பொன்றைச் சபை வழங்கியுள்ள பட்சத்தில், நிதிக்கம்பெனியொன்று அத்தகைய பணிப்புக்கிசைந்தொழுக அதன் மைய மூலதனத்தைப் பேணுதல் வேண்டும்.

**18.** (1) நிதிக்கம்பெனியொன்று, எல்லா நேரங்களிலும், ஒதுக்கு நிதியமொன்றைப் பேணுதல் வேண்டும். ஒவ்வொரு நிதிக்கம்பெனியும் ஒவ்வோர் ஆண்டு தொடர்பிலும் ஒதுக்கு நிதியம்.

வரிசெலுத்தியபின்னர், ஆனால் ஏதேனும் பங்கிலாபம் வெளிப்படுத்தப்படுமுன்னர், சபை பணிக்கக் கூடியவாறாக அதன் தேறிய இலாபத்தின் அத்தகைய பாகத்தை ஒதுக்கு நிதியத்துக்குக் கைமாற்றுதல் வேண்டும்.

(2) நிதிக்கம்பெனியொன்று, சபையின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி, அதன் மூலதனத்தை அல்லது அதன் ஒதுக்கு நிதியத்திலிருக்கின்றவாறான அத்தகைய தொகையைக் குறைத்தலோ அல்லது ஊறுபடுத்துதலோ ஆகாது.

நிதிக்கம்பெனிகளினால் தொழில் கொண்டு நடாத்தப் படுதல்.

**19.** நிதிக்கம்பெனியொன்று, எல்லா நேரங்களிலும், அதன் வைப்பீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையிலான அத்தகைய முறையில் அதன் தொழிலைக் கொண்டுநடாத்துதல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்ப, வைப்புக்களை அல்லது அவற்றின்மீதான வட்டியை வைப்பீட்டாளர்களுக்கு உரிய தேதிகளில் மீளச்செலுத்துவதற்கு அல்லது செலுத்துவதற்கு நியாயமானமுறையில் அவசியமானவாறான அத்தகைய எல்லா வழிமுறைகளையும் எடுத்தலும் வேண்டும்.

வைப்பை மீளச் செலுத்து வதற்கு அல்லது வட்டி செலுத்து வதற்குத் தவறுதல் தவறொன்றாதல்.

**20.** (1) ஏதேனும் நிதிக்கம்பெனி, வைப்பீட்டாளரொருவருக்குக் கோரிக்கையின்மீது அல்லது வைப்பிடப்பட்ட நேரத்தில் முதிர்வுத் தேதிபற்றி உடன்பட்டிருப்பின், அத்தகைய முதிர்வுத் தேதியன்று அல்லது அதன்பின்னர் வைப்பொன்றை மீளச்செலுத்துவதற்குத் தவறுமிடத்து அல்லது அதன்மீதான வட்டியைச் செலுத்து வதற்குத் தவறுமிடத்து, அத்தகைய கம்பெனியின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும் அல்லது செயலாளரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் எவரும், அத்தகைய தவறு தாம் அறியாமல் புரியப்பட்டதெனவும் அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரெனவும் எண்பித்தால், தவறொன்றுக்குக் குற்றவாளியாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி எந்த வைப்பீட்டாளரின் வைப்பும் வட்டியும் கோரிக்கையின்மீது அல்லது முதிர்வின்மேல் செலுத்தப்பட்டிருக்கவில்லையோ அந்த

எவரேனும் வைப்பீட்டாளர், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136ஆம் பிரிவின் நியதிகளின்படி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்கலாம்.

நிதிக்கம்பெனிகளில் குறித்த சில பதவிகளை வகிப்பதற்கெதிரான தகைமையீனங்கள்.

**21.** (1) ஆளொருவர் பின்வருமாறிருப்பின், அத்தகைய ஆள், நிதிக்கம்பெனியொன்றின், விடயத்துக்கேற்ப, பணிப்பாளரொருவராக, பிரதான நிறைவேற்றலுவலராக, செயலாளராக அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியினராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது அத்தகைய பதவியை வகிப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்:-

(அ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால், பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்கவகையற்றவராக அல்லது வங்கி முறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டிருப்பின்;

(ஆ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றுக்காக ஏதேனும் நீதிமன்றத்தில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(இ) இச்சட்டத்தின்கீழான அல்லது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்காக ஏதேனும் சட்ட நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஈ) இச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின்கீழ் எவ்வாளுக்கெதிராகச் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் ஒருவராகவிருப்பின்;

(உ) (i) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள பொலிசாரினால், ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால், உயர்தொழிற்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாயசபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட

வேறேதேனும் குழுவினால், மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியற் செயற்பாடு தொடர்பில் ஏதேனும் புலனாய்வுக்கு அல்லது விசாரணைக்கு உட்படுத்தப்படின் ;

(ii) அவ்வாறு நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நேர்முன்னரான கடந்த பதினைந்து ஆண்டுகளின்போது, மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியற் செயற்பாடு என்பன தொடர்பில் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால், உயர்தொழிற்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக் குழுவினால், நியாயசபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் குழுவினால் குற்றவாளியெனக் காணப்பட்டிருப்பின் ;

(ஊ) (i) ஒரு மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியற் செயற்பாடு என்பவற்றை உட்படுத்துகின்ற தவறொன்றுக்காக நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளுக்கு அமைந்தவராகவிருப்பின்;

(ii) அவ்வாறு நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நேர்முன்னரான கடந்த பதினைந்து ஆண்டுகளின்போது ஒரு மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியற் செயற்பாடு என்பவற்றை உட்படுத்துகின்ற தவறொன்றுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(எ) இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள ஏதேனும் வங்கியில், நிதிக்கம்பெனியில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவில் பணிப்பாளரொருவராக, பிரதான

நிறைவேற்றலுவலராக அல்லது வேறு அலுவலராகச் செயலாற்றுவதிலிருந்து ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அகற்றப் பட்டிருப்பின் அல்லது இடைநிறுத்தப்பட்டிருப்பின்;

(ஏ) சித்தசுவாதீனமற்றவரெனத் தகுதிவாய்ந்த நியாயாதிக் கங்கொண்ட நீதிமன்றமொன்றினால் வெளிப்படுத்தப் பட்டிருப்பின்;

(ஐ) எந்த வங்கியின், நிதிக்கம்பெனியின் அல்லது நிதிநிறுவனத்தின் உரிமம் அல்லது பதிவு இடைநிறுத்தப் பட்டுள்ளதோ அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் வங்கியில், நிதிக்கம்பெனியில் அல்லது நிதிநிறுவனத்தில் பணிப்பாளரொருவராக அல்லது பிரதான நிறைவேற்றலுவலராக இருந்திருப்பின் அல்லது வேறேதேனும் அதிகாரங்கொண்ட பதவியை வகித்திருப்பின்;

(ஒ) (i) (அ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை மீறி அல்லது

(ஆ) 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டத்தின் (அது நீக்கப்படுமுன்னர்) 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை மீறி,

நிதித்தொழிலைக் கொண்டு நடாத்தியுள்ளாரென; அல்லது

(ii) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை மீறி வைப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளாரென,

சபையினால் தீர்மானிக்கப்பட்டிருப்பின் ; அல்லது

(ஓ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவை அல்லது 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டத்தின் (அது நீக்கப்படுமுன்னர்)

2 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவை மீறி நிதித்தொழிலைக் கொண்டு நடாத்தியுள்ளதென அல்லது இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவை மீறி வைப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளதெனச் சபை தீர்மானித்துள்ள ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவில் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவில் பணிப்பாளரொருவராக அல்லது பிரதான நிறைவேற்றலுவராக இருந்திருப்பின் அல்லது வேறேதேனும் அதிகாரங் கொண்ட பதவியை வகித்திருப்பின்.

(2) ஓராம் உட்பிரிவிற்றரப்பட்டுள்ள ஏதேனும் தகைமையீனத்திற்குட்பட்டிருக்கையில், பணிப்பாளரொருவராக, பிரதான நிறைவேற்றலுவலராக, செயலாளராக அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியினராகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்துதல்.

**22.** (1) பணிப்பாளரானவர், நிதிக்கம்பெனியொன்றின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது ஊழியரை, பணிப்பாளரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஒரு தேதியிலும் அத்தகைய படிவத்திலும் பணிப்பாளருக்கு அவரது சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய வெளிப்படுத்துகையைச் செய்யும்படி தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் வெளிப்படுத்துகையொன்றைத் தேவைப்படுத்துவதில், பணிப்பாளர், குறிப்பிட்டவொரு காலப் பகுதிக்காகப் பொறுப்புக்களின் அதிகரிப்பும் குறைப்பும், சொத்துக்களின் கொள்ளுகையும் கையுதிர்ப்பும் என்பன பற்றிய விபரங்களையும் தேவைப்படுத்தலாம்.

(3) இப்பிரிவின் நோக்கத்துக்காக, “சொத்துக்களும் பொறுப்புக்களும்” என்பன, இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் உள்ள சொத்துக்களும் பொறுப்புக்களும் என்று பொருளாகுமென்பதுடன், வெளிப்படுத்துநரினால் அல்லது அவரது உறவினரினால் முழுமையாக அல்லது பகுதியளவில் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தையும், வெளிப்படுத்துநர் அல்லது அவரது உறவினர் எந்த ஆதனத்தில் நன்மையபக்கும் அக்கறையைக் கொண்டுள்ளாரோ அந்த ஏதேனும் ஆதனத்தையும் உள்ளடக்கும்.

*செயலற்ற வைப்புக்களை மத்திய வங்கியிலுள்ள விசேட கணக்குக்குக் கைமாற்றுதல்.*

**23.** (1) ஒரு வைப்பின் சொந்தக்காரர் அல்லது அத்தகைய வைப்புத் தொடர்பில் சொந்தக்காரரின் செல்லுபடியான அற்றோணித் தத்துவத்தை வைத்திருப்பவர், பத்தாண்டுகளுக்குக் குறையாத காலப்பகுதியொன்றுக்கு-

(அ) ஒன்றில் வைப்பொன்றை இடுவதன்மூலம் அல்லது மீளப்பெறுவதன்மூலம் நிதிக் கம்பெனியுடன் கொடுக்கல்வாங்கல் நடாத்தியிராதவிடத்து; அத்துடன்

(ஆ) நிதிக்கம்பெனியுடன் ஏதேனும் கடிதத்தொடர்பை வைத்திராதவிடத்து,

அத்தகைய வைப்பு செயலற்ற வைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், சட்டப்படி பராயமடையும் வயதை எய்தியிராத ஆளொருவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட வைப்பொன்று தொடர்பாக, அத்தகைய வைப்புத்தொடர்பில் மேற்கூறப்பட்ட பத்தாண்டுக் காலப்பகுதி, அத்தகைய ஆள் சட்டப்படி பராயமடையும் வயதை எய்துவதன்மீது மட்டுமே தொடங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயலற்ற வைப்பை வைத்திருக்கும் ஏதேனும் நிதிக்கம்பெனி, சபையினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நேரத்திலும் வைப்பின் தன்மையைக் கூறி சபைக்கு அறிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

(3) நிதிக்கம்பெனியொன்றினால் அறிக்கையிடப்பட்ட செயலற்ற வைப்புத்தொடர்பில் அவசியமெனச் சபையானது கருதுகின்றவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கும்படி அத்தகைய நிதிக்கம்பெனியை அது பணிக்கலாம். வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய வைப்பிலுள்ள எல்லாப் பணங்களும், சபை அவ்வாறு

பணித்தால், மத்திய வங்கியிலுள்ள விசேட கணக்கொன்றுக்கு நிதிக்கம்பெனியினால் கைமாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காகச் சபையினால் பயன்படுத்தவும்படலாம்.

(4) ஒரு நிதிக்கம்பெனியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டதும், (3)ஆம் உட்பிரிவின்கீழ் அடங்காததுமான ஏதேனும் செயலற்ற வைப்பு, சபையினால் அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர், சூழ்நிலைகளில் தோதானவையெனக் கருதுகின்றவாறான அத்தகைய அறிவுறுத்துதல்களை வழங்குதலும் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள், இயைபான நிதிக்கம்பெனி, சொந்தக்காரரின் பெயரையும், அத்தகைய வைப்புத்தொடர்பான விபரங்களையும் கூறி, இலங்கையில் புழக்கத்திலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்தச் செய்தித் தாள்களில் ஆகக்குறைந்தது ஒன்றிலாவது அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வைப்புப்பற்றிய விபரங்களைக் கொண்டுள்ள அறிவித்தலொன்றை, சொந்தக்காரருக்கு, அவரது கடைசியாக அறியப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சல்மூலம் அனுப்பிவைத்தலும் வேண்டும்; ஆயின், நிதிக்கம்பெனி அதற்கான நியாயமான காரணம் காட்டுவதன்மேல், சபையானது, அத்தகைய அறிவித்தலை அஞ்சலிலிடுவதிலிருந்து நிதிக்கம்பெனிக்கு விலக்களிக்கலாம்.

(6) மத்திய வங்கியானது, எவரேனுமாள் ஏதேனும் நிதிக்கம்பெனியில் அவரது பெயரில் அல்லது அவர் எவ்வாளிடமிருந்து உரித்துப் பெறுகின்றாரோ அவ்வாளின் பெயரில் தமது வரவிற்கிருக்கும் எவையேனும் பணங்கள், எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அத்தகைய பணங்கள் தொடர்பில் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கு அல்லது மட்டுப்பாடுகளுக்கு அமைய, மத்திய வங்கியிலுள்ள விசேட கணக்கொன்றுக்குக் கைமாற்றப்பட்டுள்ளன

வெனச் சபையின் திருப்திக்கு எண்பிப்பைக் கொடுத்துதவுமிடத்து, அத்தகைய பணங்களை, ஒன்றில் காலத்துக்குக் காலம் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் மீளச் செலுத்தும் தேதிவரை அத்தகைய பணங்கள்மீது செலுத்தப் படற்பாலனவான வட்டியுடன் அல்லது சபை அவ்வாறு தீர்மானித்தால் அத்தகைய வட்டியின்றி மீளச் செலுத்துதல் வேண்டும்.

## பாகம் III

### நிதிக்கம்பெனிகளின் மீதான பரிசோதனைகளும் மேற்பார்வைரீதியிலான நடவடிக்கைகளும்

*நிதிக்கம்பெனி களைப் பரிசோதனை செய்தல்.*

**24.** (1) பணிப்பாளர் தாமாகவோ அல்லது பணிப்பாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர்மூலமாகவோ அல்லது வேறெவரேனுமாள்மூல மாகவோ ஒவ்வொரு பரிசோதனைக் காலப்பகுதியிலும் ஆகக்குறைந்தது ஒருதடவையேனும், ஒவ்வொரு நிதிக் கம்பெனியினதும் புத்தகங்களையும் கணக்குகளையும் பரிசோதனை செய்யலாமென்பதுடன், பணிப்பாளர் தகுதி யானவையெனக் கருதக்கூடியவாறாக ஏதேனும் குறித் துரைக்கப்பட்ட நிதிக்கம்பெனி தொடர்பில் அத்தகைய மேலதிகப் பரிசோதனைகளையும் செய்யலாம்; அத்துடன் அத்தகைய நோக்கத்துக்காகப் பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைச் செய்யலாம்:-

(அ) ஏதேனும் நிதிக்கம்பெனியை அல்லது ஏதேனும் நிதிக்கம்பெனியின் பணிப்பாளரொருவரை, செய லாளரை, முகாமையாளரை, ஊழியரை, கணக்காய் வாளரை, முகவரை அல்லது ஒப்பந்தகாரரை, அவர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதி யினுள்ளும் அத்தகைய முறையிலும் அல்லது படிவத் திலும் அவசியமானதென அவர் கருதுகின்றவாறான தகவலைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம்;

(ஆ) ஏதேனும் நிதிக்கம்பெனியை அல்லது ஏதேனும் நிதிக்கம்பெனியின் பணிப்பாளரை, செயலாளரை, முகாமையாளரை, ஊழியரை, கணக்காய்வாளரை, முகவரை அல்லது ஒப்பந்தகாரரை, அத்தகைய நிதிக்கம்பெனியினவாக அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பேணப்பட்ட புத்தகங்களையும், பதிவேடுகளையும், கோப்புகளையும், இடாப்புக்களையும் மற்றும் வேறு ஆவணங்களையும் சோதனைக்குக் காண்பிக்கும்படியும், அத்தகைய புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புகள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்கள் என்பவற்றின் தேவைப்படுத்தப்பட்டவாறான ஏதேனும் படிவத்திலான மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்கும்படியும் தேவைப்படுத்தலாம்;

(இ) ஏதேனும் நிதிக்கம்பெனியின் வளவுகளினுள் அல்லது களஞ்சியப்படுத்துகை இடப்பரப்பினுள் பிரவேசித்து, வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்தகைய நிதிக்கம்பெனியினவாக அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பேணப்பட்ட புத்தகங்களை, பதிவேடுகளை, கோப்புகளை, இடாப்புக்களை மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாமென்பதுடன், அத்தகைய புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புகள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்கள் என்பவற்றின் ஏதேனும் படிவத்திலான மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட அல்லது வேறுவகையான பிரதிகளையும் பெறலாம்:

ஆயின், எவ்வாறாயினும், ஒரு நிதிக் கம்பெனியினவாக அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பேணப்பட்ட புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புகள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்கள் என்பன, மேலே குறித்துரைக்கப்பட்ட இடங்கள் தவிர்ந்த வேறேதேனும் இடத்தில் வைத்திருக்

கப்படுகின்றனவெனப் பணிப்பாளர் நியாயமான தகவலைப் பெற்றால், பணிப்பாளர் அல்லது பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் அத்தகைய வேறு இடத்தினுட் பிரவேசித்து அதனைப் பரிசோதனை செய்வதற்கும், அத்தகைய புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புகள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்கள் என்பவற்றைப் பரிசோதனை செய்வதற்கும், அவசியமாயின், தேவைப்படுத்தப்பட்டவாறான ஏதேனும் படிவத்தில் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட அல்லது வேறுவகையான பிரதிகளைப் பெறுவதற்கும் தத்துவமுடையவராதல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய பிரவேசித்தலுக்கு அல்லது தேடுகையிடுதலுக்கு எதிர்ப்பு அல்லது முட்டுக்கட்டை இருக்குமென அல்லது தகவல் மறைத்து வைக்கப்படுமெனப் பணிப்பாளர் நம்பினால், தம்மை அல்லது பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளை ஆணைப்பத்திரமொன்றில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய இடத்தினுட் பிரவேசித்து அதனைத் தேடுகையிடுவதனை இயலச்செய்வதற்கு நீதிவானொருவரிடமிருந்து அத்தகைய ஆணைப்பத்திரத்தைப் பெறலாமென்பதுடன், அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பேணப்பட்ட எவையேனும் புத்தகங்களையும், பதிவேடுகளையும், கோப்புகளையும், இடாப்புக்களையும் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களையும் இயைபான தகவலைக் கொண்டுள்ள இலத்திரனியல் உபாயங்களையும் தமது கட்டுக்காப்பினுள்ளும் எடுக்கலாம். பணிப்பாளர் அத்தகைய ஏதேனும் இடத்தினுட் பிரவேசிக்கும்போது, அத்தகைய இடம் எந்தப் பொலிசு நிலையத்தின் நியாயாதிக்க இடப்பரப்பில் அமைந்துள்ளதோ அந்தப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாக வுள்ள அலுவலரின் உதவியைப் பெறலாம்.

இப்பந்தியின் நோக்கங்களுக்காக, மத்திய வங்கியின் அலுவல ரொருவராகவிராத எவரேனுமாள், அத்தகைய நிதிக்கம்பெனியின் வளவுகளினுட் பிரவேசிக்கும்போது,

பணிப்பாளருடன் அல்லது பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட மத்தியவங்கியின் அலுவலரொருவருடன் செல்லுதல் வேண்டும்;

(ஈ) ஏதேனும் நிதிக்கம்பெனியின் வைத்திருக்கைக் கம்பெனியை, ஏதேனும் துணைநிலைக் கம்பெனியை அல்லது இணைக்கம்பெனியை அல்லது ஏதேனும் நிதிக்கம்பெனியின் வைத்திருக்கைக் கம்பெனியினது ஏதேனும் துணைநிலைக்கம்பெனியை அல்லது இணைக் கம்பெனியை அல்லது பணிப்பாளரின் கருத்தில் ஏதேனும் நிதிக்கம்பெனியில் கணிசமானள விலான நிதிசார் அக்கறையை அல்லது குறிப்பிடத்தக்க முகாமைத்துவ அக்கறையைக் கொண்டுள்ள வேறேதேனும் கம்பெனியை, பணிப்பாளர் அவசியமெனக் கருதக்கூடியவாறான தகவலைக் கொடுத்துதவும் படியும், பணிப்பாளர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும், தேதியன்றும், இடத்திலும், அத்தகைய முறையிலும் அல்லது வடிவத்திலும், அத்தகைய கம்பெனியினவாக அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் படிவத்தில் பேணப்பட்ட புத்தகங்களையும், பதிவேடுகளையும், கோப்புகளையும், இடாப்புக்களையும் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களையும் சோதனைக் குக் காண்பிக்கும்படியும், தேவைப்பட்டவாறான ஏதேனும் படிவத்தில் அத்தகைய புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புகள், இடாப்புக்கள் மற்றும் வேறு ஆவணங்களின் மெய்யென்றுறுதிப் படுத்தப்பட்ட பிரதிகளை வழங்கும்படியும் தேவைப் படுத்தலாம்;

(உ) ஏதேனும் நிதிக்கம்பெனியை அல்லது ஏதேனும் நிதிக்கம்பெனியின் ஒரு பணிப்பாளரை, முகாமையாளரை, ஊழியரை, முகவரை, ஒப்பந்தகாரரை அல்லது செயலாளரை, பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளரொருவரினால் கணக்காய்வு செய்யப்படுவதற்காக, அத்தகைய நிதிக் கம்பெனியின் கணக்குகளைச் சமர்ப்பிக்கும்படியும்,

அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படியும், அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பேணப்பட்ட அத்தகைய புத்தகங்களையும், பதிவேடு களையும், கோப்புகளையும், இடாப்புக்களையும் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களையும் காண்பிக்கும்படி யும் தேவைப்படுத்தலாம்;

(ஊ) ஏதேனும் நிதிக்கம்பெனியின் எவரேனும் பணிப் பாளரிடம், பங்குதாரரிடம், செயலாளரிடம், முகாமை யாளரிடம், ஊழியரிடம், முகவரிடம், கணக்காய்வாள ரிடம் அல்லது ஒப்பந்தகாரரிடம் மற்றும் அத்தகைய நிதிக்கம்பெனியின் தொழில் அல்லது கூட்டிணைப்பு அலுவல்கள் தொடர்பான தகவலுடன் பரிச்சயமுள்ள வராக அதனை அல்லது அறிந்துள்ளவராக அல்லது அதனைத் தனதுடைமையில் வைத்திருப்பவராக இருக்கக்கூடியவரான வேறெவரேனுமாளிடம் கேள்வி கள் கேட்டு கூற்றுக்களைப் பதியலாம் அல்லது அவசியமாயின், சத்தியக்கடுதாசி என்றவகையாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு மறுமொழிகள் சமர்ப்பிக்கும்படி அவர்களைப் பணிக்கலாம் அல்லது அவசியமாயின் (17ஆம் அத்தியாயமான) சத்தியங்கள் அல்லது உறுதியுரைகள் கட்டளைச் சட்டத்துக்கிணங்கச் சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதலாம் அத்துடன் கேள்விகளைக் கேட்கச்செய்து கூற்றுக்களைப் பதியலாம் அல்லது பதியச் செய்யலாம்;

(எ) ஏதேனும் நிதிக்கம்பெனியின் தொழில் அல்லது கூட்டிணைப்பு அலுவல்கள் தொடர்பான தகவலுடன் பரிச்சயமுள்ளவராக அல்லது அதனை அறிந்துள்ள வராக அல்லது அதனை உடைமையில் வைத்திருப்ப வராக அல்லது அத்தகவலைக் கொண்டுள்ளவரெனக் காணப்படுகின்றவராக இருக்கக்கூடியவரான எவரேனு மாளிடமிருந்து எழுத்திலான அறிவித்தல்மூலம் தகவல் கோரலாமென்பதுடன், தேவைப்படின், அத்த கைய ஆளை நேர்காணலொன்றுக்கும் அழைக்கலாம்.

(2) அத்தகைய பரிசோதனையின் மீதான அறிக்கை, பரிசோதனை பூர்த்திசெய்யப்பட்டபின்னர் பணிப்பாளரினால் சபைக்குக் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.

(3) சபையானது, அத்தகைய பரிசோதனைக்கான செலவுகளை நிதிக்கம்பெனியிடமிருந்து அறவிடலாம்.

(4) இப்பிரிவின்கீழ் ஒவ்வோராளின்மீதும் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டுமென்பதுடன், -

(அ) இப்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை வழங்குவதற்கு அல்லது ஏதேனும் புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை, பொருளை அல்லது சாமானைச் சோதனைக்காகக் காண்பிப்பதற்குத் தவறுகின்றவரான;

(ஆ) ஒரு நேர்காணலுக்காக அழைக்கப்படும் போது நேரடியாக வருகைதருவதற்குத் தவறுகின்றவரான;

(இ) பொய்யான, பூர்த்தியற்ற அல்லது பிழையான அல் லது பிழைவழியுய்க்கும் தகவலை, புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை, பொருளை அல்லது சாமானை வழங்குகின்றவரான; அல்லது

(ஈ) (1)ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் பணியைப் புரிகையில் பணிப்பாளருக்கு அல்லது (1)ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாளுக்கு முட்டுக்கட்டையிடுகின்றவரான,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவில் ''பரிசோதனைக் காலப்பகுதி'' என்பது, சபையினால் அந்நோக்கத்துக்காக நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகையவொரு காலப்பகுதி என்று பொருளாகும்.

நிலையுறுதியற்ற செயல்முறைகளைக் கம்பெனி பின்பற்றுகின்றதெனப் பணிப்பாளர் அபிப்பிராயப்படும்போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை.

**25.** (1) சபையானது, பணிப்பாளரினால் 24ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கையொன்றின்மீது, நிதிக்கம்பெனியொன்று -

(i) அதன் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன்கொடுத்தோரினதும் நலனுக்குப் பங்கம் விளைவிக்கின்றவாறான நிலையுறுதியற்ற அல்லது முறையீனமான நிதிச் செயல்முறைகளைப் பின்பற்றி அதன் தொழிலைக் கொண்டுநடாத்துகின்றதெனவும் அல்லது கொண்டுநடாத்தும் சாத்தியமுடையதெனவும்;

(ii) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் விடுக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பை, விதியை, கட்டளையை அல்லது தேவைப்பாட்டை மீறியுள்ளதெனவும் அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறியுள்ளதெனவும்,

அபிப்பிராயப்படுமிடத்து, சபையானது பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைச் செய்யலாம்:-

(அ) சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுட் செலுத்தப்படற்பாலதும், ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாததுமானவொரு தண்டத்தை விதிக்கலாம்;

(ஆ) அத்தகைய ஏதேனும் செயல்முறையைப் புரியாதொழியும்படி அத்தகைய நிதிக்கம்பெனியைப் பணிக்கலாம்;

(இ) உடனடியாக அல்லது சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள், அத்தகைய நிதிக்கம்பெனி இணங்கியொழுகுவதற்குத்

தவறியுள்ள இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் விடுக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட பணிப்புக்கு, விதிக்கு, கட்டளைக்கு அல்லது தேவைப் பாட்டுக்கு இணங்கியொழுகும்படி அத்தகைய நிதிக்கம்பெனியைப் பணிக்கலாம்;

(ஈ) அத்தகைய செயல்முறையிலிருந்து அல்லது மீறுகை யிலிருந்து விளைகின்ற நிலைமைகளைச் சரிசெய்வதற்கு அவசியமான நடவடிக்கையை யெடுக்கும்படி அத்தகைய நிதிக்கம்பெனியைப் பணிக்கலாம்;

(உ) எந்த நிதிக்கம்பெனி தொடர்பாகச் சபையானது பாரிய மேற்பார்வைரீதியிலான அக்கறைகளைக் கொண்டுள்ளதோ அந்த நிதிக்கம்பெனியொன்றாக அந்நிதிக் கம்பெனியின் பெயரை வெளியிடலாம்;

(ஊ) அத்தகைய நிதிக்கம்பெனியின் தொழிலை முறையாக நடாத்துதல் தொடர்பாக அத்தகைய நிதிக்கம்பெனியின் அலுவல்களை முகாமை செய்வதற்கு ஆளொருவரை நியமிக்கலாம்;

(எ) அத்தகைய நிதிக்கம்பெனியின் அலுவல்களைக் கண்காணிப்பதற்கும் சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான உசாவெல்லைகளின்மீது அத்தகைய வேறு பணிகளைக் கொண்டுநடாத்துவதற்கும் அத்தகைய நிதிக் கம்பெனியில் அதன் பிரதிநிதியாக மத்திய வங்கியின் அலுவலரொருவரை நியமிக்கலாம்;

(ஏ) நிதிக்கம்பெனியில் அல்லது அது தொடர்பாக ஏதேனும் பணியை நிறைவேற்றுவதிலிருந்து நிதிக்கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது கட்டுப்பாட்டாளரைத் தடைசெய்யலாம்;

(ஐ) நிதிக்கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது ஊழியரை அகற்றலாம்;

(ஒ) நிதிக்கம்பெனியின் மூலதனத்தை அதிகரிப்பதற்கு ஒழுங்கேற்பாடு செய்வதன் மூலம் அல்லது அதன் பணிப்பாளர் சபையை மீளவமைப்பதன் மூலம் அல்லது அத்தகைய இரு வழிமுறைகளையும் எடுப்பதன் மூலம் அதனை மீள ஒழுங்குபடுத்தலாம்;

(ஓ) எவரேனுமாளினால் நிதிக்கம்பெனியில் வைத்திருக்கப் பட்ட பங்குகளின் எண்ணிக்கையைக் குறைக்கும்படி தேவைப்படுத்தலாம்;

(ஔ) நிதிக்கம்பெனியை வேறொரு நிதிக் கம்பெனியின் அல்லது வேறேதேனும் நிறுவனத்தின் சம்மதத்தோடு அத்தகைய வேறு நிதிக்கம்பெனியுடன் அல்லது நிறுவனத்துடன் இணைப்பதற்கு அவசியமானவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளுக்காக ஏற்பாடு செய்யலாம்;

(க) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நிதிக்கம்பெனியுடன் வைப்பீட்டாள ரொருவரினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்யலாமென்பதுடன், அத்தகைய ஒப்பந்தம் நிதிக்கம்பெனியின் வைப்பீட் டாளர்களின் அல்லது வேறு கடன்கொடுத்தோரின் நலன்களுக்கு உரிய கவனஞ்செலுத்தாமல் அல்லது விவேகமான வர்த்தகச் செயல்முறைக்கு உரிய கவனஞ் செலுத்தாமல் செய்துகொள்ளப்பட்டுள்ளதென அது கருதுமிடத்து, மீளச்செலுத்துதல், வட்டிவீதங்கள் மற்றும் இறுப்பனவுகள் என்பன தொடர்பான நியதிகளுட்பட, அத்தகைய ஒப்பந்தத்தின் நியதிகளையும் வேறுபடுத்தலாம்;

(ங) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எவரேனுமாளுடன் நிதிக் கம்பெனி யினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக் கையை அல்லது ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்யலா மென்பதுடன், அத்தகைய பரிசீலனையின்மேல்

நிதிக்கம்பெனியின் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன்கொடுத்தோரினதும் நலனுக்கு உரிய கவனஞ் செலுத்தாமல் அல்லது விவேகமான வர்த்தகச் செயல்முறைக்கு உரிய கவனஞ்செலுத்தாமல் அவ்வுடன் படிக்கை அல்லது ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட் டுள்ளதெனச் சபைக்குத் தோன்றினால், அத்தகைய உடன்படிக்கையின் அல்லது ஒப்பந்தத்தின் நியதிகளை வேறுபடுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஆ), (இ) அல்லது (ஈ) என்னும் பந்திகளின்கீழ் விடுக்கப்பட்ட பணிப்புடன் அதிருப்தியடையும் ஏதேனும் நிதிக்கம்பெனி, அத்தகைய பணிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவுறுமுன்னர் சபைக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாமென்பதுடன், சபையானது, அத்தகைய மேன்முறையீடு கிடைக்கப்பெற்றதிலிருந்து முப்பது நாட்களினுள் அதன் முடிபை அளித்தலும் வேண்டும்.

(3) நிதிக்கம்பெனியொன்று இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ள பட்சத்திலும், அத்தகைய நிதிக்கம்பெனியின் எவரேனும் பணிப்பாளர் அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் அத்தகைய மீறுகைக்குப் பொறுப்பாகவுள்ளாரென நம்புவதற்குப் பணிப்பாளருக்குக் காரணம் உள்ள பட்சத்திலும், அத்தகைய பணிப்பாளரின் அல்லது முக்கியமான முகாமைத் துவ ஆளணியினரின் கடவுச்சீட்டைத் தடுத்துவைக்கும்படி பணிப்பாளர் நீதிவானுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

## பாகம் IV

### நிதிக்கூற்றுக்களும் நிதிக்கம்பெனிகளின் கணக்காய்வும்

*நிதிக் கம்பெனி யின் கணக்குகள்.*

**26**. ஒவ்வொரு நிதிக்கம்பெனியும், ஒவ்வொரு நிதியாண்டு முடிவுறும்போதும், பின்வருவன உட்பட, நிதிக்கூற்றுக்களின் பூரணமான தொகுதியொன்றைத் தயாரித்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய நிதியாண்டின் முடிவிலுள்ளவாறான ஐந்தொகையொன்றும்; அத்துடன்

(ஆ) அத்தகைய நிதியாண்டு தொடர்பிலான வருமானக் கூற்றொன்றும்.

நிதிக் கம்பெனியின் ஐந்தொகை.

**27.** (1) நிதிக்கம்பெனியொன்றின் ஐந்தொகை, அத்தகைய ஐந்தொகை எந்த நிதியாண்டு தொடர்பானதோ அந்த நிதியாண்டின் முடிவிலுள்ளவாறான அத்தகைய கம்பெனியின் அலுவல்களினது நிலைமையை எடுத்துக்கூறுதல் வேண்டும்.

(2) சபையானது வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, ஐந்தொகையில் அல்லது அதனோடிணைக்கப்பட்டுள்ள ஏதேனும் கூற்றில் பின்வருவன காட்டப்படுதல் வேண்டும்:-

(அ) அவை பதிவழிக்கப்படாத அளவுவரை, தனிவேறான தலைப்புகளின்கீழான உருப்படியான சொத்துக்களின் மூலம் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத மூலதனமாக்கப்பட்ட செலவுகள்;

(ஆ) முதலீடுகளின் சந்தைப் பெறுமதி;

(இ) நிதியாண்டின்போது நிலையான சொத்துக்களின் ஏதேனும் பெறுமதிமதிப்பீடு இருந்திருப்பின், அத்தகைய சொத்துக்களைப் பெறுமதி மதிப்பிடுவதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட முறை;

(ஈ) அறவிடமுடியா மற்றும் ஐயக்கடன்கள் என்பவற்றுக்காக ஏற்பாடுசெய்தபின்னர் முற்பணங்களின் கூட்டு மொத்தத் தொகைகள்;

(உ) நிலையான சொத்துக்களின் பெறுமதியிலான தேய்மானம், புதுப்பித்தல்கள் அல்லது குறைவு என்பவற்றுக்கான ஏற்பாட்டிலான ஏதேனும் அதிகரிப்பு அல்லது குறைப்பு;

(ஊ) நிதிகளின் மூலங்களும் பிரயோகமும்;

(எ) ஒன்றிலிருந்து ஒன்று வேறுபிரித்துக்காட்டப்படற் பாலனவான ஒதுக்குகள், ஏற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்;

(ஏ) ஒப்புரவிலான மாற்றங்கள்;

(ஐ) நிதிக்கம்பெனியின் முதலாவது ஐந்தொகையின் விடயத்தில் தவிர, ஐந்தொகையிற் காட்டப்பட்ட எல்லா இனங்களுக்கும் நேர்முற்போந்த நிதியாண்டின் முடிவிலுள்ள நேரொத்த தொகைகள்.

நிதிக் கம்பெனியின் வருமானக் கூற்று.

**28.** சபையானது வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, ஒரு நிதிக் கம்பெனியின் வருமானக் கூற்றில் அல்லது அதனோடிணைக்கப்பட்டுள்ள ஏதேனும் கூற்றில் பின்வருவன காட்டப்படுதல் வேண்டும்:-

(அ) நிலையான சொத்துக்களின் பெறுமதியிலான தேய்மானம், புதுப்பித்தல்கள் அல்லது குறைவு என்பவற்றுக்கான ஏற்பாடு என்றவகையாக அரசிறைக்குப் பொறுப்பிக்கப்பட்ட தொகை;

(ஆ) இலங்கை வருமான வரிக்காக மற்றும் இலாபங்களின்மீது வேறு இலங்கை வரிவிதிப்புக்காக அரசிறைக்குப் பொறுப்பிக்கப்பட்டதும், அத்தகைய கணக்குகளிலிருந்து வேறு பிரித்துக் காட்டப்படற்பாலதுமான தொகை, அத்துடன் நடப்பு வரிவிதிப்பாண்டில் அல்லது அடுத்துவரும் ஓர் ஆண்டில் வருமதியான வரிதொடர்பிலான பொறுப்புக்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்ட அல்லது ஒதுக்கி வைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொகைகள்;

(இ) செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட பங்கிலாபங்களின் கூட்டுமொத்தத் தொகை;

(ஈ) கணக்காய்வாளர்களின் ஊதியத் தொகை;

(உ) பணிப்பாளர்களினது வேதனாதிகளின் கூட்டு மொத்தத் தொகையைக் குறிக்கின்றதும், அரசிறைக்குப் பொறுப்பிக்கப்பட்டதுமான தொகை;

(ஊ) ஒதுக்குகளுக்கு ஒதுக்கிவைக்கப்பட்ட அல்லது ஒதுக்கிவைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட அல்லது ஒதுக்குகளிலிருந்து மீளப்பெறப்பட்ட தொகை;

(எ) தனிவேறான தலைப்புக்களின்கீழ், நிதிக்கம்பெனியினால் வழமையாகக் கொண்டுநடாத்தப்படுகின்றவாறான அத்தகையனவல்லாதவையும், விதிவிலக்கான அல்லது மீளநிகழாத தன்மையினவான சூழ்நிலைகள் காரணமாக அல்லது கணக்கீட்டு அடிப்படையிலான மாற்றத்தின் மூலம் கொண்டுநடாத்தப்படுகின்றவையுமான கொடுக்கல்வாங்கல்களிலிருந்து எழுகின்ற இலாபம் அல்லது நட்டம் அல்லது வருமானம் மற்றும் செலவுகள்;

(ஏ) நிதிக் கம்பெனியின் முதலாவது வருமானக் கூற்றின் விடயத்திற்றவிர, வருமானக்கூற்றில் காட்டப்பட்ட எல்லா இனங்களுக்காகவும் நேர்முற்போந்த நிதியாண்டுக்கான நேரொத்த தொகை.

நிதிக் கம்பெனியின் ஐந்தொகையையும் இலாப, நட்டக் கணக்கையும் வெளியிடுதல்.

**29.** (1) நிதிக் கம்பெனி ஒவ்வொன்றும், ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்தபின்னர் மூன்று மாதங்களினுள் -

(அ) அந்நிதியாண்டுக்காக அக்கம்பெனியின் கணக்காய்வு செய்யப்பட்ட வருமானக் கூற்றையும்;

(ஆ) நிதியாண்டின் முடிவிலுள்ளவாறான அக்கம்பெனியின் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையையும்;

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) என்பவற்றிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் அறிக்கையையும்; அத்துடன்

(ஈ) ஐந்தொகையுடன் இணைக்கப்பட்டதும், அக்கம்பெனியின் அலுவல்களினது நிலைமை தொடர்பாகப் பணிப்பாளர்களினால் தயாரிக்கப்பட்டதுமான அறிக்கையையும்,

பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு நிதிக்கம்பெனியும், ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் மூன்று மாதங்களினுள், (1)ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களை, இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது ஒரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்தச் செய்தித்தாளில் ஒருதடவையேனும் வெளியிடுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு நிதிக்கம்பெனியும், (1)ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களை, அடுத்துவரும் நிதியாண்டுக்கான அவ்வாவணங்கள் தயாரிக்கப்பட்டு வெளிக்காட்டப்படும்வரை, அதன் தொழிலிடங்களுள் ஒவ்வொன்றிலும் துலாம்பரமானவோரிடத்தில் வெளிக்காட்டிவைத்தல் வேண்டும்.

(4) சபையானது, இப்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஐந்தொகையினதும் வருமானக் கூற்றினதும் படிவத்தைக் குறித்துரைக்கலாமென்பதுடன், அத்தகைய படிவம் குறித்துரைக்கப்படுமிடத்து, ஒவ்வொரு நிதிக்கம்பெனியினதும் ஐந்தொகையும் வருமானக் கூற்றும் அத்தகைய படிவத்தில் தயாரிக்கப்படுதலும் வேண்டும்.

(5) ஒவ்வொரு நிதிக்கம்பெனியும், அதன் ஒவ்வொரு நிதியாண்டினதும் முடிவை உடனடியாக அடுத்துவரும் ஆறுமாத காலப்பகுதி தொடர்பில் அதன் முக்கியமான நிதிசார் தரவுகளையும் முக்கியமான செயல்நிறைவேற்றுகைச் சுட்டிகளையும், பணிப்பாளரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும் வெளியிடுதல் வேண்டும்.

**30**. (1) ஒரு நிதிக்கம்பெனியின் கணக்காய்வாளர், அந்நிதிக் கம்பெனியின் கணக்குகள், நிதிகள், நிதிகளின் முகாமை மற்றும் ஆதனம் என்பவற்றைச் சோதனையிடுதல் வேண்டும். கணக்காய்வாளர் இயன்றளவுவரையும் அவசியமானவிடத்தும், பின்வருவனவற்றைப் பரிசோதனை செய்தல் வேண்டும்:- கணக்குகளைக் கணக்காய்வு செய்தல்.

(அ) நிதிக்கம்பெனியினது அலுவல்களின் நடாத்துகை, நிதிக்கம்பெனிகளினால் நிதித்தொழில் நடாத்தப் படுதல் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்துக்கும் சபையினால் வழங்கப்பட்ட விதிகளுக்கும் பணிப்புகளுக்கும் இணங்க இருந்துள்ளதாவென்பதும்;

(ஆ) வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதலும் கணக்குகளைப் பேணுதலும் தொடர்பான பதிவேடுகள் திருப்திகரமான வையாவென்பதும்;

(இ) கணக்கீட்டு முறைமைகளும் நடவடிக்கை முறைமை களும், புத்தகங்களும், பதிவேடுகளும், ஏனைய ஆவணங்களும், நிதிக் கட்டுப்பாட்டு நோக்கிலும், நிதிக்கம்பெனியின் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்வதனை இயலச்செய்வதற்குத் தகவலை முன்வைக்கும் நோக்கிலும் தகுந்தமுறையிலும் போதியள விலும் திட்டமிடப்பட்டுள்ளனவாவென்பதும், அத்த கைய முறைமைகள், நடவடிக்கைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பன பயனுள்ளவகையில் நடைமுறையிலுள்ளனவாவென்ப தும்;

(ஈ) கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள், கணக்கியல், நிதியளிப்பு மற்றும் பெறுமதி மதிப்பீடு என்பனபற்றிய நெறிகளுக்கு உரிய கவனஞ்செலுத்தி, கவனத்தின் கீழுள்ள காலப்பகுதி தொடர்பில் நிதிக்கம்பெனியின் அலுவல்களினது உண்மையானதும் நியாயமானது மான கருத்தை முன்வைப்பதற்கு அவ்வாறு திட்ட மிடப்பட்டுள்ளனவாவென்பதும்.

(2) சபையானது, தகுதிவாய்ந்தவர்களும் தகைமைபெற்றவர்களுமான கணக்காய்வாளர்கள் நிதிக்கம்பெனிகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதில் ஈடுபட்டுள்ளனரென்பதனை உறுதிப்படுத்துவதற்கான தேவைக்குக் கவனஞ்செலுத்தி, அதுதொடர்பில் பணிப்பாளருக்கு வழிகாட்டுநெறிகளை வழங்கலாம்; அவர், காலத்துக்குக்காலம், அத்தகைய வழிகாட்டுநெறிகளுக்கிணங்க, நிதிக்கம்பெனிகளின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு அத்தகைய எண்ணிக்கையினரான தகைமைபெற்ற கணக்காய்வாளர்களைத் தெரிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர்கள் பற்றிய நிரலை எல்லா நிதிக்கம்பெனிகளுக்கும் அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(3) சபையானது, நிதிக்கம்பெனிகளின் கணக்காய்வாளர்களினது சுற்றுமுறை தொடர்பான பணிப்புகளை வழங்கலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் அனுப்பிவைக்கப்பட்ட நிரலிலிருந்து, ஒவ்வொரு நிதிக்கம்பெனியும், அதன் கணக்குகளைக் கணக்காய்வுசெய்யும் நோக்கத்துக்காக அதன் கணக்காய்வாளர்களைத் தெரிவுசெய்தலும், (3)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட பணிப்புகளுக்கு இணங்கியொழுகுதலும் அதன் கடமையாதல் வேண்டும்.

## பாகம் V

### நிதிக்கம்பெனிகள்மீது ஒழுங்குபடுத்தும் மற்றும் தீர்மான நடவடிக்கை

இடைநிறுத்துகை.

**31.** (1) பணிப்பாளர், தாமாகவோ அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர் மூலமாகவோ அல்லது பணிப்பாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் வேறெவரேனும் ஆள்மூலமாகவோ செய்த பரிசோதனையின் பின்னர் அல்லது கம்பெனியிடமிருந்து பெறப்பட்ட தகவலின்மீது, அது கடனிறுக்கவகையற்றதென அல்லது அதன் வைப்பீட்டாளர்களின் கோரிக்கைகளை ஈடுசெய்வதற்கு இயலாததாகவும் சாத்தியமுடையதென அல்லது அது தொழிலில் தொடர்ந்திருத்தல் அதன் வைப்பீட்டாளர்களுக்கு அல்லது வேறு கடன்

கொடுத்தோருக்கு இழப்பை ஏற்படுத்தும் சாத்தியமுடையதெனத் திருப்திப்படுமிடத்து, பணிப்பாளர், சபையிடம் சமர்ப்பிக்கப் படுவதற்காக, மத்திய வங்கியின் ஆளுநருக்கு அதற்கிணங்க அறிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்; அத்துடன் சபை யானது, நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் பரிசீலனை செய்ததன்மேல், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட வாறாக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென அபிப் பிராயப்படின், சபையானது, தொழிலை உடனடியாக இடை நிறுத்தும்படி கம்பெனியைப் பணிக்கின்றதும், கம்பெனியின் எல்லாப் புத்தகங்களையும், பதிவேடுகளையும், சொத்துக்களையும் பொறுப்பேற்குமாறும், கம்பெனியினால் தொழில் தொடர்ந்து நடாத்தப்படுவதனைத் தடுப்பதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுக்குமாறும் பணிப்பாளரைப் பணிக்கின்றதுமான கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) நிதிக் கம்பெனியின் எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது சொத்துக்களைத் தனதுடைமையில் அல்லது கட்டுக்காப்பில் உடையவரும், அவற்றைப் பணிப் பாளருக்கு அல்லது மத்திய வங்கியின் அலுவலரொருவருக்கு, அல்லது பணிப்பாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் வேறெவரேனுமாளுக்குக் கையளிக்கத் தவறுகின்றவருமான அக்கம்பெனியின் எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர், அல்லது ஊழியர் அல்லது வேறு எவரேனுமாள் அல்லது கம்பெனியின் எவையேனும் புத்தகங்களை, பதிவேடுகளை அல்லது சொத்துக்களைப் பொறுப்பேற்பதற்கு அல்லது கம்பெனியினால் தொழில் தொடர்ந்துநடாத்தப்படுவதனைத் தடுப்பதற்கு அவசியமெனப் பணிப்பாளர் கருதக்கூடியவாறான அத்தகைய வேறு வழிமுறைகளை எடுப்பதற்குப் பணிப்பாளருக்கு, அல்லது மத்திய வங்கியின் அலுவலரொருவருக்கு அல்லது பணிப்பாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்படும் வேறெவரேனுமாளுக்கு முட்டுக்கட்டையிடும் அல்லது அவரை எதிர்க்கும் எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நல்லெண்ணத்துடன் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையின் காரணமாக ஏதேனும் இழப்பு அல்லது சேதம் உறப்படுமிடத்து அல்லது உறப்படும் சாத்தியமுள்ள விடத்து அல்லது உறப்பட்டுள்ளதெனச் சார்த்தப்படுமிடத்து, அத்தகைய கட்டளை நல்லெண்ணத்துடன் ஆக்கப்படவில்லை யென எண்பிக்கப்படமுடிந்தாலொழிய, அத்தகைய கட்டளையைப் பரிசீலனைசெய்வதனை அல்லது இல்லாதொழிப்பதனை உறுதிப்படுத்துவதற்காக அல்லது அத்தகைய இழப்பை அல்லது சேதத்தை அறவிடுவதற்காக நீதிமன்றமொன்றில் வழக்கெதுவும் அல்லது வழக்குநடவடிக்கையெதுவும் தொடுக்கப்படுதலா காது.

(4) நிதிக்கம்பெனியின் தனிசுகளைத் தொடர்ந்து அறவிடு வதனை இயலச்செய்வதற்கு அவசியமென அது கருதக்கூடிய வாறான அத்தகைய நடபடிகளைச் சபையானது எடுக்கலா மென்பதுடன், அத்தகைய நோக்கத்துக்காக, நிதிக்கம்பெனிக்குக் கடனாளிகள் கொடுப்பனவுகளைச் செய்வதனை இயலச் செய்வதற்கு நிதிக்கம்பெனியின் பெயரில் வங்கிக்கணக்குகளைத் திறப்பதற்குத் தத்துவமுடையதாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் ஏதேனும் நிதிக்கம்பெனிதொடர்பில் சபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் இடைநிறுத்தற் கட்டளை, அது எத்தேதியன்று ஆக்கப்பட்டதோ அத்தேதியிலிருந்து ஆறுமாத காலப்பகுதி முடிவுறுவதன்மேல் பயனில்லாதொழிதல் வேண்டு மென்பதுடன், செயல்முறைக்குகந்தவரை விரைவாகப் பின்வரு வதனைச் செய்தல் சபையின் கடமையாதலும் வேண்டும்:-

(அ) ஒன்றில் நிபந்தனையின்றி, அல்லது பொது மக்கள் நலன்கருதி, அல்லது நிதிக்கம்பெனியின் வைப்பீட் டாளர்களினதும் ஏனைய கடன்கொடுத்தோரினதும் நலன்கருதி, அவசியமெனச் சபை கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, தொழிலை மீளத் தொடங்குவதற்குக் கம்பெனிக்கு அனுமதியளிக்கின்ற கட்டளையை ஆக்குதல்; அல்லது

(ஆ) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிதிக்கம்பெனியை ஒடுக்குவதற்காகத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றுக்குப் பணிப்பாளர் விண்ணப்பம் செய்வதனைச் செய்வித்தலும், அத்தகைய கம்பெனிக்கு அதற்கிணங்க அறிவித்தலும். ஒரு நிதிக்கம்பெனிக்கு அவ்வாறு அறிவிக்கப்படுமிடத்து, கம்பெனியானது, தொழிலை மீளத்தொடங்குவதற்கான கட்டளையொன்று ஒரு நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்டாலொழிய, அவ்வாறு செய்தலாகாது.

பந்தி (அ)வினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது கம்பெனியின் அமைப்புப்புறவிதியிலும் அமைப்பகவிதிகளிலும் முரணாக எது எவ்வாறிருப்பினும், சபையானது, தொழிலை மீளத் தொடங்குவதற்குக் கம்பெனிக்கு அனுமதியளிப்பதற்கான நிபந்தனையாக, எவரேனும் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது ஊழியர் கம்பெனியில் தொடர்ந்திருப்பது அதன் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன்கொடுத்தோரினதும் நலன்களுக்குப் பங்கம் விளைவிக்கின்றதென்ற கருத்தைக் கொண்டிருக்குமிடத்து அத்தகைய பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது ஊழியரை அகற்றலாமென்பதுடன், அத்தகைய கம்பெனியின் ஒரு பணிப்பாளராக, முகாமையாளராக அல்லது ஊழியராக எவரேனுமாளையும் நியமிக்கலாம்.

(6) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது ஒரு நிதிக்கம்பெனியின் அமைப்புப்புறவிதியிலும், அமைப்பகவிதிகளிலும் முரணாக எது எவ்வாறிருப்பினும், (5)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் சபையினால் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, சபையானது பின்வருவனவற்றுள் ஒன்றை அல்லது அதற்கதிகமானவற்றைச் செய்யலாம்:-

(அ) நிதிக்கம்பெனியை இன்னொரு நிதிக்கம்பெனி யுடன் அல்லது வேறேதேனும் நிறுவனத்துடன் ஒன்றுசேர்ப்பதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான

அத்தகைய ஒழுங்கேற்பாடுகளை, அத்தகைய வேறு நிதிக்கம்பெனியின் அல்லது நிறுவனத்தின் சம்மதத்துடன் செய்தல்;

(ஆ) நிதிக்கம்பெனியின் மூலதனத்தை அதிகரிப்பதன் மூலமும் புதிய பங்குதாரர்களுக்கான ஒழுங்கேற்பாட்டைச் செய்வதன்மூலமும் நிதிக்கம்பெனியை மீள ஒழுங்குபடுத்துதல்;

(இ) நிதிக்கம்பெனியின் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன்கொடுத்தோரினதும் நலன்கருதி அவசியமென அது கருதுகின்றவாறான ஏதேனும் முறையில் அத்தகைய நிதிக்கம்பெனியை மீளவமைத்துருவாக்குதல்;

(ஈ) அத்தகைய நிதிக்கம்பெனியின் தொழிலை முறையாக நடாத்துவது தொடர்பாக அத்தகைய நிதிக்கம்பெனியின் அலுவல்களை முகாமைசெய்வதற்கு ஆளொருவரை நியமித்தல்;

(உ) நிதிக்கம்பெனியில் அல்லது அது தொடர்பாக ஏதேனும் பணியை நிறைவேற்றுவதிலிருந்து நிதிக்கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது கட்டுப்பாட்டா ளரைத் தடைசெய்தல்;

(ஊ) ஒரு நிதிக்கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது ஊழியரை அகற்றுதல்;

(எ) நிதிக்கம்பெனியின் பணிப்பாளர் சபையை மீளவமைத்தல்;

(ஏ) வைப்பீட்டாளரொருவரினால் நிதிக்கம்பெனியுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தைப் பரிசீலனைசெய்தலும், நிதிக்கம்பெனியின் வைப்பீட்டாளர்களினதும் அல்லது வேறு கடன்கொடுத்தோரினதும் நலன்களுக்கு உரிய கவனஞ்செலுத்தாமல்

அல்லது விவேகமான வர்த்தகச் செயல் முறைக்கு உரிய கவனஞ்செலுத்தாமல் அத்தகைய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளதென அது கருதுமிடத்து, மீளச்செலுத்துதல், வட்டிவீதங்கள் மற்றும் இறுப்பனவுகள் என்பன தொடர்பான நியதிகளுட்பட, அத்தகைய ஒப்பந்தத்தின் நியதிகளை வேறுபடுத்துதலும்;

(ஐ) நிதிக்கம்பெனியினால் எவரேனுமாளுடன் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக் கையை அல்லது ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்தலும், அத்தகைய பரிசீலனையின்மேல், நிதிக்கம்பெனியின் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன்கொடுத்தோரினதும் நலனுக்கு உரிய கவனஞ்செலுத்தாமல் அல்லது விவேகமான வர்த்தகச் செயல்முறைக்கு உரிய கவனஞ் செலுத்தாமல் அவ்வுடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டுள்ளதெனச் சபைக்குத் தோன்றினால், அத்தகைய உடன்படிக்கையின் அல்லது ஒப்பந்தத்தின் நியதிகளை வேறுபடுத்துதலும்;

(ஒ) நிதிக்கம்பெனியின் எவரேனும் பங்குதாரரை, அவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட பங்குகளின் சொத்தாண்மையை, சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவருக்கு, அத்தகைய ஆளினால் பின்வருமாறு நட்டஈடு கொடுப்பனவு செய்யப்படுவதன் மீது உரிமை துறக்கும்படி அல்லது கைமாற்றும்படி பணித்தல்:-

(i) அத்தகைய பங்குகளுக்கு விலை கூறப்படுமிடத்து, அவற்றின் சந்தைப் பெறுமதியில் ; அல்லது

(ii) அத்தகைய பங்குகளுக்கு விலைகூறப்படாதிருக்குமிடத்து, சபையினால் பெயர்குறித்துநியமிக்கப்படும் விலைமதிப்பீட்டாளரொருவரினால் தீர்மானிக்கப்படவேண்டிய விலையில்.

(7) ஆறாம் உட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியின்கீழ் அப் பங்குதாரரொருவருக்கு விடுக்கப்பட்ட பணிப்பொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுகின்ற அப்பங்குதாரர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

ஒடுக்குதல்.

**32.** (1) முப்பத்தியோராம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் சபையினால் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, பணிப்பாளர், நிதிக்கம்பெனியை ஒடுக்குவதற்காக இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட வாறாகத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றுக்கு விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

(2) நீதிமன்றமானது, பணிப்பாளரினாற் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேல், நிதிக்கம்பெனியை ஒடுக்கும்படி கட்டளையிடலாமென்பதுடன், அதற்கிணங்க, நீதிமன்றத்தின் மேற்பார்வைக்கமைய கம்பெனிகளை ஒடுக்குதல் தொடர்பாக 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய கம்பெனியின் ஒடுக்குதலுக்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) நிதிக்கம்பெனியானது கடனிறுக்கவகையற்றதல்லதென, நீதிமன்றம், அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின்பின்னரும் பணிப்பாளரின் சமர்ப்பணங் களைக் கவனத்துட்கொண்டபின்னரும் அபிப்பிராயப்பட்டால், ஒன்றில் நிபந்தனையின்றி, அல்லது பொதுமக்களின் நலன்கருதி அல்லது கம்பெனியின் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன் கொடுத்தோரினதும் நலன்கருதி, அவசியமென நீதிமன்றம் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, தொழிலை மீளத்தொடங்குவதற்கு நிதிக்கம்பெனிக்கு அனுமதி யளித்து அது கட்டளையாக்கலாம்:

ஆயின், இவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் 31ஆம் பிரிவின் (5)ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி சபையினால் ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்டவொரு கட்டளைதொடர்பாக உயர்நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன் றைச் செய்துள்ள நிதிக்கம்பெனிக்கு ஏற்புடையனவாதலாகாது.

(4) பணிப்பாளர் அல்லது சபையினால் அதற்கென அதிகார மளிக்கப்பட்ட எவரேனுமாள், அத்தகைய ஒடுக்குதலின் நோக் கங்களுக்காக ஒழிப்போனாகவிருப்பதற்கு நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஒரு நிதிக்கம்பெனியை ஒடுக்குவதில் உறப்பட்ட எவை யேனும் செலவுதொகைகள், இறுப்பனவுகள் மற்றும் செலவுகள் என்பன அத்தகைய செலவுதொகைகள், இறுப்பனவுகள் மற்றும் செலவுகள் அத்தகைய நிதிக்கம்பெனியின் நிதிகளிலிருந்து ஈடுசெய்யப்படமுடியாதவையாகவிருக்கும்பட்சத்தில், மத்திய வங்கியின் நிதிகளிலிருந்து செலுத்துதல் பொதுமக்களின் நலன் கருதி உகந்ததாகவிருக்குமெனச் சபை கருதுமிடத்து, அவ்வாறு செய்யலாம்.

(6) இப்பிரிவின்கீழ் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு கட்டளையும் உயர்நீதிமன்றத்துக்கான மேன்முறையீட்டுக்கு அமைந்ததாதல் வேண்டுமென்பதுடன், குடியியல் வழக்குநடவடிக்கைகளிலான மேன்முறையீடுகள் தொடர்பாக (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகள், அத்தகைய ஏதேனும் மேன்முறையீட்டின் விடயத்தில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடை யனவாதலும் வேண்டும்.

(7) பணிப்பாளர், சட்ட வழக்குநடவடிக்கைகளின் தொடர்ச்சிக் காக (1)ஆம் உட்பிரிவின்கீழ் நிதிக்கம்பெனியை ஒடுக்குவதற்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து, மத்திய வங்கியின் எந்தப் பகுதிக்கு நிதிக்கம்பெனிகள் என்ற விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ நீதிமன்றத்துக்கு விண்ணப்பஞ் செய்த பணிப்பாளர் அந்தப் பகுதியின் தலைவராக அப்போது இராதபோதிலும், பிராதின் மூலத் தலையங்கம் சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியுடையதாதல் வேண்டுமெனக் கருதப்படுகின்றது.

(8) இப்பிரிவில் ஏதேனும் நிதிக்கம்பெனி தொடர்பாகத் "தகுதிவாய்ந்த நீதிமன்றம்" என்பது, ஒரு மாகாணத்துக்காக அரசியலமைப்பின் 154ஞ என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டதும், 1996ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க,

மாகாணங்களின் மேல் நீதிமன்றங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2ஆம் பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், அத்தகைய மேல் நீதிமன்றம் எந்த மாகாணத் துக்காகத் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த மாகாணத்தினுள் குடியியல் நியாயாதிக்கத்துடன் தத்துவமளிக்கப்பட்டதுமான ஒரு மேல் நீதிமன்றம் அல்லது அத்தகைய குடியியல் நியாயாதிக்கம் உரித்தாக்கப்பட்ட அத்தகைய மேல் நீதிமன்றமெதுவும் ஏதேனும் மாகாணத்துக்காகத் தாபிக்கப்படாதவிடத்து, மேல் மாகாணத் துக்காகத் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம் என்று பொருளாகும்.

*ஒடுக்குவதில் உரிமைக் கோரிக்கை களின் முன்னுரிமை.*

**33.** ஒரு நிதிக்கம்பெனியை ஒடுக்குவதில் உரிமைக்கோரிக்கை களின் முன்னுரிமை தொடர்பாக அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின்கீழ் எவையேனும் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படும்வரை, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது வேறேதேனும் ஏற்புடையற்பாலதான சட்டம், அத்தகைய ஏற்பாடுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத அளவுவரை, ஒரு நிதிக்கம்பெனியை ஒடுக்குவதில் உரிமைக்கோரிக்கைகளின் முன்னுரிமை தொடர்பாக ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*ஒரு நிதிக்கம் பெனியின் நிருவாகத்தையும் முகாமையையும் சபை கையேற்கலாம்.*

**34.** (1) சபையானது, 31ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளரினால் அறிக்கையொன்று பெறப்பட்டதன்மேல் நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும் பரிசீலனை செய்தபின்னர், 31ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கையெடுப்பதற்கு மாற்றாக, சபையினால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அத்தகைய நிதிக்கம்பெனியின் நிருவாகத்தையும் முகாமையையும் கையேற்கலாமென்பதுடன், அத்தகைய கையேற்புப் பற்றி வர்த்தமானியில் ஓர் அறிவித்தலை வெளியிடுதலும் வேண்டும். சபையானது, கையேற்பின் தொடக்கக் காலப்பகுதியை நீடிக்கலா மென்பதுடன், அத்தகைய நீடிப்புப் பற்றிய அறிவித்தலை வர்த்தமானியில் வெளியிடுதலும் வேண்டும். அத்தகைய கையேற் புப் பற்றியும் அதற்கான ஏதேனும் நீடிப்புப்பற்றியும் சபையானது கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அவர், கம்பெனிதொடர்பான புத்தகங் களில் அதுபற்றிய குறிப்பொன்றைச் செய்தலும் வேண்டும்.

(2) சபையானது ஒரு நிதிக்கம்பெனியின் நிருவாகத்தையும் முகாமையையும் கையேற்குமிடத்து, சபையானது பின்வருவன வற்றுள் ஒன்றை அல்லது அதற்கதிகமானவற்றைச் செய்யலாம்:-

(அ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அல்லது அத்தகைய கம்பெனியின் அமைப்பகவிதிகளினால் அத்தகைய கம்பெனியின் பணிப்பாளர் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன் மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தளிக் கப்பட்ட அல்லது அத்தகைய கம்பெனியின் அமைப்பக விதிகளினால் வேறெவரேனுமாளின்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் அத்தகைய நிதிக்கம்பெனி தொடர்பில் பிரயோகித் தலும், புரிதலும், ஆற்றுதலும்;

(ஆ) கம்பெனியின் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன்கொடுத்தோரினதும் நலன்களைக் கருத்திற் கொண்டும் பொதுமக்களின் நலன்கருதியும் சபைக்கும் எவரேனுமாளுக்கும் இடையே உடன்பட்டுக்கொள்ளப் படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக் கமைய, நிதிக்கம்பெனியின் முகாமைக்காக அத்தகைய ஆளுடன் ஏதேனும் உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதல்;

(இ) இன்னொரு நிதிக்கம்பெனியின் அல்லது வேறேதேனும் நிறுவனத்தின் சம்மதத்துடன், நிதிக்கம்பெனியை அத்தகைய வேறு நிதிக்கம்பெனியுடன் அல்லது நிறுவனத்துடன் ஒன்றுசேர்ப்பதற்கு அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய ஒழுங்கேற்பாடுகளைச் செய்தல்;

(ஈ) நிதிக்கம்பெனியின் மூலதனத்தை அதிகரிப்பதன் மூலமும் புதிய பங்குதாரர்களுக்கான ஒழுங்கேற் பாட்டைச் செய்வதன்மூலமும் நிதிக்கம்பெனியை மீள ஒழுங்கமைத்தல்;

(உ) வைப்பீட்டாளர்களினதும் அத்தகைய நிதிக் கம்பெனியின் ஏனைய கடன் கொடுத்தோரினதும் நலனுக்கானதென அது கருதுகின்றவாறான அத்தகைய ஏதேனும் முறையில் நிதிக்கம்பெனியை மீளவமைத்துருவாக்குதல்;

(ஊ) நிதிக்கம்பெனியில் அல்லது அது தொடர்பான ஏதேனும் பணியை நிறைவேற்றுவதிலிருந்து நிதிக்கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது கட்டுப்பாட்டாளரைத் தடைசெய்தல்;

(எ) நிதிக்கம்பெனியின் எவரேனும் பணிப்பாளரை, முகாமையாளரை அல்லது ஊழியரை அகற்றுதல்;

(ஏ) நிதிக்கம்பெனியின் பணிப்பாளர் சபையை மீளவமைத்தல்;

(ஐ) நிதிக்கம்பெனியின் எவரேனும் பங்குதாரரை, அவரினால் சொந்தமாகவைத்திருக்கப்பட்ட எவையேனும் பங்குகளின் சொத்தாண்மையை, சபையினால் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட ஆளொருவரினால் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்ட நட்டஈடு செலுத்தப்படுவதன்மீது அத்தகைய ஆளுக்கு உரிமைதுறக்கும்படி அல்லது கைமாற்றும்படி பணித்தல்:-

(i) அத்தகைய பங்குகளுக்கு விலை கூறப்படுமிடத்து, அவற்றின் சந்தைப் பெறுமதியில் ; அல்லது

(ii) அத்தகைய பங்குகளுக்கு அவ்வாறு விலைகூறப்படாதவிடத்து, சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் விலைமதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட வேண்டியவொரு விலையில்;

(ஒ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், வைப்பீட்டாளரொருவரினால் நிதிக்கம்பெனியுடன் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும்

ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்தலும், அத்தகைய ஒப்பந்தம் நிதிக்கம்பெனியின் வைப்பீட்டாளர்களின் அல்லது ஏனைய கடன்கொடுத்தோரின் நலன்களுக்கு உரிய கவனஞ்செலுத்தாமல் அல்லது விவேகமான வர்த்தகச் செயல்முறைக்கு உரிய கவனஞ்செலுத்தாமல் செய்துகொள்ளப்பட்டுள்ளதென அது கருதுமிடத்து, அத்தகைய ஒப்பந்தத்தின் நியதிகளை, மீளச்லெுத்துதல், வட்டிவீதங்கள் மற்றும் இறுப்பனவுகள் என்பன தொடர்பான நியதிகளுட்பட வேறுபடுத்துதலும்;

(ஓ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நிதிக்கம்பெனியினால் எவரேனு மாளுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன் படிக்கையை அல்லது ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்தலும், அத்தகைய பரிசீலனையின்மேல், அவ்வுடன் படிக்கை அல்லது ஒப்பந்தம் நிதிக்கம்பெனியின் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன்கொடுத் தோரினதும் நலனுக்கு உரிய கவனஞ்செலுத்தாமல் அல்லது விவேகமான வர்த்தகச் செயல் முறைக்கு உரிய கவனஞ்செலுத்தாமல் செய்துகொள்ளப்பட்டுள்ள தெனச் சபைக்குத் தோன்றினால், அத்தகைய உடன் படிக்கையின் அல்லது ஒப்பந்தத்தின் நியதிகளை வேறுபடுத்துதலும்.

(3) எந்தக் காலப்பகுதிக்காக நிதிக்கம்பெனியின் நிருவாகமும் முகாமையும் சபையினால் கையேற்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின்போது, அத்தகைய நிதிக்கம்பெனியின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், செயலாளரும், சபையினால் தொடர்ந்து செயலாற்றும்படி அவர்களுக்கு வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டாலொழிய, அத்தகைய கம்பெனி தொடர்பில் எவையேனும் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளைப் பிரயோகிக்காதொழிதல், புரியாதொழிதல் மற்றும் ஆற்றாதொழிதல் வேண்டும்.

(4) ஒரு நிதிக்கம்பெனியின் நிருவாகமும் முகாமையும் சபையினால் கையேற்கப்படுமிடத்து, சபையானது, பொது மக்களின் நலன்கருதி அவ்வாறு செய்யவேண்டுமென அது கருதுமிடத்து -

"(அ) மானியக்கொடைகள் என்றவகையாகவல்லாது, கடன்கள் அல்லது வேறு நிதிவசதி என்றவகையாக நிதிக்கம்பெனிக்கு அவசியமென அது கருதக்கூடிய வாறான அத்தகைய நிதிவசதிக்கு ஒழுங்கேற்பாடு செய்யலாம் அல்லது அத்தகைய நிதிவசதியை அதற்கு அளிக்கலாம்; அத்துடன்

(ஆ) கம்பெனியை நிருவகிப்பதிலும் முகாமை செய்வதிலும் உறப்பட்ட எல்லாச் செலவுகளையும், இறுப்பனவு களையும், செலவுகளையும் ஈடுசெய்யலாம்.

(5) சபையானது, (1)ஆம் உட்பிரிவின்கீழ் நிதிக்கம்பெனி யொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் கையேற்றபின்னர் எந்நேரத்திலும், கம்பெனியின் தொழிலை இடைநிறுத்துவது பொதுமக்களின் அல்லது வைப்பீட்டாளர்களின் நலனுக்கான தென அது அபிப்பிராயப்படின், அவ்வாறு செய்யலாம், அல்லது பணிப்பாளரினால் அல்லது சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளினால் செய்யப்பட்ட அறிக்கையின்மீது, நியாயமான வொரு காலப்பகுதியினுள் கம்பெனியை ஒப்பேறக்கூடியதாகவும் கடனிறுக்கவகையுள்ளதாகவும் ஆக்கமுடியாதெனச் சபைக்குத் தோன்றினால், கம்பெனியை ஒடுக்குவதற்கு விண்ணப்பிக்கும்படி பணிப்பாளரைப் பணிக்கலாம். நிதிக்கம்பெனியை ஒடுக்கும்படி சபையானது பணிப்பாளரைப் பணிக்கும் பட்சத்தில், ஒடுக்குதல் தொடர்பாக 32ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

துடர்ச்சிக் கெதிரான பாதுகாப்பு.

**35.** சபையானது 34ஆம் பிரிவின்கீழ் நிதிக்கம்பெனியொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் கையேற்றுள்ளவிடத்து, சபையானது, சபையினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயல் அல்லது காரியம் காரணமாக அல்லது 34ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவினால் அல்லது அதன்கீழ் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி என்பவற்றைப் பிரயோகிக்கை யில் எவரேனுமாளுக்கு ஏற்பட்ட அல்லது அவரினால் உறப்பட்ட

அல்லது ஏற்பட்டுள்ளதாக அல்லது உறப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட ஏதேனும் இழப்பு அல்லது சேதம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்திலான வழக்குக்கு அல்லது வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதலாகாது அல்லது அமைந்ததாத லாகாது.

நிதிக்கம்பெனியின் நிருவாகத்தையும் முகாமையையும் ஆளுக்குரித்தாக்குதல்.

**36.** (1) சபையானது **34**ஆம் பிரிவின்கீழ் நிதிக்கம்பெனியொன்றின் நிருவாகத்தையும் முகாமையையும் கையேற்றுள்ளவிடத்து, சபையானது, வைப்பீட்டாளர்களினது அல்லது கடன்கொடுத்தோரினது நலனைப் பாதுகாப்பதற்கான நடபடிகளை எடுப்பதற்கென, அத்தகைய நிதிக்கம்பெனியின் நிருவாகத்தையும் முகாமையையும் எவரேனுமாளுக்கு, அத்தகைய ஆளின் சம்மதத்துடன் உரித்தாக்கலாமென்பதுடன், அதுதொடர்பான அறிவித்தலொன்றையும் வர்த்தமானியில் வெளியிடலாம். அத்தகைய நிதிக்கம்பெனியின் நிருவாகமும் முகாமையும் எந்த ஆளுக்கு உரித்தாக்கப்படுகின்றதோ அந்த ஆள், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அல்லது அத்தகைய நிதிக்கம்பெனியின் அமைப்பக விதிகளினால் அக்கம்பெனியின் பணிப்பாளர் சபைக்கு அல்லது அத்தகைய கம்பெனியின் அமைப்பகவிதிகளினால் வேறெவரேனுமாளுக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்கு அல்லது அவருக்குக் குறித்தளிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் அத்தகைய நிதிக்கம்பெனி தொடர்பில் பிரயோகித்தலும், புரிதலும், ஆற்றுதலும் வேண்டும்.

(2) சபையானது, ஒரு நிதிக்கம்பெனியின் நிருவாகத்தையும் முகாமையையும் எவரேனுமாளுக்கு உரித்தாக்கியுள்ளவிடத்து, சபையானது, அத்தகைய நிதிக்கம்பெனியின் எவரேனும் பங்குதாரரை, அவரினால் சொந்தமாகவைத்திருக்கப்படும் எவையேனும் பங்குகளின் சொத்தாண்மையை, பின்வருமாறான நட்டஈடு சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஆளொருவரினால் கொடுப்பனவு செய்யப்படுவதன்மேல் அத்தகைய ஆளுக்கு உரிமைதுறக்கும்படி அல்லது கைமாற்றும்படி பணிக்கலாம்:-

(அ) அத்தகைய பங்குகளுக்கு விலைகூறப்படுமிடத்து, அவற்றின் சந்தைப் பெறுமதியில்; அல்லது

(ஆ) அத்தகைய பங்குகளுக்கு விலை கூறப்படாத விடத்து, சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் விலை மதிப்பீட்டாளரொருவரினால் தீர்மானிக்கப்பட வேண்டிய விலையில்.

(3) எந்த ஆளுக்குச் சபையானது ஒரு நிதிக்கம்பெனியின் நிருவாகத்தையும் முகாமையையும் உரித்தாக்குகின்றதோ அந்த எவரேனுமாள், சபையின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகைய பணிகளை ஆற்றலாமென்பதுடன், 34ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஐ) மற்றும் (ஒ) என்னும் பந்திகளின் ஏற்பாடுகள் அது தொடர்பாக ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

நிதிக்கம்பெனியின் உரிமத்தை இல்லாதாக்குதல்.

**37.** (1) ஏதேனும் நிதிக்கம்பெனி -

(அ) உரிமம் வழங்கப்பட்டதிலிருந்து ஒன்பது மாதங்களினுள் தொழிலைத் தொடங்கு வதற்குத் தவறியுள்ளதெனவும்;

(ஆ) அதனால் உறப்பட்ட எவையேனும் தனிசுகள் வருமதியாக வருவதன்மேல் அத்தகைய தனிசுகளைச் செலுத்தத் தவறியுள்ளதெனவும்;

(இ) அத்தகைய நிதிக்கம்பெனிக்கெதிராக மனு அல்லது நிவாரணத்துக்கான வழக்கு கோப்பிடப்படச்செய்துள்ளதெனவும், மற்றும் ஏதேனும் வங்கிமுறிவுச் சட்டத்தின் கீழ் அல்லது கடனாளிகளுக்கு நிவாரணம் வழங்கும் அல்லது கடனாளிகள் தொடர்பான வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அத்தகைய நிதிக்கம்பெனி தொடர்பில் ஓர் ஒழிப்போனை, கட்டுக்காப்பாளரை அல்லது பெறுநரை நியமிக்கச்செய்துள்ளதெனவும்;

(ஈ) நிதித்தொழிலைக் கொண்டுநடாத்தா தொழிந்துள்ளதெனவும்;

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு அல்லது விதிக்குத் தொடர்ந்து முரணாக நடந்துள்ளதெனவும் அல்லது அவற்றை மீறியுள்ளதெனவும்;

(ஊ) வருடாந்த உரிமக்கட்டணத்தைச் செலுத்துவதற்குத் தவறியுள்ளதெனவும்; அல்லது

(எ) அதன் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன்கொடுத்தோரினதும் நலன்களுக்குப் பங்கம் விளைவிக்கக் கூடியவொரு முறையில் அதன் தொழிலைக் கொண்டு நடாத்தியுள்ளதெனவும், அல்லது கொண்டு நடாத்துகின்றதெனவும்,

சபை திருப்திப்படுமிடத்து, சபையானது, நிதிக்கம்பெனிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை அது இல்லாதாக்குமென அத்தகைய நிதிக்கம்பெனிக்கு அறிவித்தல் கொடுக்கலாம்.

(2) ஐந்தாம் பிரிவின்கீழ் நிதிக்கம்பெனியொன்றுக்கு வழங்கப்பட்ட உரிமம் ஏன் அவ்வாறு இல்லாதாக்கப்படலாகாதெனக் காரணங்களைக்கொடுத்து, (1)ஆம் உட்பிரிவின்கீழான இல்லாதாக்குகைபற்றிய அறிவித்தற்றேதியிலிருந்து முப்பது நாட்களினுள், அத்தகைய அறிவித்தலுக்கெதிராக எழுத்திலான ஆட்சேபனைகளைச் சபைக்கு அது அளிக்கலாம்.

(3) இல்லாதாக்குகைபற்றிய அறிவித்தற்றேதியிலிருந்து அறுபதுநாட்கள் முடிவுற்றபின்னரும் (2)ஆம் உட்பிரிவின்கீழ் சபைக்கு அளிக்கப்பட்ட ஆட்சேபனைகளைக் கவனத்துட் கொண்டபின்னரும், சபையானது, அத்தகைய அறிவித்தலை மீளப்பெறலாம் அல்லது நிதிக்கம்பெனிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கலாம் என்பதுடன், அத்தகைய இல்லாதாக்குகைகள், உரிமத்தை இல்லாதாக்குவதற்குச் சபை முடிபுசெய்யும் தேதியன்று அல்லது சபை தகுதியெனக் கருதக் கூடியவாறான அத்தகைய வேறு பிந்திய தேதியன்று பயனுறுதலும் வேண்டும்.

(4) உரிமத்தை இல்லாதாக்குவதற்கான சபையின் முடிபு நிதிக்கம்பெனிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இல்லாதாக்குகை பற்றிய அறிவிப்பு, வர்த்தமானியிலும் இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது ஒரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்தச் செய்தித்தாளிலேனும், அத்தகைய கம்பெனி நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு இனிமேல் அதிகாரமளிக்கப்படவில்லையெனப் பொதுமக்களுக்கு அறிவித்து வெளியிடப்படுதலும் வேண்டும்.

(5) நிதிக்கம்பெனியொன்றின் உரிமம் இல்லாதாக்கப்படுமிடத்து, சபையானது, 7ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் பேணப்பட்ட இடாப்பிலிருந்து நிதிக்கம்பெனியின் பெயரை அகற்றுதல் வேண்டுமென்பதுடன், ஒடுக்குவதற்கான பணிப்புகளுட்பட, அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய பணிப்புகளையும் வழங்கலாம், அல்லது கம்பெனியை ஒடுக்குவதற்காக விண்ணப்பிக்கும்படி பணிப்பாளரைத் தேவைப்படுத்தலாம்; இப்பட்சத்தில் 32ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அதன் (3)ஆம் உட்பிரிவு தவிர, ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) சபையினால் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் (5)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் பணிப்புகளுக்கு நிதிக்கம்பெனி இணங்கியொழுகத் தவறுமிடத்து, சபையானது, நிதிக்கம்பெனியை ஒடுக்குவதற்கான வழக்கைக் கோப்பிடும்படி பணிப்பாளரைத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், 32ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அதன் (3)ஆம் உட்பிரிவு தவிர, ஏற்புடையனவாதலும் வேண்டும்.

## பாகம் VI

### வைப்புக்களின் காப்புறுதி

வைப்புக்களின் காப்புறுதித் திட்டம்.

**38.** (1) காப்புறுதியானது, 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், நிதிக்கம்பெனிகளினால் வைத்திருக்கப்பட்ட வைப்புக்களின்

காப்புறுதிக்கான திட்டமொன்றைத் தாபிக்கலாம், பேணலாம், முகாமைசெய்யலாம் மற்றும் கட்டுப்படுத்தலாம் என்பதுடன், அவற்றினால் வைத்திருக்கப்பட்ட வைப்புக்களை அத்தகைய திட்டத்தின்கீழ் காப்புறுதிசெய்வதற்கு அத்தகைய கம்பெனி களையும் தேவைப்படுத்தலாம்.

(2) (அ) சபையானது, அத்தகைய நியதிநிபந்தனைகளுக் கமைய, (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட எல்லாப் பணிகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும் நிறைவேற்றும்படி (இதனகத்துப் பின்னர் ''அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப் பட்ட குழு'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கூட்டி ணைக்கப்பட்ட குழுவொன்றுக்கு அதிகாரமளிக்க லாம்; அத்தகைய பட்சத்தில் 2000ஆம் ஆண்டின் **43**ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்கு படுத்துதற் சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய நோக்கத்துக்காக அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(ஆ) சபையானது, அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக் கப்பட்ட குழுவில் பங்குகளைக் கொள்ளலாம் அத்துடன் வைத்திருக்கலாம்.

*வைப்புக்களின் காப்புறுதிக்கான விண்ணப்பம்.*

**39.** (1) வைப்புக்களின் காப்புறுதிக்கான திட்டமொன்று தாபிக் கப்பட்டுள்ளவிடத்து, ஒவ்வொரு நிதிக்கம்பெனியும், அத்தகைய நிதிக்கம்பெனியினால் வைத்திருக்கப்பட்ட வைப்புக்களை அத்தகைய திட்டத்தின்கீழ் காப்புறுதிசெய்வதற்குச் சபையினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் சபைக்கு அல்லது அதிகார மளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

எந்த நிதிக்கம்பெனியின் வைப்புக்கள் அத்தகைய திட்டத்தின்கீழ் காப்புறுதிசெய்யப்பட்டுள்ளனவோ அந்த நிதிக்கம்பெனியொன்று இச்சட்டத்தின் இப்பாகத்தில் ''காப்புறுதிசெய்யப்பட்ட நிதிக்கம்பெனி'' ஒன்றெனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது.

(2) சபையானது அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக் கப்பட்ட குழு, அதன் தற்றுணிபின்படி, (1)ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்.

(3) ஒவ்வொரு விண்ணப்பகார நிதிக்கம்பெனியும் விடயத்துக் கேற்ப, சபைக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக் கப்பட்ட குழுவுக்குத் தொடக்கக் கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்; இது, சபையினால் அல்லது சபையின் ஒருப்பாட்டுடன் அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) காப்புறுதிசெய்யப்பட்ட நிதிக்கம்பெனியொன்று, அதன் வைப்புக்களின்மீது சபைக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குக் காப்புறுதிக் கட்டுப்பணமொன் றைச் செலுத்துதல் வேண்டும்.

(5) காப்புறுதிசெய்யப்பட்ட நிதிக்கம்பெனியொன்று ஏதேனும் கட்டுப்பணக் கொடுப்பனவில் ஏதேனும் தவறுகையைப் புரிந்தால், அது அத்தகைய தவறுகைக் காலப்பகுதிக்காக, அத்தகைய தவறு கைமூலம் சபையினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கூட்டி ணைக்கப்பட்ட குழுவினால் உறப்படக்கூடிய சாத்தியமுள்ள இழப்புகளைக் கருத்திற்கொண்டு, சபையினால் அல்லது சபை யின் ஒருப்பாட்டுடன் அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் அத்தகைய கட்டுப்பணத்தொகையின்மீதான வட்டியைச் சபைக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

*அதிகாரமளிக் கப்பட்ட கூட்டி ணைக்கப்பட்ட குழுவினாலான பரிசோதனை.*

**40.** (1) அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழு வானது, அதன் தற்றுணிபில், காப்புறுதிசெய்யப்பட்ட ஏதேனும் நிதிக் கம்பெனியின் புத்தகங்களையும் கணக்குகளையும் பரிசோதனை செய்விக்கலாமென்பதுடன், இச்சட்டத்தின் 24ஆம் பிரிவின் (1)ஆம், (4)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்ற மாற்றங்களுடன் அத்தகைய பரிசோதனைக்கு ஏற்புடையன வாதலும் வேண்டும்.

(2) பரிசோதனை அறிக்கையின் பிரதியொன்று, ஒரு பரிசோதனையின்பின்னர் உடனடியாகப் பணிப்பாளருக்கு அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

வைப்புக் காப்புறுதி தொடர்பான விதிகள்.

**41.** வைப்புக்களின் காப்புறுதித்திட்டம் ஒன்றைத் தாபித்தலும் தொழிற்படுத்துதலும் தொடர்பிலும், குறிப்பாகப் பின்வருவன தொடர்பிலும், சபையினால் அல்லது சபையின் ஒருப்பாட்டுடன் அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் விதிகள் ஆக்கப்படலாம்:-

(அ) காப்புறுதிக்கட்டுப்பணத்தொகையும், காப்புறுதி செய்யப்பட்ட நிதிக்கம்பெனியினால் காப்புறுதிக் கட்டுப்பணம் எந்த நேரத்திலும் எந்த முறையிலும் செலுத்தப்படவேண்டுமோ அந்த நேரமும் அந்த முறையும்;

(ஆ) கட்டுப்பணங்களைச் செலுத்துவதில் காப்புறுதி செய்யப்பட்ட நிதிக்கம்பெனி தவறுகை புரியுமிடத்து, அதனிடமிருந்து இறுக்கப்படக்கூடிய வட்டி;

(இ) நிதிக்கம்பெனிகளின் வைப்பீட்டாளர்களைக் காப்புறுதி செய்யும் நோக்கத்துக்காக, இச்சட்டத்தின் இப் பாகத்தின்கீழ் விதித்துரைக்கப்படவேண்டுமென அல்லது தீர்மானிக்கப்பட வேண்டுமெனக் கூறப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம்;

(ஈ) காப்புறுதிசெய்யப்பட்ட நிதிக்கம்பெனிக்கான பதிவேடு வைத்திருக்கும் தேவைப்பாடுகள்;

(உ) காப்புறுதி செய்யப்பட்ட நிதிக்கம்பெனிக்கான அறிக்கையிடும் தேவைப்பாடுகள்;

(ஊ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் சபையின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக் கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதுடன், ஆற்றுவதுடன் அல்லது புரிவதுடன் தொடர்புபட்ட, சம்பந்தப்பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான வேறேதேனும் விடயம்.

## பாகம் VII

## அதிகாரமின்றி நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்ற ஆட்களுக் கெதிரான நடவடிக்கை

**42.** (1) இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக எவரேனுமாள் நிதித்தொழிலைக் கொண்டுநடாத்தியுள்ளாரா அல்லது கொண்டுநடாத்துகின்றாரா அல்லது பொது மக்களிட மிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளாரா அல்லது ஏற்றுக் கொண்டிருக்கின்றாரா என்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, பணிப்பாளர் அல்லது பணிப்பாளரினால் அதற்கென அதிகார மளிக்கப்பட்ட மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர் புலனாய் வொன்றை நடாத்தலாமென்பதுடன், அந்நோக்கத்துக்காகப் பின்வருவனவற்றுள் ஒன்றையும் அல்லது அதற்கு மேற்பட்ட வற்றையும் செய்யலாம்:- புலனாய்வு.

(அ) அத்தகைய ஆளை அல்லது அத்தகைய ஆளின் பணிப்பாளர், பங்காளர், உறுப்பினர், செயலாளர், முகாமையாளர், ஊழியர், முகவர், ஒப்பந்தக்காரர் அல்லது கணக்காய்வாளர் ஒருவரை, அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய தகவலை, அவர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதியினுள்ளும் அத்தகைய முறையிலும் அல்லது படிவத்திலும் தமக்குக் கொடுத்துதவும்படி தேவைப் படுத்தலாம்;

(ஆ) அத்தகைய ஆளை அல்லது அத்தகைய ஆளின் பணிப்பாளர், பங்காளர், உறுப்பினர், செயலாளர், முகாமையாளர், ஊழியர், முகவர், ஒப்பந்தக்காரர் அல்லது கணக்காய்வாளர் ஒருவரை, அத்தகைய ஆளின் தொழில் மற்றும் கூட்டிணைப்பு அலுவல்கள் என்பன தொடர்பாக, அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பேணப்பட்ட புத்தகங்களை யும், பதிவேடுகளையும், கோப்புகளையும், இடாப்புக் களையும் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களையும்,

குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய இடத்தில் சோதனைக்குக் காண்பிக்கும்படியும், அத்தகைய புத்தகங்களின், பதிவேடுகளின், கோப்புகளின், இடாப்புக்களின் மற்றும் அத்தகைய வேறு ஆவணங் களின் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளைத் தேவைப்படுத்தப்பட்டவாறான ஏதேனும் படிவத்தில் வழங்கும்படியும் தேவைப்படுத்தலாம்;

(இ) அத்தகைய ஆளின் வளவுகளினுள் அல்லது களஞ் சியப்படுத்துகை இடப்பரப்பினுள் அல்லது அத்தகைய ஆளின் அல்லது அத்தகைய ஆளின் வளவுகளிலுள்ள அத்தகைய ஆளின் எவரேனும் பணிப்பாளரின், பங்காளரின், உறுப்பினரின், செயலாளரின், முகாமையாளரின், ஊழியரின், முகவரின், ஒப்பந்த காரரின் அல்லது கணக்காய்வாளரின் ஏதேனும் வாகனத்தினுள் எந்நேரத்திலும் பிரவேசிக்கலாம் அல்லது அந்நோக்கத்துக்காக எந்த ஆளின் சேவைகள் பணிப்பாளரினால் பெறப்பட்டுள்ளனவோ அந்த வேறெவரேனும் ஆள் பிரவேசிப்பதற்கு அதிகார மளிக்கலாம் என்பதுடன், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அத்த கைய வளவுகளையும் அல்லது களஞ்சியப்படுத்துகை இடப்பரப்பையும் அல்லது வாகனங்களையும் அத்துடன் அத்தகைய ஆளின் தொழில் மற்றும் கூட்டிணைப்பு அலுவல்கள் தொடர்பாக அத்தகைய வளவுகளில், களஞ்சியப்படுத்துகை இடப்பரப்பில் அல்லது வாகனத்தில் காணப்படுவனவும், அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பேணப்பட்டனவுமான புத்தகங்களையும், பதிவேடு களையும், கோப்புகளையும். இடாப்புக்களையும் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களையும் பரிசோதனை செய்யலாம் அல்லது பரிசோதனை செய்விக்கலாம்; அத்துடன் அவசியமாயின், அத்தகைய புத்தகங்களின், பதிவேடுகளின், கோப்புகளின், இடாப்புக்களின் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களின் மெய்யென்று றுதிப்படுத்தப்பட்ட அல்லது வேறுவகையான

பிரதிகளைத் தேவைப்பட்டவாறான ஏதேனும் படிவத்தில் பெறலாமென்பதுடன், அத்தகைய வளவுகளில் அல்லது களஞ்சியப்படுத்துகை இடப் பரப்பில் அல்லது வாகனத்தில் காணப்படும் அல்லது அத்தகைய வளவுகளில் அல்லது களஞ்சியப் படுத்துகை இடப்பரப்பில் காப்பான கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படக்கூடிய நாணயம், நாணய மாற்றுண்டியல்கள், கூட்டிணைப்பு மற்றும் அரசாங்கப் பிணையங்கள் என்பவற்றையும் கணக்குக்கெடுக்க லாம்:

ஆயின், மேலும், அத்தகைய ஆளின் தொழில் மற்றும் கூட்டிணைப்பு அலுவல்கள் தொடர்பாக, அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பேணப்பட்ட புத்தகங்கள், பதிவேடுகள், கோப்புகள், இடாப்புக்கள் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்கள் என்பன, அத்தகைய ஆளின் வளவுகள் அல்லது களஞ்சியப்படுத்துகை இடப்பரப்பு அல்லது அத்தகைய ஆளின் வளவுகளிலுள்ள அத்தகைய ஆளின் எவரேனும் பணிப்பாளரின், பங்காளரின், உறுப்பினரின், செயலாளரின், முகாமையாளரின், ஊழியரின், முகவரின், ஒப்பந்தகாரரின் அல்லது கணக்காய்வாளரின் ஏதேனும் வாகனம் தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தில் வைத்திருக்கப்படுகின்றனவெனப் பணிப்பாளர் நியாய மான தகவலைப் பெற்றால், பணிப்பாளர் அல்லது பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனு மாள், அத்தகைய இடத்தினுள் அல்லது வாகனத்தினுட் பிரவேசித்து அதனைப் பரிசோதனைசெய்யவும், புத்தகங்களையும், பதிவேடுகளையும், கோப்புகளையும், இடாப்புக்களையும் மற்றும் அத்தகைய வேறு ஆவணங் களையும் பரிசோதனைசெய்யவும், அவசியமாயின், தேவைப்பட்டவாறான ஏதேனும் படிவத்தில் அவற்றின் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட அல்லது வேறுவகை யான பிரதிகளைப் பெறவும், அத்தகைய இடத்தில் காணப்படும் நாயணம், அரசாங்கப் பிணையங்கள் என்பவற்றைக் கணக்குக்கெடுக்கவும் தத்துவமுடையவ ராதல் வேண்டும்;

(ஈ) அத்தகைய ஆளிடம் அல்லது எவரேனும் பணிப் பாளரிடம், பங்காளரிடம், உறுப்பினரிடம், செயலா ளரிடம், முகாமையாளரிடம், ஊழியரிடம், முகவரிடம், கணக்காய்வாளரிடம் அல்லது ஒப்பந்தகாரரிடம், அல்லது அத்தகைய ஆளின் தொழில் அல்லது கூட்டிணைப்பு அலுவல்கள் தொடர்பான அலுவலுடன் பரிச்சயமுள்ளவராக அல்லது அவற்றை அறிந் துள்ளவராக அல்லது தனதுடைமையில் வைத்திருப்ப வராக இருக்கக்கூடியவரான வேறெவரேனுமாளிடம் கேள்விகள் கேட்டு அவர்களின் கூற்றுக்களைப் பதியலாம், அல்லது அவசியமாயின், கேட்கப்பட்ட கேள்விகளுக்கான மறுமொழிகளைச் சத்தியக்கடதாசி என்ற வகையாகச் சமர்ப்பிக்கும்படி அல்லது அவசியமாயின், (17 ஆம் அத்தியாயமான) சத்தியங்கள் அல்லது உறுதியுரைகள் கட்டளைச்சட்டத்திற்கிணங்கச் சத்தியத்தை அல்லது உறுதியுரையை எடுத்தோதும்படி பணிக்கலாம், அத்துடன் கேள்விகள் கேட்கப்படு வதனைச் செய்விக்கலாம் மற்றும் கூற்றுக்களைப் பதியலாம் அல்லது பதிவதனைச் செய்விக்கலாம்;

(உ) அத்தகைய ஆளின் வைத்திருக்கைக் கம்பெனியை, ஏதேனும் துணைநிலைக் கம்பெனியை, அல்லது இணைக்கம்பெனியை, அல்லது அத்தகைய ஆளின் வைத்திருக்கைக் கம்பெனியின் ஏதேனும் துணைநிலைக் கம்பெனியை அல்லது இணைக்கம்பெனியை, அல்லது பணிப்பாளரின் கருத்தில் அத்தகைய ஆளில் கணிசமானளவிலான நிதிசார் அக்கறையை அல்லது குறிப்பிடத்தக்க முகாமைத்துவ அக்கறையைக் கொண் டுள்ள வேறேதேனும் கம்பெனியை, அவசியமெனப் பணிப்பாளர் கருதக்கூடியவாறான தகவலைக் கொடுத்துதவும்படியும், அதன் தொழில் மற்றும் கூட்டிணைப்பு அலுவல்கள் தொடர்பாக அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பேணப்பட்ட புத்தகங்களையும், பதிவேடுகளையும், கோப்புகளையும், இடாப்புக்களையும் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களையும் பணிப்பாளர் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய நேரத்திலும்,

தேதியிலும், இடத்திலும், அத்தகையவொரு முறையிலும் படிவத்திலும் சோதனைக்குக் காண்பிக்கும்படியும், தேவைப்பட்டவாறான ஏதேனும் படிவத்தில், அத்தகைய புத்தகங்களின், பதிவேடுகளின், கோப்புகளின், இடாப்புக்களின் மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களின் மெய்யென் றுறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்கும்படியும் தேவைப்படுத்தலாம்;

(ஊ) அத்தகைய ஆளின் தொழில் மற்றும் கூட்டிணைப்பு அலுவல்கள் தொடர்பான தகவலுடன் பரிச்சயமுள்ளவராக அல்லது அதனை அறிந்துள்ளவராக அல்லது தனதுடைமையில் வைத்திருப்பவராக அல்லது வைத்திருப்பவரெனத் தோன்றுபவராக இருக்கக்கூடியவரான எவரேனுமாளிடமிருந்து எழுத்திலான அறிவித்தல் மூலம் தகவல் கோரலாம் என்பதுடன், தேவைப்படின், அத்தகைய ஆளை நேர்காணலொன்றுக்கும் அழைக்கலாம்;

(எ) அந்நோக்கத்துக்காக அவசியமென அவர் கருதக்கூடிய வேறேதேனும் நடவடிக்கையை எடுக்கலாம்.

(2) (அ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், பணிப்பாளர், (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகப் புலனாய்வொன்றைக் கொண்டு நடாத்துவதற்கும், அத்தகைய புலனாய்வின் முடிவெடுப்புக்களைப் பணிப்பாளர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலத்தினுள்ளும் அவருக்கு அறிக்கையிடுவதற்குமென, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியை அல்லது மாகாணத்துக்கு அல்லது பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியை, சூழ்நிலைகளில் அவசியமாகக்கூடியவாறான எல்லா உதவிகளையும் வழங்குமாறு தேவைப்படுத்தலாம்.

(ஆ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது மாகாணத்துக்கு அல்லது பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள பிரதிப் பொலிசுப் பரிசோதகர், (1)ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகப்

புலனாய்வொன்றைக் கொண்டுநடாத்தும்படி பிரிவின் உதவிப் பொலிசுக் கண்காணிப்பாளருக்கு அல்லது இயைபான பொலிசு நிலையத்தின் பொறுப்பலுவலருக்குக் கட்டளையிடலாமென் பதுடன், அத்தகைய அலுவலர்கள், அவர்கள் சட்டமுறையாகப் பிரயோகிக்கக் கூடிய தத்துவங்களுடன் சேர்த்து மேலதிகமாக, (1)ஆம் உட்பிரிவின் (அ) முதல் (எ) வரையிலான பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலை, ஏற்றமாற்றங்களுடன் செய்வதற்குத் தத்துவமுடையோராதலும் வேண்டும்.

(இ) பணிப்பாளர், (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகப் புலனாய்வொன்றைக் கொண்டுநடாத்துவதற்கு ஏதேனும் பிரதேச செயலாளரின் உதவியைக் கோரலாமென்பதுடன், அத்தகைய பிரதேச செயலாளர், பணிப்பாளர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலத்தினுள்ளும் அவருக்கு உதவிபுரிதலும் வேண்டும்.

(3) பணிப்பாளரானவர், ஆளொருவர் நிதித்தொழிலைக் கொண்டுநடாத்தியுள்ளார் அல்லது கொண்டுநடாத்துகின்றார், அல்லது வைப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளார் அல்லது ஏற்றுக் கொள்கின்றார் என நம்புவதற்கு அவருக்குக் காரணங்கள் உள்ள விடத்து, அத்தகைய நிகழ்வைச் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(4) சபையானது, (3) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளரின் அறிக்கையைக் கவனத்துட்கொண்டபின்னரும், எந்த ஆள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த ஆளுக்குக் கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை அளித்தபின்னரும், அத்தகைய ஆள் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதித்தொழிலைக் கொண்டுநடாத்தியுள்ளாரா அல்லது கொண்டு நடாத்துகின்றாரா அல்லது வைப்புக்களை ஏற்றுக்கொண்டுள் ளாரா அல்லது ஏற்றுக்கொண்டிருக்கின்றாரா என்பதைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதித்தொழிலைக் கொண்டு நடாத்தியுள்ளார் அல்லது கொண்டுநடாத்துகின்றார் அல்லது வைப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளார் அல்லது ஏற்றுக் கொண்டிருக்கின்றார் எனத் தீர்மானிக்கப்படின், அதற்கிணங்க

அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அத்தகைய தீர்மானத்தை அறிவித்தலும் வேண்டும். இப்பிரிவின்கீழ் சபையினாற் கொடுக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் அறிவித்தல், கேட்புப்பற்றிய அறிவித்தலுட்பட, அத்தகைய ஆளின் கடைசியாக அறியப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சல்மூலம் அனுப்பப்படின், சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட ஏதேனும் குற்றவழக்கில் எவரேனுமாள் நிதித்தொழிலைக் கொண்டு நடாத்தியுள்ளாரா அல்லது கொண்டுநடாத்துகின்றாரா அல்லது வைப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளாரா அல்லது ஏற்றுக்கொண்டிருக்கின்றாரா என்பதுபற்றி ஏதேனும் பிரச்சினை எழுமிடத்து, அத்தகைய ஆள் நிதித்தொழிலைக் கொண்டுநடாத்தியுள்ளார் அல்லது கொண்டு நடாத்துகின்றார் அல்லது வைப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளார் அல்லது ஏற்றுக்கொண்டிருக்கின்றார் என்ற தீர்மானம் தொடர்பாகச் சபையின் கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்றோற்றவளவிலான சான்றாதலும் வேண்டும்.

(6) சபையானது, (4) ஆம் உட்பிரிவின்கீழ் அதன் தீர்மானம் பற்றிய அறிவிப்புடன் சேர்த்து அல்லது அதன்பின்னர், அத்தகைய ஆளின் தொழிலைச் சபையினால் குறித்துரைக்கப்பட்ட ஆளொருவருக்கு உரிமைதுறப்பதற்காக அல்லது வைப்புப் பொறுப்புக்களை மீளச்செலுத்துவதற்காக அல்லது ஒடுக்குவதற்காகத் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றுக்குக் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதி யினுள் ஒரு விண்ணப்பத்தைச் செய்வதற்கான பணிப்புகள் உட்பட, அவசியமென அது கருதுகின்றவாறான பணிப்புகளை அத்தகைய ஆளுக்கு வழங்கலாமென்பதுடன், அத்தகைய பணிப்புகளுக்கிணங்கியொழுகுதல் அத்தகைய ஆளின் கடமையாதலும் வேண்டும்.

(7) அத்தகைய ஆளுடன் தொழிலை உரிமை துறப்பதற்கு (6)ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்புகளை வழங்கும்பட்சத்தில், சபையானது, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணான ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், -

(அ) அத்தகைய ஆளின் வைப்பீட்டாளரொருவரினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்யலாமென்பதுடன், அத்தகைய ஒப்பந்தம் அத்தகைய ஆளின் வைப்பீட்டாளர்களினது அல்லது வேறு கடன்கொடுத்தோரினது நலன்களுக்கு உரிய கவனஞ்செலுத்தாமல் அல்லது விவேகமான வர்த்தகச் செயல் முறைக்கு உரிய கவனஞ்செலுத்தாமல் செய்து கொள்ளப்பட்டுள்ளதென அது கருதுமிடத்து, மீளச் செலுத்துதல், வட்டிவீதங்கள் மற்றும் இறுப்பனவுகள் என்பன தொடர்பான நியதிகளுட்பட, அத்தகைய ஒப்பந்தத்தின் நியதிகளையும் வேறுபடுத்தலாம்;

(ஆ) அத்தகைய ஆளினால் வேறெவரேனுமாளுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையை அல்லது ஒப்பந்தத்தைப் பரிசீலனை செய்யலாமென்பதுடன், அத்தகைய பரிசீலனையின்மேல், அந்த உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம், அத்தகைய ஆளின் வைப்பீட்டாளர்களினதும் ஏனைய கடன்கொடுத்தோரினதும் நலனுக்கு உரிய கவனஞ்செலுத்தாமல் அல்லது விவேகமான வர்த்தகச் செயல்முறைக்கு உரிய கவனஞ் செலுத்தாமல் செய்துகொள்ளப்பட்டுள்ளதெனச் சபைக்குத் தோன்றினால், அத்தகைய உடன்படிக்கையின் அல்லது ஒப்பந்தத்தின் நியதிகளையும் வேறுபடுத்தலாம்.

(8) ஆறாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புகளுக் கிணங்கியொழுகுவதற்கு அத்தகைய ஆள் தவறுமிடத்து, சபையானது, அத்தகைய ஆளை ஒடுக்குதல் உட்பட, அவசியமென அது கருதுகின்றவாறான அத்தகைய நடபடிகளை எடுக்கலாம் அல்லது ஒரு நீதிமன்றத்தின்மூலம் அத்தகைய ஆளைக் கடனிறுக்க வகையற்றவர் என வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

ஒரு கம்பெனியை ஒடுக்கும்பட்சத்தில், 32 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அதன் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் தவிர, ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஒரு கம்பெனியல்லாத ஆட்கள் குழுவொன்றை ஒடுக்கும் விடயத்தில், 32 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அதன் (2) ஆம், (3)ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் தவிர, ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆட்கள் குழுவின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமதி, ஒழிப்போன் தகுதியானதென எண்ணுகின்றவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய அடிப்படையின் மீதும் நிச்சயிக் கப்படுதலும் வேண்டும். தகுதிவாய்ந்த நீதிமன்றம், ஒடுக்குதல் கட்டளையொன்றை ஆக்கியபின்னர் எந்நேரத்திலும், எல்லாச் சொத்துக்களையும் தேறிப்பெறுமாறு ஒழிப்போனுக்கு அதிகாரமளிக்கலாமென்பதுடன், எவரேனுமாளை, அத்தகைய ஆட்கள் குழு உரித்துடையதாகவுள்ளதும், அவர்வசம் இருக்கின்றதுமான ஏதேனும் பணத்தை, ஆதனத்தை அல்லது எவையேனும் புத்தகங்களை மற்றும் வேறு ஆவணங்களை, உடனடியாக அல்லது குறித்துரைக்கப்பட்டவொரு காலத்தினுள் ஒழிப்போனுக்குச் செலுத்தும்படியும், ஒப்படைக்கும்படியும், உரிமைமாற்றும்படியும், மீளஒப்படைக்கும்படியும் அல்லது கைமாற்றும்படியும் தேவைப்படுத்தலாம். அத்தகைய ஆட்கள் குழுவை ஒடுக்கும் நோக்கத்துக்கான திட்டமொன்று, ஒழிப் போனினால் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்துகைக்காகத் தகுதி வாய்ந்த நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென் பதுடன், அத்தகைய ஆட்கள் குழுவின் ஒடுக்குகை அத்திட்டத்துக் கிணங்க நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(9) நான்காம் உட்பிரிவின் நியதிகளின்படி தீர்மானிக்கப்பட்ட அத்தகைய ஆளின் பணத்தையும் ஆதனத்தையும் அறவிடு வதற்குச் சபையானது அது அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நடபடிகளை எடுக்கலாமென்பதுடன், இச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அறவீடுதொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(10) தீர்மானத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆள், 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதித்தொழிலைக் கொண்டு நடாத்தியுள்ளார் அல்லது கொண்டுநடாத்துகின்றார் அல்லது வைப்புக்களை ஏற்றுக்கொண்டுள்ளார் அல்லது ஏற்றுக்

கொண்டிருக்கின்றார் என, சபையானது, இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது ஒரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்தச் செய்தித்தாளிலேனும் அறிவித்தலொன்றை வெளியிடலாம். அத்தகைய ஆள் ஓர் ஆட்கள் குழுவாகவிருப்பின், அத்தகைய அறிவித்தலானது, அவ்வாட்கள் குழு:-

(i) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர்களினது பெயர்களையும் முகவரிகளையும்;

(ii) குழுமமொன்றாகவிருப்பின், அக்குழுமத்தின் பங்காளர்களினது பெயர்களையும் முகவரிகளையும்; அத்துடன்

(iii) குழுமமொன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுமமொன்றாகவிருப்பின், அத்தகைய குழுவின் உறுப்பினர்களினதும் அக்குழுவின் அலுவலர்களினதும் பெயர்களையும் முகவரிகளையும்,

உள்ளடக்கலாம்.

(11) இப்பிரிவின்கீழ் ஒவ்வோர் ஆளின்மீதும் விதிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகுதல் அவரது கடமையாதல் வேண்டுமென்பதுடன்,-

(அ) இப்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை வழங்கத் தவறுகின்றவரான அல்லது ஏதேனும் புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை, பொருளை அல்லது சாமானைச் சோதனைக்குக் காண்பிக்கத் தவறுகின்றவரான;

(ஆ) நேர்காணலொன்றுக்கு அழைக்கப்படும்போது நேரடியாக வருகைதரத் தவறுகின்றவரான;

(இ) பொய்யான, பூர்த்தியற்ற அல்லது பிழையான அல்லது பிழைவழியுய்க்கின்ற தகவலை, புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை, பொருளை அல்லது சாமானை வழங்குகின்றவரான; அல்லது

(ஈ) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் பணியைப் புரிகையில், விடயத்துக்கேற்ப, பணிப்பாளருக்கு அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாளுக்கு, அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு, அல்லது மாகாணத்துக்கு அல்லது பிரிவுக்குப் பொறுப்பாகவுள்ள பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு, அல்லது பணிப்பாளர் புலனாய்வொன்றை நிறைவேற்றுவதற்கு அவருக்கு உதவும்படி தேவைப்படுத்தப்பட்ட அல்லது கோரப்பட்ட எவரேனும் பிரதேச செயலாளருக்கு, அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அல்லது பிரதிப் பெலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அல்லது பிரதேச செயலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாளுக்கு முட்டுக்கட்டையிடுகின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதலும் வேண்டும்.

தகவலையும் புத்தகங்களையும் வழங்கும்படி ஆளொருவரை வலுக்கட்டாயப் படுத்துவதற்கான நீதிமன்றக் கட்டளை.

**43.** நாற்பத்திரெண்டாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் அல்லது 46 ஆம் பிரிவின் நியதிகளின்படி தேவைப்படுத்தப்படும்போது, எவரேனுமாள், தகவலை, புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை அல்லது பொருளை அல்லது சாமானை வழங்கத் தவறுமிடத்து அல்லது பொய்யான, பிழையான அல்லது பூர்த்தியற்ற தகவலை, புத்தகத்தை, பதிவேட்டை, கோப்பை, இடாப்பை அல்லது அத்தகைய வேறு ஆவணத்தை, பொருளை அல்லது சாமானை வழங்குகின்றவிடத்து, பணிப்பாளர் அல்லது பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் -

(அ) விண்ணப்பத்திற் பெயர்குறிப்பிடப்பட்ட எவரேனுமாளுக்கு, 42 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் அல்லது 46 ஆம் பிரிவின் நியதிகளின்படி விதிக்கப்பட்ட தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ள ஆளின் அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பேணப்பட்ட புத்தகங்களை, கோப்புகளை,

இடாப்புக்களை மற்றும் அத்தகைய வேறு ஆவணங் களை, பொருளை அல்லது சாமானைச் சோதனை யிடுவதற்கு அதிகாரமளிக்கின்றதும் ; அல்லது

(ஆ) 42 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் அல்லது 46 ஆம் பிரிவின் நியதிகளின்படி விதிக்கப்பட்ட தேவைப் பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ள ஆளை, அல்லது கட்டளையிற் பெயர் குறிப்பிடப்படக்கூடிய வாறான அத்தகைய ஆளின் பணிப்பாளரை, பங்காளரை, உறுப்பினரை, செயலாளரை, முகாமை யாளரை, ஊழியரை, முகவரை, ஒப்பந்தகாரரை அல்லது கணக்காய்வாளரை, அத்தகைய ஆளின் அச்சு, இலத்திரனியல் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பேணப்பட்ட புத்தகங்களை, பதிவேடுகளை, கோப்பு களை, இடாப்புக்களை மற்றும் அத்தகைய வேறு ஆவணங்களை, பொருளை அல்லது சாமானை, கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட ஆளொருவருக்கும் கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டவோர் இடத்திலும் காண்பிக்கும்படி தேவைப்படுத்துகின்றதும்,

ஆன அக்கட்டளையை வழங்குவதற்காகத் தோதான நீதிவானுக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

முடக்கி வைக்கின்ற கட்டளையை வழங்குதல்.

**44.** (1) ஆளொருவர் 42 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி புலனாய்வுசெய்யப்படுகின்றவிடத்து எந் நேரத்திலும், பணிப்பாளர் பின்வருவனவற்றுள் ஏதேனு மொன்றுக்காக அல்லது அதற்குமேற்பட்டவற்றுக்காக (இதனகத் துப்பின்னர் ''முடக்கிவைக்கின்ற கட்டளை'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளையொன்றை ஆக்கலாம்:-

(அ) அத்தகைய ஆளின் சொத்துக்களை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தைக் கையுதிர்ப்பதிலிருந்து அத்தகைய ஆளைத் தடைசெய்வதற்காகவும்;

(ஆ) பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் கொடுக்கல் வாங்கலை அல்லது எவையேனும் வகுப்பினவான கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொள்வதிலிருந்து அத்தகைய ஆளைத் தடை செய்வதற் காகவும்;

(இ) வைப்புக்களைப் பரிந்துகேட்பதிலிருந்து அல்லது திரட்டுவதிலிருந்து அத்தகைய ஆளைத் தடை செய்வதற்காகவும்;

(ஈ) பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஏதேனும் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர்பான ஏதேனும் கொடுக்கல் வாங்கலைத் தடைசெய்வதற்காகவும்.

(2) பணிப்பாளர், 42 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆட்கள் குழுவொன்று புலனாய்வுசெய்யப்படுமிடத்து எந்நேரத்திலும், அத்தகைய ஆட்கள் குழு -

(i) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின் அக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவரேனும் பணிப்பாளருக்கு அல்லது முகாமையாளருக்கு;

(ii) ஒரு குழுமமாகவிருப்பின், அக்குழுமத்தின் எவரேனும் பங்காளருக்கு;

(iii) ஒரு குழுமம் தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவாகவிருப்பின், அதன் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள அத்தகைய குழுவின் எவரேனும் உறுப்பினருக்கு, அல்லது அக்குழுவின் எவரேனும் அலுவலருக்கு,

பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றுக்காக அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்காக முடக்கிவைக்கின்ற கட்டளையொன்றை வழங்கலாம்:-

(அ) அத்தகைய ஆளின் சொத்துக்களை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தைக் கையுதிர்ப்பதிலிருந்து அத்தகைய ஆளைத் தடைசெய்வதற்காகவும்;

(ஆ) பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் கொடுக்கல் வாங்கலை அல்லது எவையேனும்

வகுப்பினவான கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொள்வதிலிருந்து அத்தகைய ஆளைத் தடைசெய் வதற்காகவும்;

(இ) வைப்புக்களைப் பரிந்துகேட்பதிலிருந்து அல்லது திரட்டுவதிலிருந்து அத்தகைய ஆளைத் தடை செய்வதற்காகவும்;

(ஈ) பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஏதேனும் கணக்கு, ஆதனம் அல்லது முதலீடு தொடர் பான ஏதேனும் கொடுக்கல்வாங்கலைத் தடைசெய் வதற்காகவும்.

(3) நாற்பத்தைந்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்ட முடக்கிவைக்கின்ற கட்டளையொன்று, அது வழங்கப்பட்டதிலிருந்து ஏழுநாட்களை விஞ்சுகின்றவொரு காலப்பகுதிக்கு வலுவிலிருத்தலாகாது.

முடக்கிவைக்கின்ற கட்டளையை உறுதிப்படுத்துதலும் கடவுச்சீட்டுக்களைத் தடுத்துவைத்தலும்.

**45.** (1) பணிப்பாளர், *44* ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் முடக்கி வைக்கின்ற கட்டளையொன்றை வழங்கிய பின்னர், அந்த முடக்கிவைக்கின்ற கட்டளை வலுவிலுள்ள காலப்பகுதியினுள், அத்தகைய முடக்கிவைக்கின்ற கட்டளையின் உறுதிப்படுத்து கையைக் கோரி மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன், சூழ்நிலைகள் அவ்வாறு தேவைப்படுத்தினால், அதற்கான நீடிப்பொன்றுக்கும் வேண்டு கோள்விடுத்தலும் வேண்டும்.

(2) அத்தகைய முடக்கிவைக்கின்ற கட்டளையை வழங்குவதற் கான போதிய காரணங்கள் உள்ளனவென மேல்நீதிமன்றம் திருப்திப்படுமிடத்து, நீதிமன்றமானது முடக்கிவைக்கின்ற கட்டளையை உறுதிப்படுத்தலாமென்பதுடன், அதனை நீடிப்பதற்கான போதிய காரணங்கள் உள்ளனவென அது திருப்திப்படின், தோதானவையென அது கருதுகின்றவாறான அத்தகைய காலப்பகுதிகளுக்கு நீடிப்புகளையும் வழங்கலாம்.

(3) (அ) 42 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆளொருவர் புலனாய்வு செய்யப்படுமிடத்து எந்நேரத்திலும், பணிப்பாளர், அவ்வாறு புலனாய்வு செய்யப்பட்ட அத்தகைய ஆளின் கடவுச்சீட்டைத் தடுத்துவைக்கும்படி இயைபான நீதிவான் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(ஆ) 42 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி புலனாய்வு செய்யப்பட்ட ஆள் ஆட்கள் குழுவொன்றாக இருக்கும் பட்சத்தில், பணிப்பாளர்,-

(i) ஆட்கள் குழு, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின், அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் எவரேனும் பணிப்பாளரினதும், அல்லது முகாமையாளரினதும்;

(ii) அவ்வாட்கள் குழு, குழுமமொன்றாகவிருப்பின், அக்குழுமத்தின் எவரேனும் பங்காளரினதும்; அத்துடன்

(iii) அவ்வாட்கள் குழு, குழுமமொன்று தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அதன் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள அத்தகைய குழுவின் எவரேனும் உறுப்பினரினதும், அக்குழுவின் எவரேனும் அலுவலரினதும்,

கடவுச்சீட்டைத் தடுத்துவைப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான விண்ணப்பமொன்றை அல்லது விண்ணப்பங்களைச் செய்தல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

புலனாய்வின் கீழுள்ள ஆளின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய தகவல்.

**46.** (1) பணிப்பாளரானவர், எழுத்திலான அறிவித்தல்மூலம் அவர் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய தேதியன்றுள்ளவாறும், 42 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி எந்த ஆளின் சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பாகப் புலனாய்வொன்று தொடங்கி

யுள்ளதோ அந்த ஆள் ஒருவரின் சொத்துக்களும் பொறுப்புக் களும்பற்றி அத்தகைய ஆளிடமிருந்து அல்லது அத்தகைய ஆளின் சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பான தகவலுடன் பரிச்சயமுள்ளவராக அல்லது அதனை அறிந்துள்ள வராக அல்லது உடையவரெனத் தோன்றுகின்றவராக இருக்கக் கூடியவரான வேறெவரேனுமாளிடமிருந்து தகவல் கோரலாம்.

(2) அத்தகைய ஆள் தனியாளொருவராகவுள்ளவிடத்து, அவரது வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் பெற்றோர் என்போரின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய தகவலும் கோரப்படலாம்.

(3) அத்தகைய ஆள் ஆட்கள் குழுவொன்றாகவிருக்குமிடத்து, பின்வருவோரினதும் அவர்களின் வாழ்க்கைத் துணைகளினதும், பிள்ளைகளினதும், பெற்றோரினதும் சொத்துக்களும் பொறுப்புக் களும் பற்றிய தகவலும் கோரப்படலாம்:-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் பணிப்பாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள்;

(ஆ) ஒரு குழுமத்தின் பங்காளர்கள்;

(இ) ஒரு குழுமம் தவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவின் உறுப்பினர்கள்.

(4) அத்தகைய ஆளின் சொத்துக்கள் வேறெவரேனுமாளுக்குக் கைமாற்றப்பட்டுள்ளன, கொடையளிக்கப்பட்டுள்ளன, சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன அல்லது ஏதேனும் முறையில் கையுதிர்க் கப்பட்டுள்ளனவெனப் பணிப்பாளருக்குத் தகவல் உள்ளவிடத்து, பணிப்பாளர், அத்தகைய வேறு ஆளின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய தகவலைக் கோரலாம்.

(5) உட்பந்திகள் (1), (2), (3) அல்லது (4) என்பவற்றின்கீழ் தகவலைத் தேவைப்படுத்துவதில் பணிப்பாளர், குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்கான பொறுப்புக்கள்பற்றிய அதிகரிப்பும் குறைப்பும் சொத்துக்களின் கொள்ளுகையும் கையுதிர்ப்பும்பற்றிய விபரங் களையும் தேவைப்படுத்தலாம்.

(6) இப்பிரிவின் நோக்கத்துக்காகச் "சொத்துக்களும் பொறுப் புக்களும்" என்பன, இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் உள்ள சொத்துக்களும் பொறுப்புக்களும் என்று பொருளாகு மென்பதுடன், ஆளொருவரினால் அல்லது அவரது உறவினரினால் முழுமையாக அல்லது பகுதியளவில் சொந்த மாக வைத்திருக்கப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை யும், அத்தகைய ஆள் அல்லது அவரது உறவினர் எந்த ஆதனத் தில் நன்மைபயக்கும் அக்கறையைக் கொண்டுள்ளவராக வுள்ளாரோ அந்த ஏதேனும் ஆதனத்தையும் உள்ளடக்கும்.

பொலிசாரும் பிரதேச செயலாளர்களும் தகவல் வழங்குதல்.

**47.** பணிப்பாளரானவர், ஒரு பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் அலுவலரை அல்லது இயைபான பிரதேச செயலாளரை, இச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின் நியதிகளின்படி புலனாய்வொன்றை வசதிப்படுத்துவதற்கென, விடயத்துக்கேற்ப, இயைபான பொலிசுப் பிரிவின் அல்லது பிரதேச செயலாளர் பிரிவின் எல்லைகளினுள் வதிகின்ற அல்லது அவரது தொழிலிடத்தை வைத்திருக்கின்ற எவரேனுமாள் தொடர்பான தகவலைத் தனக்குக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாமென்பதுடன், ஒரு பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அத்தகைய அலுவலர் அல்லது அத்தகைய பிரதேச செயலாளர், பணிப்பாளரினால் தேவைப்படுத்தப்பட்ட தகவலைக் கொடுத்துதவுவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்தலும் வேண்டும்.

அதிகாரமின்றி வைப்புக்களைப் பரிந்துகேட்டு விளம்பரப்படுத்துதல் தடை செய்யப்படுதல்.

**48.** (1) நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு இச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஆளொருவர் தவிர்ந்த ஆளெவரும் அல்லது இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் நியதி களின்படி விலக்களிக்கப்பட்ட ஏதேனும் வங்கி அல்லது நிறுவனம், வைப்புக்களைப் பரிந்துகேட்டு ஒன்றில் நேரடி யாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, எத்தகையதுமான எம்முறையிலேனும், எவ்வழிவகைகள்மூலமும் விளம்பரப் படுத்துதலாகாது.

(2) ஆளொருவரினாற் செய்யப்பட்ட விளம்பரம் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றதெனப் பணிப்பாளர் அபிப்பிராயப்படுமிடத்து, பணிப்பாளரானவர், வைப்புக்களைப்

பரிந்துகேட்கும் விளம்பரங்களை வெளியிடுவதனைத் தவிர்க்கும் படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தி அவருக்கு அறிவித்த லொன்றை அனுப்பலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தல், அத்தகைய அறிவித்தல், பதிவஞ்சல்மூலம்,-

(அ) விளம்பரத்தில் கொடுக்கப்பட்ட முகவரிக்கு;

(ஆ) அத்தகைய ஆள் தனியாளொருவராகவிருப்பின், அத்தகைய ஆளின் தொழிலிடத்துக்கு அல்லது வதிவிட முகவரிக்கு;

(இ) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக விருப்பின், அத்தகைய ஆளின் தொழிலிடத்துக்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட முகவரிக்கு; அல்லது

(ஈ) அத்தகைய ஆள் கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாக விருப்பின், அத்தகைய ஆளின் தொழிலிடத்துக்கு அல்லது அத்தகைய குழுவின் பங்காளர்களினது அல்லது உறுப்பினர்களினது முகவரிகளுக்கு,

அனுப்பப்பட்டிருப்பின், அறிவித்தலிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் நியதிகளின்படி பணிப்பாள ரினால் அனுப்பப்பட்ட அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவதற்கு எவரேனுமாள் தவறுவாராயின், பணிப்பாளர், அத்தகைய ஆளின் தொழிலிடம் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அல்லது பதிவு செய்யப்பட்ட முகவரி, வதிவிட முகவரி அல்லது விளம்பரத்தில் கொடுக்கப்பட்ட முகவரி எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அமைந்துள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு எழுத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்:

(5) (அ) (4) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பணிப்பாளரினால் செய்யப்பட்ட விண்ணப்பம் பின்வரும் கருமங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகத் தாம் பணிப்பாளராகவுள்ளாரென்றும்;

(ii) (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட அறிவித்தலிற் குறிப்பீடு செய்யப்பட்ட விளம்பரம், அவரது அபிப்பிராயத்தில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் வைப்புக்களைப் பரிந்துகேட்கும் நோக்கத்துக்காக உட்கருதப்பட்டுள்ளதென்றும்;

(iii) அவரது அபிப்பிராயத்தில் உப்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட விளம்பரத்தின் விளம்பரப்படுத்துநராகவுள்ளவரும், விண்ணப்பத்திற் பெயர் குறிப்பிடப்பட்ட வருமான ஆளுக்கு (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி அறிவித்தலொன்று வழங்கப்பட்டதென்றும்;

(iv) விளம்பரப்படுத்துநர், வைப்புக்களைப் பரிந்துகேட்கும் விளம்பரமொன்றை வெளியிடுவதற்கு (1) ஆம் உட்பிரிவினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரல்லரென்றும் ; அத்துடன்

(v) விளம்பரப்படுத்துநர், (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட அறிவித்தலில் அடங்கியுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறினாரென்றும் ; அத்துடன்

(ஆ) விண்ணப்பத்திற் பெயர் குறிப்பிடப்பட்ட விளம்பரப் படுத்துநரை, ஒன்றில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, எம்முறையிலேனும் விளம்பரப்படுத்துவதனை உடனடியாகத் தவிர்க்கும்படி பணிக்கின்ற கட்டளையொன்றை ஆக்குவதற்கான இறைஞ்சுதலொன்றை விண்ணப்பம் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) நான்காம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும், அத்தகைய விண்ணப்பத்தில் எடுத்துக்கூறப்பட்ட கருமங்களை உறுதிப்படுத்துகின்ற சத்தியக்கடுதாசியொன்றினால் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், (2) ஆம் உட்பந்தியின் நியதிகளின்படி வழங்கப்பட்ட அறிவித்தலிற் குறிப்பீடுசெய்யப்பட்ட விளம்பரத்தின் பிரதியொன்றுடனும் அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்றுடனும் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(7) நான்காம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் கிடைக்கப்பெற்றதன்மேல், நீதிமன்றம், விண்ணப்பத்திற் பெயர் குறிப்பிடப்பட்ட விளம்பரப்படுத்துநருக்கு-

(அ) நீதிமன்ற வழக்குநடவடிக்கைகள் முடிவுறும்வரை அல்லது நீதிமன்றம் தகுதியெனக் கருதக்கூடிய அத்தகைய காலம்வரை, விண்ணப்பமானது எந்த விளம்பரம்தொடர்பில் செய்யப்படுகின்றதோ அந்த விளம்பரத்தை அவர் வெளியிடுவதனைத் தடைசெய்கின்றதும் மற்றும் வைப்புக்களைப் பரிந்து கேட்கின்ற எவையேனும் மேலதிக விளம்பரங்களை எத்தகையனவுமான எவ்வழி வகைகள்மூலமும் அவர் வெளியிடுவதனைத் தடைசெய்கின்றதுமான நிபந்தனையுடனான கட்டளையொன்றையும் ; அத்துடன்

(ஆ) அழைப்புக்கட்டளையிற் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று (அத்தேதி, அத்தகைய அழைப்புக்கட்டளை வழங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குக் குறையாத தேதியொன்றாகவிருத்தல் வேண்டும்) தோன்றி, ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாக வல்லாமல் வைப்புக்களைப் பரிந்துகேட்டு எம்முறையிலேனும் விளம்பரப்படுத்துவதனைத் தடைசெய்கின்ற கட்டளையொன்று ஏன் வழங்கப்படலாகாதெனக் காரணங்காட்டும்படி அவரைத் தேவைப்படுத்துகின்ற அத்தகைய அழைப்புக் கட்டளையையும்,

உடனடியாக வழங்குதல் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு அழைப்புக் கட்டளை வழங்கப்பட்டதோ அந்த ஆள், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று நீதிமன்றத்தில் தோன்றத் தவறினால் அல்லது காட்டுவதற்குத் தனக்குக் காரணமெதுவுமில்லையென நீதிமன்றத்துக்குத் தெரிவித்தால், நீதிமன்றமானது, இதன் (7) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட நிபந்தனையுடனான கட்டளையை, விண்ணப்பம் எந்த விளம்பரம் தொடர்பில் செய்யப்படுகின்றதோ அந்த விளம்பரத்தை விளம்பரப்படுத்துநர் வெளியிடுவதனைத் தடைசெய்கின்ற இறுதிக் கட்டளையாக்குதலும் வேண்டும்; அத்துடன் வைப்புக்களைப் பரிந்துகேட்கின்ற மேலதிக எவையேனும் விளம்பரங்களை எத்தகையனவுமான எவ்வழி வகைகள்மூலமும் அவர் வெளியிடுவதனையும் தடைசெய்தலும் வேண்டும்.

(9) ஏழாம் உட்பிரிவின்கீழ் எவ்வாளுக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் அதன்கண் குறித்துரைக் கப்பட்ட தேதியன்று தோன்றி, வைப்புக்களைப் பரிந்துகேட்டு எம்முறையிலேனும் தாம் விளம்பரப்படுத்துவதனைத் தடை செய்கின்ற கட்டளையொன்று ஏன் வழங்கப்படுதலாகா தென்பதற்குத் தாம் காரணங்காட்டமுடியுமென நீதிமன்றத்துக்குத் தெரிவித்தால், நீதிமன்றம் அக்கருமத்தைக் கேட்டுத் தீர்மானிப் பதற்கு முற்படலாம்.

(10) (அ) ஒன்பதாம் உட்பிரிவின்கீழான அத்தகைய விசாரணையில், (7) ஆம் உட்பிரிவின்கீழ் எந்த விளம்பரப்படுத்து நருக்கு அழைப்புக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த விளம்பரப்படுத்துநர், (4) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பத் திற் கூறப்பட்ட கருமங்களுள் எவற்றையும், விண்ணப்பத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட விளம்பரத்தைத் தான் செய்யவில்லை அல்லது அவ்வாறு செய்வதற்கு எந்த எழுத்திலான சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளாரோ அந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கிணங்கத் தாம் அத்தகைய விளம்பரத்தைச் செய் திருந்தார்; அத்துடன் அத்தகைய அனுமதி வலுவிலுள்ளது மற்றும் அது இல்லாதொழிக்கப்படவில்லை அல்லது வேறு வகையில் செல்லுபடியற்றதாக்கப்படவில்லை என்பதனைத்தவிர, எதிர்ப்ப தற்கு உரித்துடையவராதலாகாது.

(ஆ) (4) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பத்துக்கு ஆதார மாகப் பணிப்பாளரிடமிருந்து ஏதேனும் சான்றைக் கோருவதற்கு நீதிவான் நீதிமன்றம் தகுதிவாய்ந்ததாதலாகாது.

(11) விசாரணையின்பின்னர், நீதிவான், காரணங்காட்டுகின்ற ஆள் வைப்புக்களைப் பரிந்துகேட்டு விளம்பரப்படுத்துவதற்கு உரித்துடையவரென அவர்முன்னர் அளிக்கப்பட்ட சான்றின்மீது முடிபுசெய்ய இயலாதவராகவிருப்பின், நீதிவானானவர், இதன் (7) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட நிபந்தனையுடனான கட்டளையை, எந்த விளம்பரம் தொடர்பில் விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்த விளம்பரத்தை விளம்பரப்படுத்துநர் வெளியிடுவதனைத் தடைசெய்கின்ற இறுதிக் கட்டளையை ஆக்குதல் வேண்டுமென்பதுடன், வைப்புக்களைப் பரிந்து கேட்கின்ற மேலதிக எவையேனும் விளம்பரங்களை எத்தகை யனவுமான எவ்வழிவகைகள்மூலமும் அவர் வெளியிடுவதனைத் தடைசெய்தலும் வேண்டும். நீதிமன்றத்தின் திருப்திக்கு அத்தகைய ஆள் காரணங்காட்டினால், நீதிவான், (7) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட நிபந்தனையுடனான கட்டளையைத் தள்ளிவைத்தல் வேண்டும்.

(12) நான்காம் உட்பிரிவின்கீழான ஏதேனும் விண்ணப்பத்தைப் பின்பற்றி, நீதிமன்றமொன்று, வைப்புக்களை பரிந்துகேட்டு ஏதேனும் முறையில் விளம்பரப்படுத்துவதனை உடனடியாக நிறுத்துமாறு ஆளொருவரைப் பணிக்கின்ற கட்டளையொன்றை ஆக்கியுள்ளவிடத்து, நீதிமன்றமானது, அத்தகைய கட்டளையுடன் சேர்த்து, தடைசெய்யும் கட்டளை பயனுற வலுவுறுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய எல் லாக் கட்டளைகளையும் ஆக்குதல் வேண்டும்.

*வைப்புக் களைப் பரிந்து கேட்கின்ற விளம்பரங் களை வெளியிடு முன்னர் ஊடகத்துறை நிறுவனங்கள் சரிபார்த்தல்.*

**49**. ஏதேனும் ஊடகத்துறை நிறுவனம், வைப்புக்களைப் பரிந்துகேட்கும் விளம்பரமொன்றை வெளியிடுமுன்னர், வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு இயைபான விளம்பரப் படுத்துநருக்கு இச்சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதா வென்பதை அவரிடமிருந்து சரிபார்த்தல் வேண்டும்.

**50.** (1) பணிப்பாளர், அறிவித்தலொன்றில் குறித்துரைக்கப் பட்ட ஆளொருவரினால் வைப்புக்களைப் பரிந்துகேட்கின்ற விளம்பரங்கள் வெளியிடப்படுவதனைத் தவிர்க்கும்படி ஏதேனும் ஊடகத்துறை நிறுவனத்தைத் தேவைப்படுத்தி அத்தகைய நிறுவனத்துக்கு அத்தகைய அறிவித்தலை அனுப்பலாம்.

*அதிகாரமின்றி வைப்புக் களைப் பரிந்து கேட்கின்ற விளம்பரங் களை வெளியிடுதல் தவறொன் றாகும்.*

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் இச்சட் டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

## பாகம் VIII

### தவறுகளும் தண்டங்களும்

**51.** (1) சபையானது, பணிப்பாளரின் அறிக்கையொன்றைக் கவனத்துட்கொண்டதன்மேல், ஒரு நிதிக்கம்பெனியின் கடந்தகால அல்லது தற்போதைய பணிப்பாளர், பிரதான நிறைவேற்றலு வலர், முகாமையாளர், ஊழியர், முகவர் அல்லது ஒப்பந்தகாரர், ஒரு செயலினால் அல்லது செய்யாமையினால் -

*பிழையான வழியிலான ஈட்டுகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுதல்.*

(அ) அத்தகைய நிதிக்கம்பெனிக்குச் சொந்தமான ஏதேனும் பணத்தை அல்லது ஆதனத்தைத் தனக்காகவோ அல் லது வேறெவரேனுமாளுக்காகவோ பிழையானவழியி லான ஈட்டுகையை; அல்லது

(ஆ) நிதிக்கம்பெனிக்குப் பிழையான வழியிலான இழப்பை,

விளைவித்துள்ளாரென அபிப்பிராயப்படின், சபையானது, இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பது எவ்வாறிருப்பினும், (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய பணிப் பாளரை, பிரதான நிறைவேற்றலுவலரை, முகாமையாளரை, ஊழியரை, முகவரை, ஒப்பந்தகாரரை அல்லது (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட வேறெவரேனுமாளை, அவ்வாறு பிழையானவழியில் ஈட்டப்பட்ட அல்லது பிழையானவழியில் இழக்கச்செய்யப்பட்ட பணத்தை அல்லது ஆதனத்தை, சபை

தகுதியானதென எண்ணக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் அத்தகைய பணத்தின்மீதான அல்லது ஆதனத்தின்மீதான வட்டியுடனும், சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள்ளும் நிதிக்கம்பெனிக்கு மீளச் செலுத்தும்படி, மீட்டளிக்கும்படி அல்லது நட்டஈடாகச் செலுத்தும் படி தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாள், அவ்வுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பணத்தை அல்லது ஆதனத்தை நிதிக்கம்பெனிக்கு மீளச்செலுத்துவதற்கு, மீட்டளிப் பதற்கு அல்லது நட்டஈடாகச் செலுத்துவதற்குத் தவறுமிடத்து, சபையானது -

(அ) (i) அத்தகைய ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப் பட்டதும்; அல்லது

(ii) அத்தகைய ஆள் அதில் நன்மைபயக்கும் அக்கறை யைக் கொண்டுள்ளதும்; அல்லது

(iii) குறித்துரைக்கப்பட்டவொரு தேதியன்றுள்ளவா றாக அல்லது குறித்துரைக்கப்பட்டவொரு காலப் பகுதியினுள், எத்தகையதுமான எம்முறையிலேனும் கையுதிர்க்கப்பட்ட ஆதனங்களும் வேறு சொத்துக் களும் உட்பட, அத்தகைய ஆளின் ஓர் உறவினரி னால் அல்லது வேறெவரேனுமாளினால், அத்த கைய ஆளுக்காக நம்பிக்கைப்பொறுப்பில், கொள்ளப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட அல்லது வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமையில் வைத்திருக்கப்பட்ட,

எவையேனும் பணங்களின், ஆதனங்களின் அல்லது வேறு சொத்துக்களின் பெறுமதியையும், தன்மையையும், அவை இருக்கின்ற இடங்களையும் குறித்துரைக்கப்பட்டவொரு காலத் தினுள் அதனால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமலுவலருக்கு வெளிவிடும்படி அத்தகைய ஆளைப் பணிக்கலாம்;

(ஆ) எந்நேரத்திலேனும் அல்லது சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்தில் அத்தகைய ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது உடைமை கொள்ளப்பட்ட எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களையும் எடுத்துக் கூறுகின்றதும், எடுத்துக்கூறப்பட்ட ஆதனங்களுள் ஒவ்வொன்றும் கொள்ளப்பட்ட தேதியையும், கொள்ளுதலானது, கொள்வனவு, கொடை, இறுதிவிருப்பாவணக்கொடை அல்லது வழியுரிமை என்ற வகையாகவோ அல்லது வேறுவகையாகவோ செய்யப்பட்டதாவென்பதையும் கூறுகின்றதுமான சத்தியக் கடதாசியொன்றைக் கொடுத்துதவும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்;

(இ) வேறெவரேனுமாளை -

(i) அத்தகைய தகவல் ஒரு நிதிக்கம்பெனியின் அலுவல்களைப் புலனாய்வுசெய்வதற்கு உதவக்கூடுமென நம்புவதற்கு சபைக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, எந்நேரத்திலேனும் அல்லது சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரத்தில் அத்தகைய ஆளினால் சொந்தமாகவைத்திருக்கப்பட்ட அல்லது உடைமை கொள்ளப்பட்ட எல்லா அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களையும் எடுத்துக்கூறுகின்றதும் ;

(ii) சபையின் அபிப்பிராயப்படி அத்தகைய புலனாய்வுகளுக்கு இயைபானவையாகவுள்ள அத்தகைய வேறு கருமங்களின் விவரங்களைக் கொண்டுள்ளதும்,

ஆன சத்தியக்கடதாசியொன்றைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம்;

(ஈ) விடயத்துக்கேற்ப, இலங்கையிலுள்ள ஏதேனும் வங்கியின் அல்லது ஏதேனும் நிதிக்கம்பெனியின் பிரதான நிறைவேற்றலுவலரை, அறிவித்தலிற் குறித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் அத்தகைய ஆளின் கணக்குத்தொடர்பான பதிவீடுகளைக் கொண்டுள்ள வங்கியின் ஏதேனும் புத்தகத்தை, ஆவணத்தை அல்லது காசோலையை அல்லது நிதிக்கம்பெனியின் ஏதேனும் புத்தகத்தை, ஆவணத்தை அல்லது சான்றிதழைக் காண்பிக்கும்படி அல்லது அவ்வாறு குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பதிவீடுகளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி களைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம்;

இப்பந்தியின் நோக்கத்துக்காக, ''ஆவணம்'' என்பது, ஏதேனும் காப்பு வைப்புப்பெட்டி பற்றிய விபரங்களை உள்ளடக்குதல் வேண்டும்;

(உ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாகவுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியை, அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டவாறு, அத்தகைய ஆளின் அலுவல்கள் தொடர்பாக அவருக்குக் கிடைக்கக்கூடிய எல்லாத் தகவல்களையும் கொடுத்துதவும்படியும், அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டவாறு, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் உடைமையிலுள்ளதும் அல்லது அவரின் கட்டுப்பாட்டின் கீழுள்ளதும், அத்தகைய ஆள் தொடர்பானதுமான ஏதேனும் ஆவணத்தை அல்லது ஏதேனும் ஆவணத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியைக் காண்பிக்கும்படியும் அல்லது கொடுத்துதவும்படியும் தேவைப்படுத்தலாம் ;

(ஊ) அதனால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்குப் பந்தி (அ)இன் நியதிகளின்படி தேவைப்படுத்தப்பட்ட

ஏதேனும் தகவலைக் கொடுத்துதவும்படி எத்தகையனவு மான எவ்வழி வகைகள் மூலமும் பொதுமக்களைக் கோரலாம் ;

(எ) அத்தகைய ஆளின் கணக்குகளையும் காப்பு வைப்புப் பெட்டிகளையும், அவை தனியாகவோ அல்லது கூட்டாகவோ வைத்திருக்கப்படினும்சரி, சபையினால் குறித்துரைக்கப்படும் ஒரு தொகைவரை முடக்கிவைக் கும்படி ஏதேனும் வங்கியின் அல்லது நிதிக்கம்பெனி யின் பிரதான நிறைவேற்றலுவலருக்கு அறிவித்த லொன்றைச் சேர்ப்பிக்கலாம்.

இப்பந்தியின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் அறிவித்தலும், அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக் கப்பட்ட காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்; எவ்வாறாயினும், அத்தகைய காலப்பகுதி தொண்ணூறு நாட்களை விஞ்சுத லாகாதென்பதுடன், இப்பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்று வலுவிலுள்ள காலப்பகுதியின் போது அறிவித்தலுக்கு முரணாக நிதிகளின் ஏதேனும் கைமாற்றம், வறிதான தாகவும் பயனெதுவும் இல்லாததாகவும் இருத்தல் வேண்டும் ;

(ஏ) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனு மாளுக்கு அல்லது முதற் கூறப்பட்ட ஆளுக்காக நம்பிக் கைப்பொறுப்பில் ஆதனத்தை அல்லது சொத்துக்களை வைத்திருக்கும் ஓர் உறவினருக்கு அல்லது வேறு ஆளுக்கு அல்லது நிதிக்கம்பெனியின் நிதிகளுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலனவான பணங்களின் முறை கேடான பயன்பாட்டின்மூலம் அல்லது துர்ப்பிர யோகத்தின்மூலம் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட ஆதனத்தை அல்லது சொத்துக்களை வைத்திருக்கும் வேறெவரேனுமாளுக்கு, ஓர் அறி வித்தலில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் ஆதனங் களிலான அல்லது வேறு சொத்துக்களிலான உடை மையை, சொத்தாண்மையை அல்லது ஏதேனும்

அக்கறையை அத்தகைய ஆள், அத்தகைய ஆளின் உறவினர் அல்லது வேறு ஆள் கைமாற்றுவதனைத் தடைசெய்கின்றதும், அத்துடன் பின்வருவனவற்றைப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்கும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துகின்றதுமான அக்கட்டளையை எவரேனுமாளுக்குச் சேர்ப்பித்தல் வேண்டும்:-

(i) அசைவற்ற ஆதனத்தின் விடயத்தில், அத்தகைய ஆதனத்தின் உரித்துத் தொடர்பான உறுதிகளின் பிரதிகள்;

(ii) ஒரு மோட்டார் வாகனத்தின் விடயத்தில், அம் மோட்டாார் வாகனம் தொடர்பில் மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழின் பிரதி;

(iii) மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த அசைவுள்ள ஆதனத்தின் விடயத்தில், சொத்தாண்மைக்கான எண்பிப்பாக ஆவணங்களின் பிரதிகள்,

இப்பந்தியின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் அறிவித்தலும், அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கு வலுவிலிருத்தல் வேண்டும்; எவ்வாறாயினும், அக்காலப்பகுதி, தொண்ணூறு நாட்களை விஞ்சுதலாகாதென்பதுடன், இப்பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்று வலுவிலிருக்கும் காலப்பகுதியின்போது அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்திலான அல்லது சொத்துக்களிலான சொத்தாண்மையின், உடைமையின் அல்லது வேறு அக்கறையின் ஏதேனும் கைமாற்றம் வெற்றானதாகவும் பயனெதுவும் இல்லாததாகவும் இருத்தலும் வேண்டும்;

(ஐ) (ஏ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தலின் பிரதியை, அசைவற்ற ஆதனத்தின் விடயத்தில் காணிப் பதிவாளரும், மோட்டார் வாகனங்களின்

விடயத்தில் மோட்டார் வாகன ஆணையாளரும், ஏதேனும் கம்பெனியின் பங்குகள், பங்குத்தொகுதிகள் மற்றும் தொகுதிக்கடன் பத்திரங்கள் என்பவற்றின் விடயத்தில் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதி பதியும் இயைபான நிதிக்கம்பெனியின் செயலாளரும் ஏற்புடையற்பாலவிடத்து, 1987ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பங்குத்தொகுதிகள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையின் பணிப்பாளர் தலைமையதிபதியும், அரசாங்கப் பிணைப்பொறுப்புக் களின் விடயத்தில் (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி மற்றும் பிணையங்கள் கட்டளைச்சட்டம், (417 ஆம் அத்தியாயமான) திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டம் என்பவற்றின் நியதி களின்படி நியமிக்கப்பட்ட முதனிலை விற்பனையாளர் களும் உட்பட, எவரேனும் இயைபான அதிகாரிக்குப் பந்தி (ஏ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித்தலின் பிரதியைச் சேர்ப்பித்தல் வேண்டும்;

(ஒ) பந்தி (ஐ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தலின் பிரதி எந்த அதிகாரிக்குச் சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் அதிகாரியை, அத்தகைய அதிகாரி யின் கட்டுக்காப்பிலுள்ள தோதான புத்தகங்களில் அல்லது பதிவேடுகளில் அத்தகைய அறிவித்தலைப் பதிவுசெய்யும்படி தேவைப்படுத்துதல் வேண்டுமென் பதுடன், அறிவித்தலொன்று வலுவிலிருக்கும் காலப் பகுதியின்போது, காணிப்பதிவாளரும், மோட்டார் வாகன ஆணையாளரும், கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியும், (1) ஆம் பந்தியின்கீழ் வேறு எந்த இயைபான அதிகாரிக்கு அத்தகைய அறிவித்தலின் பிரதியொன்று சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த வேறு எவரேனும் இயைபான அதிகாரியும், அவ்வறிவித் தலில் குறித்துரைக்கப்பட்ட ஆதனம் அல்லது சொத் துக்கள் தொடர்பான ஏதேனும் கைமாற்றல் உறுதியை அல்லது சாதனத்தை அல்லது வேறு உரித்தாவணத் தைப் பதிவுசெய்தலாகாது;

(ஓ) பந்திகள் (ஈ) மற்றும் (ஐ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாளை அல்லது அதிகாரியை, (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாளின் அல்லது ஆளொருவரினது உறவினரின் சொத்துக்கள் தொடர்பாக அவரது உடைமையில் அல்லது கட்டுக் காப்பில் இருக்கக்கூடியவாறான அத்தகைய தகவலைக் கொடுத்துதவும்படி தேவைப்படுத்துதல் வேண்டும்;

(ஔ) (i) பந்திகள் (எ) மற்றும் (ஏ) என்பவற்றின்கீழ் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தல்களிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுறுமுன்னர், பணிப்பாளர், அத்தகைய அறிவித்தல்களிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஆதனம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த மாவட்டத்தில் நியாயாதிக்கங் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்துக்கு, அத்தகைய ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனைசெய்வதற்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றுக்காகவும், அத்தகைய ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதற்கான நிறைவேற்றெழுத்தாணையொன்றுக்காகவும், சுருக்க நடவடிக்கைமுறை என்ற வகையாக விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(ii) மாவட்ட நீதிமன்றம், (i) ஆம் உட்பந்தியின்கீழ் அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீதும், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய கடந்தகால அல்லது தற்போதைய பணிப்பாளர், பிரதான நிறைவேற்றலுவலர், முகாமையாளர், ஊழியர், முகவர், ஒப்பந்தகாரர் அல்லது வேறெவரேனும் ஆள், ஒரு செயல் அல்லது செய்யாமை மூலம், கம்பெனிக்குச் சொந்தமான ஏதேனும் பணத்தின் அல்லது ஆதனத்தின் பிழையானவழியிலான ஈட்டுகையை அல்லது கம்பெனிக்குப் பிழையான வழியிலான இழப்பைத் தனக்காக அல்லது

வேறெவரேனும் ஆளுக்காக விளைவித்துள்ளாரெனத் திருப்திப்படுவதன்மீதும், ஏதேனும் வங்கியின் அல்லது நிதிக்கம்பெனியின் பிரதான நிறைவேற்றலுவலரை, அத்தகைய ஆளின் கணக்குகளிலுள்ள நிதிகளிலிருந்து, அவை தனியாகவோ அல்லது கூட்டாகவோ வைத்திருக்கப்படினுஞ்சரி, (எ) என்னும் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தல்களில் சபையினால் குறித்துரைக்கப்பட்ட தொகையை மாவட்ட நீதிமன்றத்தில் வைப்பிடுமாறு பணித்தல் வேண்டுமென்பதுடன், மாவட்ட நீதிமன்றமானது, அவ்வாறு இடப்பட்ட வைப்புக்களைக் கைப்பற்றுவதற்குப் பிசுக்காலுக்கு அதிகாரமளிக்கின்றதும், அவரைத் தேவைப்படுத்துகின்றதுமான நிறைவேற்றெழுத்தாணையொன்று அவருக்கு வழங்கப்படும்படி பணித்தலும் வேண்டும்.

(iii) மாவட்ட நீதிமன்றம், இப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியின் கீழ் அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீதும், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய கடந்த கால அல்லது தற்போதைய பணிப்பாளர், பிரதான நிறைவேற்றலுவலர், முகாமையாளர், ஊழியர், முகவர், ஒப்பந்தகாரர் அல்லது வேறு எவரேனுமாள், ஒரு செயலினால் அல்லது செய்யாமையினால், கம்பெனிக்குச் சொந்தமான ஏதேனும் பணத்தின் அல்லது ஆதனத்தின் பிழையான வழியிலான ஈட்டுகையைத் தனக்காக அல்லது வேறெவரேனுமாளுக்காக விளைவித்துள்ளாரென அல்லது கம்பெனிக்குப் பிழையான வழியிலான இழப்பை விளைவித்துள்ளாரெனத் திருப்திப்படுவதன்மீதும், பின்வருவனவற்றைக் கைப்பற்றி விற்பனை செய்யும்படி பிசுக்காலுக்கு அதிகாரமளிக்கின்றதும், அவரைத் தேவைப்

படுத்துகின்றதுமான நிறைவேற்றெழுத்தாணையொன்று அவருக்கு வழங்கப்படும்படி பணித்தல் வேண்டும்:-

(அ) நிதிக் கம்பெனியின் அத்தகைய பணிப்பாளரினால், பிரதான நிறைவேற்றலுவலரினால், முகாமையாளரினால், ஊழியரினால், முகவரினால் அல்லது ஒப்பந்தகாரரினால் அல்லது அவ்வாறு பிழையான வழியில் ஈட்டிய ஆளினால் அல்லது ஆட்களினால் சொந்தமாகவைத்திருக்கப்பட்ட ஏதேனும் ஆதனம் அல்லது சொத்துக்கள்; அல்லது

(ஆ) நிதிக்கம்பெனியின் அத்தகைய பணிப்பாளருக்காக, பிரதான நிறைவேற்றலுவலருக்காக, முகாமையாளருக்காக, ஊழிய ருக்காக, முகவருக்காக அல்லது ஒப்பந்தகாரருக்காக உறவினரொருவரினால் அல்லது வேறெவரேனுமாளினால் நம்பிக்கையில் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் ஆதனம் அல்லது சொத்துக்கள்; அல்லது

(இ) நிதிக்கம்பெனியின் சொத்துக்களுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலனவான பணங்களின்மூலம் கொள்ளப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட ஏதேனும் ஆதனம் அல்லது சொத்துக்கள்.

(iv) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 217 முதல் 297 வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள், இப்பந்தியின் (ii) ஆம், (iii) ஆம் உட்பந்திகளின்கீழ் வழங்கப்பட்ட நிறைவேற்

றெழுத்தாணையின்கீழ் ஏதேனும் ஆதனத்தின் கைப்பற்றுகைக்கும் விற்பனைக்கும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(v) இப்பந்தியின்கீழ் ஏதேனும் ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன்மூலம் தேறிப் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை, பின்வருமாறு நீதிமன்றத் தினால் பயன்படுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) முதலாவதாக, அத்தகைய ஆதனத்தைக் கைப்பற்றி, வைத்திருந்து, விற்பனை செய்வதில் உறப்பட்ட ஆகுசெலவுகளையும் இறுப்பனவுகளையும் கொடுப்பனவு செய்வதிலும் ;

(ஆ) இரண்டாவதாக, இப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்டதும், நிதிக் கம்பெனிக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதென நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டதுமான தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதிலும்;

அத்துடன் மீதியானது, கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(vi) ஏதேனும் பணம், இப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் நியதிகளின்படி கைப்பற்றப்படுமிடத்து, (ii) ஆம் உட்பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்டதும், நிதிக்கம்பெனிக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதென நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டதுமான தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதில் நீதிமன்றத்தினால் அது பயன்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

மீதியானது, அத்தகைய பணம் எவ்வாளுக்கு வருமதியாகவுள்ளதோ அவ்வாளுக்குத் திருப்பிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒரு செயலினால் அல்லது செய்யாமையினால் -

(அ) ஒரு நிதிக்கம்பெனிக்குச் சொந்தமான ஏதேனும் பணத்தின் அல்லது ஆதனத்தின் பிழைவழியிலான ஈட்டுகையைத் தனக்காக அல்லது வேறெவரேனு மாளுக்காக விளைவித்துள்ளவரும்; அல்லது

(ஆ) ஒரு நிதிக்கம்பெனிக்குப் பிழைவழியிலான இழப்பை விளைவித்துள்ளவரும்,

ஆன அக்கம்பெனியின் எவரேனும் கடந்தகால அல்லது தற்போதைய பணிப்பாளர், பிரதான நிறைவேற்றலுவலர், முகாமையாளர், ஊழியர், முகவர் அல்லது ஒப்பந்தகாரர் இச் சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண் டும்.

ஒரு நிதிக் கம்பெனியின் பணிப்பாளர், செயலாளர், பிரதான நிறைவேற் றலுவலர், முகாமை யாளர், அலுவலர், ஊழியர் அல்லது கணக்காய் வாளர் ஒருவரி னாலான தவறுகள்.

**52.** (1) ஒரு நிதிக்கம்பெனியின் பணிப்பாளர், செயலாளர், பிரதான நிறைவேற்றலுவலர், முகாமையாளர், அலுவலர், ஊழியர் அல்லது கணக்காய்வாளர் ஒருவராகவுள்ளவரும்-

(அ) இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அந்நிதிக் கம்பெனி இணங்கியொழுகுகின்றமையை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான எல்லா நடபடிகளையும் எடுப்பதற்குத் தவறுகின்றவரும்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் சபையினால் வழங் கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் விதியுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்றவரும்;

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பணிப்பாளரினால் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புடன் அல்லது விதிக்கப்பட்ட தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகுவதற்குத் தவறுகின்றவரும்;

(ஈ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அத்தகைய நிதிக் கம்பெனியினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் கூற்றின் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு நியாயமான எல்லா நடபடிகளையும் எடுப்பதற்குத் தவறுகின்றவரும்;

(உ) அத்தகைய நிதிக்கம்பெனியின் தொழில் அலுவல்கள், கொடுக்கல்வாங்கல்கள், நிபந்தனைகள், சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அல்லது கணக்குகள் என்பன தொடர்பான ஏதேனும் புத்தகத்தில், பதிவேட்டில், கோப்பில், இடாப்பில் அல்லது அத்தகைய வேறு ஆவணத்தில் அல்லது கூற்றில் பொய்யான பதிவீடொன்றைச் செய்கின்றவரும் அல்லது அத்தகைய பதிவீட்டைச் செய்விக்கின்றவரும்;

(ஊ) அத்தகைய நிதிக்கம்பெனியின் தொழில் அலுவல்கள், கொடுக்கல்வாங்கல்கள், நிபந்தனைகள், சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அல்லது கணக்குகள் என்பன தொடர்பான ஏதேனும் புத்தகத்தில், பதிவேட்டில், கோப்பில், இடாப்பில் அல்லது அத்தகைய வேறு ஆவணத்தில் அல்லது கூற்றில் பதிவீடொன்றைச் செய்யாதுவிடுகின்றவரும் அல்லது அத்தகைய பதிவீடு செய்யாதுவிடப்படுவதனைச் செய்விக்கின்றவரும்;

(எ) அத்தகைய நிதிக்கம்பெனியின் தொழில் அலுவல்கள், கொடுக்கல்வாங்கல்கள், நிபந்தனைகள், சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அல்லது கணக்குகள் என்பன தொடர்பான ஏதேனும் புத்தகத்தில், பதிவேட்டில், கோப்பில், இடாப்பில் அல்லது அத்தகைய வேறு ஆவணத்தில் அல்லது கூற்றில் உள்ள ஏதேனும்

பதிவீட்டை மாற்றுகின்றவரும், பொழிப்பெடுக்கின்றவரும், மறைத்துவைக்கின்றவரும், அழித்துவிடுகின்றவரும் அல்லது அழிக்கின்றவரும் அல்லது அத்தகைய ஏதேனும் பதிவீடு மாற்றப்படுவதனை, பொழிப்பெடுக்கப்படுவதனை, மறைத்துவைக்கப்படுவதனை, அழித்துவிடப்படுவதனை அல்லது அழிக்கப்படுவதனைச் செய்விக்கின்றவரும்; அல்லது

(ஏ) அத்தகைய நிதிக்கம்பெனியின் உண்மையான நிலைமையை மறைத்துவைக்கின்ற நோக்கத்துக்காக பல்வேறுவகைப்பட்ட தொகுதியினவான புத்தகங்களை, பதிவேடுகளை, கோப்புகளை, இடாப்புக்களை அல்லது அத்தகைய வேறு ஆவணங்களைப் பேணுகின்றவரும்,

ஆன எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆளொருவருக்கெதிராகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் குற்றவழக்கில், இச்சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகின்றமையை உறுதிப்படுத்துகின்ற கடமை அல்லது பிரச்சினையிலுள்ள கூற்றுக்கள் செம்மையாக விருந்தனவென்பதை உறுதிப்படுத்துகின்ற கடமை இன்னோராளுக்குப் பொறுப்பிக்கப்பட்டதென நம்புவதற்குத் தனக்கு நியாயமான ஏதுக்கள் இருந்தனவென்றும், அத்தகைய ஆள் அக்கடமையை நிறைவேற்றுவதற்குத் தகுதிவாய்ந்தவராகவும் அதனை நிறைவேற்றக்கூடிய நிலைமையிலும் இருந்தாரென்றும் எண்பிப்பது எதிர்வாதமொன்றாதல் வேண்டும்.

ஆட்கள் குழுக்களிலானா தவறுகள்.

**53.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்று ஆளொருவரினாற் புரியப்படுமிடத்து, அத்தகைய ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்று-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவுள்ள ஆளொருவரினாற் புரியப்படுமிடத்து, அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும் அல்லது செயலாளரும் ;

(ஆ) குழுமமொன்றாகவுள்ள ஆளொருவரினாற் புரியப்படுமிடத்து, அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும் ; அல்லது

(இ) குழுமமொன்றுதவிர்ந்த கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவுள்ள ஆளொருவரினாற் புரியப்படுமிடத்து, அத்தகைய குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும்,

அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஆளெவரும் தவறொன்று தாம் அறியாமல் புரியப்பட்டதென்றும், அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தாம் உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தாரென்றும் எண்பித்தால், அவர் அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மீதான கேட்பும் முடிபும்.

**54**. இச்சட்டத்தின்கீழான தவறுகளுக்காக இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் மேல் நீதிமன்றமொன்றில் அல்லது நீதிவான் நீதிமன்றமொன்றில் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படுமிடத்து, வழக்குகளைக் கையாண்டு தீர்ப்பதற்கு நீதிமன்றம் முன்னுரிமை கொடுத்தல் வேண்டும்.

ஒரு தவறைப் புரிவதற்கு உடந்தையாகவிருத்தல் தவறொன்றாதல்.

**55**. இச்சட்டத்தின்கீழான தவறைப் புரிவதற்கு உடந்தையாகவிருக்கின்ற, சதிசெய்கின்ற அல்லது புரிவதற்கு எத்தனிக்கின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின்கீழ் நிலையான தவறுக்காகத் தண்டிக்கப்படற்பாலவரான அதேமுறையில் தண்டிக்கப்படற்பாலவராதலும் வேண்டும்.

**56.** (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள், மேல் நீதிமன்றத்தின்முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஐம்பது இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் மற்றும் நீதிமன்றத்தின் மேற்பார்வையின்கீழ் வைப்பீட்டாளர்களுக்கும் ஏனைய கடன்கொடுத்தோருக்கும் அத்தகைய ஆளின் பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்ப்பதற்கும் ஆளாதல் வேண்டும் : தண்டங்கள்.

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் 53 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்குவதன்மூலம் 2 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் காணப்படும் எவரேனுமாள், விடயத்துக்கேற்ப, இயைபான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவின் பொறுப்புக்களை, நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய அளவுக்கும் கொடுத்துத் தீர்த்தல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய ஆளின் அல்லது விடயத்துக்கேற்ப, இயைபான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவின் கடனாளிகளை, நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய காலத்தினுள்ளும் தமது தனிசுகளை மீளச் செலுத்தும்படி நீதிமன்றம் பணிக்கலாம்.

(2) இச்சட்டத்தின் 5ஆம் பிரிவின் (9)ஆம் உட்பிரிவு, 20 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 24 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு, 31 ஆம் பிரிவின் (2) ஆம், (7) ஆம் உட்பிரிவுகள், 42 ஆம் பிரிவின் (11) ஆம் உட்பிரிவு, 51 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு அல்லது 52 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு என்பவற்றின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்

பளிக்கப்படுவதன்மேல், முப்பது இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழும் 50 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழும் தவறொன்றுக்குக் குற்றவாளியாகவுள்ள எவரேனுமாள், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத் துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் விதியை, பணிப்பை, கட்டளையை அல்லது தேவைப்பாட்டை மீறுகின்ற அல்லது அவற்றுக்கிணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனு மாள், அத்தகைய மீறுகை அல்லது இணங்கியொழுகாமை (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் நியதிகளின்படி தவறொன்றாகவமைகின்றவிடத்துத் தவிர, இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

குற்றப்பணம் செலுத்துவதற்காக நிதிகளைப் பயன்படுததுதல்.

**57.** (1) குற்றப்பணமொன்றைச் செலுத்தும்படி கட்டளையிடப் பட்ட கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவின் பணிப்பாளர், முகாமையாளர் அல்லது செயலாளர் ஒருவர் அல்லது கூட்டிணைக்கப்படாதவொரு குழுவின் உறுப்பினர் ஒருவர்,

அத்தகைய குற்றப்பணத்தை அல்லது அதன் பாகத்தைச் செலுத்துவதற்காக, விடயத்துக்கேற்ப, அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவின் எவையேனும் நிதிகளை அவர் பயன்படுத்தினால், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள், நீதிவானொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், பத்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் மற்றும் குற்றப்பணத்தைச் செலுத்துவதற்கு அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவிலிருந்து அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவிலிருந்து அவர் பயன்படுத்திய நிதிகளின் தொகைக்குச் சமமான தொகையொன்றை அத்தகைய கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அல்லது கூட்டிணைக்கப்படாத குழுவுக்கு மீட்டளிப்பதற்கும் ஆளாதல் வேண்டும்.

குறித்தசில கட்டளைகளுக் கெதிரான மேன்முறையீடு களுக்கான ஏற்பாடு.

**58.** (1) ஐந்தாம் பிரிவின்கீழ் அல்லது 12 ஆம் பிரிவின்கீழ் அல்லது 25 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 31ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது 34 ஆம் பிரிவின்கீழ் அல்லது 36 ஆம் பிரிவின்கீழ் அல்லது 37 ஆம் பிரிவின்கீழ் அல்லது 42 ஆம் பிரிவின்கீழ் அல்லது 51 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாக, வழங்கப்பட்டதாக அல்லது விதிக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் தீர்மானத்தினால் அல்லது முடிபினால், பணிப்பினால் அல்லது தேவைப்பாட்டினால் இன்னலுற்ற அல்லது அத்தகைய ஏதேனும் பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலினால் அல்லது ஏதேனும் நடபடியினால் தாம் பாதிக்கப்படுவாரென அஞ்சுகின்ற ஆளெவரும், நிரந்தரமான அல்லது இடைக்காலத் தடைக்கட்டளையொன்றுக்கு, கட்டாணை

யொன்றுக்கு, நிறுத்திவைத்தற் கட்டளையொன்றுக்கு அல்லது அத்தகைய கட்டளைக்குப் பயன்கொடுப்பதிலிருந்து சபையை நிறுத்திவைக்கின்ற, தடைசெய்கின்ற அல்லது தடுக்கின்ற பயனைக் கொண்டுள்ள வேறேதேனும் கட்டளைக்கு உரித்துடையவராதலாகாது.

(2) (அ) அரசியலமைப்பின் 140ஆம் உறுப்புரையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அளிக்கப்பட்ட நியாயாதிக்கம், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பிரிவுகளின்கீழான அல்லது பிரிவுகளின்கீழானதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் தீர்மானம், முடிபு, பணிப்பு அல்லது தேவைப்பாடு தொடர்பாக உயர்நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்; மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அல்ல.

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட நியாயாதிக்கத்தை இறைஞ்சிக்கேட்கும் ஒவ்வொரு விண்ணப்பமும், அத்தகைய விண்ணப்பம் எந்தச் செயல் தொடர்பில் அல்லது எந்தச் செயல்தொடர்பாகச் செய்யப்படுகின்றதோ அந்தச் செயல் புரியப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்தினுட் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், உயர்நீதிமன்றம், அத்தகைய விண்ணப்பம் கோப்பிடப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களினுள் அத்தகைய விண்ணப்பத்தைக் கேட்டு இறுதியாகக் கையாண்டுதீர்த்தலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும், அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பில் அல்லது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் உயர்நீதிமன்றம் வேறுவகையில் சட்டமுறையாகப் பிரயோகிக்கக்கூடிய தத்துவங்களைப் பாதித்தலாகாது.

(4) உயர்நீதிமன்றமானது, சபைக்கெதிராக ஏதேனும் இடைக்கால அல்லது இறுதிக் கட்டளையை ஆக்குமுன்னர், இப்பிரிவினால் அதற்களிக்கப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில், கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றைச் சபைக்கு அளித்தல் வேண்டும்.

## பாகம் IX

### பொது

*நிதியம்.*

**59.** (1) "நிதிசார் கருமங்கள்மீது பொதுமக்களின் விழிப்புணர்ச்சியை அதிகரித்தல் நிதியம்" எனவழைக்கப்படும் நிதியமொன்று இருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் பெறப்பட்ட எல்லாக் குற்றப்பணங்களும் நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நிதியத்தின் வரவுக்கிருக்கும் பணம், சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான நோக்கங்களுக்காகவும் அத்தகையவொரு முறையிலும் பயன்படுத்தவும் படலாம்.

(3) இச்சட்டம் நடைமுறைக்குவருகின்ற தேதியன்றுள்ளவாறாக மத்திய வங்கியின் வைப்பீட்டாளர்களின் நிவாரண நிதியத்தின் வரவுக்கிருக்கும் தொகை நிதியத்துக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

*பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான அதிகாரமும் தத்துவங்களைக் கையளித்தலும்.*

**60.** (1) சபையினால் அதற்கென ஆக்கப்படக்கூடிய அத்தகைய விதிகள் எவையேனுமிருப்பின் அவற்றுக்கமையவும் அவற்றுக்கிணங்கவும், சபையானது, இச்சட்டத்தின் நோக்கங்களுள் எவற்றுக்காகவும் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு மத்திய வங்கியின் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம்; எவ்வாறாயினும், சபையானது, அத்தகைய அதிகாரவளிப்பின்கீழ் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் அத்தகைய அலுவலரினால் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்காக அல்லது காரியத்துக்காகப் பொறுப்பாகவிருத்தலும் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

(2) சபையானது, இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களுள் எவற்றையும் மத்திய வங்கியின் எவரேனும் அலுவலருக்கு எழுத்தில் கையளிக்கலாம்; எவ்வாறாயினும், சபையானது, அத்தகைய அலுவலருக்குக் கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அவரினாற் செய்யப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயலுக்காக அல்லது காரியத்துக்காகப் பொறுப்பாகவிருத்தலும் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

**61.** (1) ஏதேனும் நிதிக்கம்பெனியின் மற்றும் 38 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நியதிகளின்படி அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், அலுவலரும், முகவரும், நிதிக்கம்பெனியின் எல்லாக் கொடுக்கல்வாங்கல்களும், அதன் வாடிக்கையாளர்கள் அத்துடன் எவரேனுமாளினது கணக்குகளின் நிலைமை, மற்றும் அவை தொடர்பான எல்லாக் கருமங்களும் என்பன பற்றிக் கண்டிப்பாக இரகசியத்தைக் கடைப்பிடித்தல் வேண்டுமென்பதுடன், -

இரகசியம் பேணுதல்.

(அ) அத்தகைய பணிப்பாளரின், முகாமையாளரின், அலுவலரின், ஊழியரின் மற்றும் முகவரின் கடமைகளைப் புரிகையில், சட்டநீதிமன்றமொன்றினால் அல்லது அத்தகைய கருமம் எவ்வாளுடன் தொடர்புபட்டதோ அவ்வாளினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும் போது தவிரவும்; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுடனும் இணங்கியொழுகுவதற்கெனத் தவிரவும்,

அத்தகைய ஏதேனும் கருமத்தை வெளிவிடுதலுமாகாது.

(2) ஏதேனும் நிதிக்கம்பெனியின் மற்றும் 38 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நியதிகளின்படி அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், அலுவலரும், ஊழியரும், முகவரும், (1) ஆம் உட்பிரிவுக்கிணங்கக் கண்டிப்பாகத் தாம் இரகசியத்தைக் கடைப்பிடிப்பாரென வாக்குறுதியளித்து வெளிப்படுத்துகையொன்றைக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(3) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், நிதித்தொழிலிலான வழக்கமான செயல்முறைகளுக்கிணங்க ஒரு வாடிக்கையாளர்தொடர்பான அபிப்பிராயமொன்றை அல்லது குறிப்பீடொன்றை வேண்டுகோளின்மீது நிதிக்கம்பெனியொன்று இன்னொரு நிதிக்கம்பெனிக்கு நல்லெண்ணத்துடன் வழங்குவதனைத் தடைசெய்தலாகாது.

**62.** இச்சட்டத்தின் 61 ஆம் பிரிவில் அல்லது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் 77 ஆம் பிரிவில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் நிதிக்கம்பெனியின் அல்லது ஏதேனும் வங்கியின் ஒவ்வொரு பணிப்பாளரும், முகாமையாளரும், அலுவலரும், ஊழியரும், முகவரும், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கு முரணாக நிதித்தொழிலைக் கொண்டு நடாத்துகின்றார் அல்லது பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்றார் என அத்தகைய நிதிக்கம்பெனியின் அல்லது வங்கியின் எந்த வாடிக்கையாளர் தொடர்பில் அவருக்கு நியாயமான சந்தேகமுள்ளதோ அந்த எவரேனும் வாடிக்கையாளர்பற்றிப் பணிப்பாளருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

*அதிகாரமின்றி நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற அல்லது வைப்புக்களை ஏற்றுக் கொள்கின்ற ஆட்கள்பற்றி நிதிக்கம் பெனிகளும் வங்கிகளும் பணிப்பாள ருக்கு அறிவித்தல்.*

**63.** சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், பணிப்பாளரும், மற்றும் இச்சட்டத்தின்கீழ் சபையினால் அல்லது பணிப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சபையுறுப் பினர்கள், பணிப்பாளர், அதிகார மளிக்கப்பட்ட அலுவலர்கள் என்போர், பகிரங்க சேவையாளர் களாகக் கருதப்படுதல்.*

**64.** பணிப்பாளர் அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இச்சட்டத்தின்கீழான தவறுகள்தொடர்பிலான வழக்குநடவடிக்கைகளைத் தொடுக்கும் நோக்கத்துக்காக 1979ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் கருத்துக்குட்பட பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்:

*பணிப்பாளர் மற்றும் அதிகார மளிக்கப்பட்ட அலுவலர்கள், பகிரங்க அலுவலர் களாகக் கருதப்படுதல்.*

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகப் புரியப்பட்ட தவறொன்று தொடர்பில், சபையானது, குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதனைக் கவனத்துட்கொள்ளும்படி சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

*தவறுகள் பிடியாணை யின்றிக் கைது செய்யத் தக்கனவாகவும் பிணையில் விடுபடற்பாலன வாகவு மிருத்தல் வேண்டும்.*

**65**. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச் சட்டத்தின்கீழான ஒவ்வொரு தவறும், சட்டக்கோவையின் கருத்துக் குட்படவும் அதன் நோக்கத்துக்காகவும் பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தக்கதாகவும் மற்றும் பிணையில்விடுபடற்பாலதாக வும் இருத்தல் வேண்டும்.

*குற்றவழக்குக் கான முந்நிபந்தனை.*

**66**. (1) சபைக்கு அல்லது அதன் உறுப்பினரொருவருக்கு அல்லது பணிப்பாளருக்கு அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலருக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக அல்லது ஏதேனும் கடமையை அல்லது பணியை நிறைவேற்றுவதற்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்படும் வேறெவரேனுமாளுக்கு எதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பின்கீழ், கட்டளையின்கீழ் அல்லது தேவைப்பாட்டின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட, அல்லது செய்யாது விடப்பட்ட ஏதேனும் செயல்காரணமாக, குற்றவழக்குக்காகச் சட்டத்துறைத் தலைமையதிபதியின் எழுத் திலான முன்னனுமதி பெறப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய குற்றவழக்கெதுவும் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடுக்கப்படுத லாகாது.

(2) சபையுறுப்பினரொருவரினால், பணிப்பாளரினால் அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலரினால் அல்லது சேவையாளரினால், விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் பணிப்பு, கட்டளை அல்லது தேவைப்பாடு என்பவற்றின்கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட அல்லது செய்யாதுவிடப்பட்ட ஏதேனும் செயல்தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அத்தகைய ஆளுக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரினால் அறவிடப்பட்டாலொழிய, சபையினால் செலுத்தப்படுதல் வேண்டும்.

சபையினால் தற்காலிக நிதிசார் உதவியும் உத்தரவாதங்களும் வழங்கப்படுதல்.

**67**. (1) பணிப்பாளர், ஏதேனும் நிதிக்கம்பெனியின் அலுவல்கள், தன்னால் அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலரினால் அல்லது பணிப்பாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாளினால் பரிசோதனை செய்யப்பட்டபின்னர் அல்லது அத்தகைய நிதிக்கம்பெனிக்குத் தற்காலிக நிதிசார் பணவசதியை வழங்குதல் வைப்பீட்டாளர்களின் நலனுக்கானதாகவிருக்குமென நிதிக்கம்பெனியிடமிருந்து பெறப்பட்ட தகவலின்மேல் திருப்திப்படுமிடத்து, பணிப்பாளர், சபைக்கு அதற்கிணங்க அறிக்கை செய்தல் வேண்டுமென்பதுடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது அத்தகைய நிதிக் கம்பெனிக்குக் கடன் வழங்கும் நோக்கத்துக்காக, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் 88உ என்னும் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட நடுத்தர, நீண்டகாலக் கடன்வழங்கு நிதியத்திலிருந்து வர்த்தக வங்கியொன்றுக்குக் கடனொன்றையும் அல்லது முற்பணமொன்றையும் வழங்கலாம்.

(2) பணச்சட்டத்தின் 88அ முதல் 88உ வரையிலான பிரிவுகளின் ஏற்பாடுகள், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் வர்த்தக வங்கியொன்றுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் கடனுக்கு அல்லது முற்பணத்துக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) சபையானது, இலங்கையில் தொழிற்படுகின்ற கடன் வழங்கு நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களுக்கும், முற்பணங்களுக்கும் அல்லது வேறு நிதிவசதிக்கும் உத்தரவாதமளிக்கலாம்.

(4) இப்பிரிவில் "கடன்வழங்கு நிறுவனம்" என்பது,-

(அ) 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வங்கி;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் நிதிக் கம்பெனி;

(இ) கடன்களையும் முற்பணங்களைம் வழங்குகின்றதும், அல்லது முதலீடுகளைச் செய்கின்றதும் அல்லது பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்கின்றதும், அரசாங்கத்தின்சார்பில் செயலாற்றுகின்றதுமான முகவர்நிலையம் அல்லது ஏதேனும் நிறுவனம் (ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தாயினுஞ்சரி அல்லது வேறு வகையான தாயினுஞ்சரி);

(ஈ) (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வங்கித்தொழில் நிறுவனமொன்றாகவுள்ளதென, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்ட வேறெவரேனுமாள்; அத்துடன்

(உ) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அத்தகைய ஏதேனும் சங்கம்,

என்று பொருளாகும்.

*அமைச்சரின் பணிப்புகள்.*

**68.** இச்சட்டத்தின் நெறிகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் பயன் கொடுக்கும் நோக்கத்துக்காக அமைச்சர் எழுத்திலான பொதுவான அல்லது விசேடமான பணிப்புகளைச் சபைக்கு விடுக்கலாமென்பதுடன், சபையானது அத்தகைய பணிப்புகளுக்குப் பயன்கொடுத்தலும் வேண்டும்.

*அமைச்சரின் ஒழுங்குவிதிகள்.*

**69.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட, அல்லது அவை தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட கருமங்கள்தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன்,

அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்கு விதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும்வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டபின்னர் வசதியானளவு விரைவாக, அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஆளொருவர் எங்குள்ளாரெனக் கண்டு பிடிப்பதற்குத் தகவல் கோருவதற்கான தத்துவம்.

**70.** இச்சட்டத்தின் நியதிகளின்படி நுண்ணாய்வொன்று அல்லது பரிசோதனையொன்று தொடங்கப்பட்டுள்ளவிடத்து அல்லது வழக்காடலொன்று தொடுக்கப்பட்டுள்ளவிடத்து, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பணிப்பாளர், அத்தகைய நுண்ணாய்வுக்கு, பரிசோதனைக்கு அல்லது வழக்காடலுக்கு அமைந்தவராகவுள்ள ஆளொருவர் எங்குள்ளாரெனக் கண்டுபிடிக்கும் நோக்கத்துக்காகப் பின்வருவனவற்றிலிருந்து எழுத்திலான அறிவித்தல் மூலம் தகவல் கோருவதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆளின் தொலைபேசி அல்லது இணையத்தளப் பாவனைதொடர்பாக இலங்கைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு அல்லது ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட எவையேனும் தொலைத் தொடர்புச் சேவைவழங்குநர்கள் அல்லது இணையத்தளச் சேவைவழங்குநர்கள் ; அவ்வாறு வழங்கப்பட்ட சேவையை அவர் எந்த அமைவிடத்திலிருந்து பயன்படுத்தியுள்ளார் என்பதும் அடிக்கடியாகவோ அல்லது குறிக்கப்பட்ட ஏதேனும் நேரத்திலோ என்பதும் உட்படவும் ; அத்துடன்

(ஆ) ஏதேனும் வங்கியுடன் அல்லது நிதிக்கம்பெனி யுடன் அத்தகைய ஆளினாற் செய்யப்பட்ட கொடுக்கல்வாங் கல்கள் தொடர்பாக அத்தகைய வங்கி அல்லது நிதிக்கம்பெனி ; அவர் கொடுக்கல்வாங்கல் செய்துள்ள கிளையின் அல்லது தன்னியக்கக் காசுப் பொறியின் அமைவிடமும், அடிக்கடியாகவோ அல்லது குறிக் கப்பட்ட ஏதேனும் நேரத்திலோ என்பதும் உட்படவும்.

**71.** (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது. நீக்கமும் பேணல்களும்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டம் நீக்கப்பட்டமை எவ்வாறிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற் போந்த நாளன்று வலுவிலுள்ளதாய் நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், அறிவித்தலும், கட்டளையும் அல்லது விதியும் அல்லது வழிகாட்டுநெறியும் அல்லது பணிப்பும், தேவைப்பாடும், செய்யப்பட்ட தீர்மானமும் அல்லது கையளிப்பும், அத்தகைய ஒழுங்குவிதி, அறிவித்தல், கட்டளை, விதி, வழிகாட்டுநெறி, பணிப்பு, தேவைப்பாடு, தீர்மானம் அல்லது கையளிப்பு இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அளவுவரை, இச்சட்டத்தின் ஏற்பாடு களின்கீழ், விடயத்துக்கேற்ப, வழங்கப்பட்ட, விதிக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஓர் ஒழுங்குவிதியாக, அறிவித்தலாக, கட்டளையாக, விதியாக, வழிகாட்டுநெறியாக, பணிப்பாக, தேவைப்பாடாக, தீர்மானமாக அல்லது கையளிப்பாகக் கருதப் படுதல் வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துகின்றவையும், 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டவையு மான கம்பெனிகள், இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(4)* ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டாம் ஆண்டின் *78* ஆம் இலக்க, நிதிக்கம்பெனிகள் சட்டத்தின் நியதிகளின்படி தொடுக்கப்பட்டவையும், இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற் போந்த நாளன்று நீதிவான் நீதிமன்றமொன்றில் அல்லது மாவட்ட நீதிமன்றமொன்றில் முடிவுறாதுள்ளவையுமான எல்லா வழக்குகளும், வழக்குநடவடிக்கைகளும் அல்லது கருமங்களும், சொல்லப்பட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் அல்லது மாவட்ட நீதிமன்றத்தினால் கேட்டுத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*இச்சட்டம் ஏனைய சட்டங்களிலும் மேலோங்கி நிற்றல்.*

**72.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கிநிற்றல் வேண்டும்.

*வைப்பு.*

**73.** *(1)* இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக "வைப்பு" என்பது, *(2)* ஆம், *(3)* ஆம் உட்பிரிவுகளுக்கமைய, வட்டியுடனோ அல்லது கட்டுப்பணத்துடனோ அல்லது அவையின்றியோ மற்றும் ஒன்றில், கோரிக்கையின்மீது அல்லது கொடுப்பனவைச் செய்கின்ற மற்றும் அதனைப் பெறுகின்ற ஆளினால் அல்லது அவர்சார்பில் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட ஒரு நேரத்திலும் அல்லது சூழ்நிலைகளிலும் அது எந்நியதிகளின்கீழ் மீளச்செலுத்தப்படுமோ அந்நியதிகளின்மீது செலுத்தப்பட்டவொரு பணத்தொகை என்று பொருளாகும்.

*(2)* பின்வரும் சந்தர்ப்பங்களுள் எவற்றிலும் *(1)* ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நியதிகளின்மீது செலுத்தப்பட்ட பணத்தொகையொன்று இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வைப்பொன்றாதலாகாது:-

*(அ)* (i) மத்திய வங்கியினால்;

(ii) *1988* ஆம் ஆண்டின் *30* ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு வங்கியினால், இச்சட்டத்தின் கருத்துக்குட்பட்ட நிதிக்கம்பெனியொன்றினால் மற்றும் சொல்

லப்பட்ட சட்டங்களின் உரிமமளிக்கும் தேவைப் பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆளொருவரினால்;

(iii) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் பணம் கடன்கொடுப்பதற்குக் குறிப்பாக அதிகாரமளிக்கப் பட்ட ஆளொருவரினால்;

(iv) அரசாங்கத்தினால், மாகாண சபையொன்றினால் அல்லது உள்ளூரதிகார சபையொன்றினால்;

(v) இலங்கை அரசாங்கத்தினால் மீளச் செலுத்துதல் உத்தரவாதமளிக்கப்படும் வேறேதேனும் மூலத்தினால்;

(vi) வெளிநாட்டு அரசாங்கமொன்றினால்;

(vii) புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி, சர்வதேச அபிவிருத்திக் கழகம், சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கி, அல்லது வேறேதேனும் பல்புடைக் கடன்கொடுக்கும் நிறுவனம் என்பவற்றினால்; அத்துடன்

(viii) இது தொடர்பாகச் சபையினால் குறித்துரைக்கப் படக்கூடிய வேறேதேனும் நிறுவனத்தினால்,

ஆன ஒரு கலப்புத் தனிசுச் சாதனமுட்பட, தனிசுச் சாதன மொன்றிலான கடன் அல்லது முதலீடு என்றவகையாகச் செலுத்தப்பட்டவொரு பணத்தொகை;

(ஆ) ஒரு கம்பெனியினால் இன்னொன்றுக்கு, முதற் குறிப்பிடப்பட்ட கம்பெனி மற்றதன் துணைநிலைக் கம்பெனியாக இருக்கும் நேரத்தில் அல்லது இரண்டும் இன்னொரு கம்பெனியின் துணைநிலைக்கம்பெனி களாக இருக்கும் நேரத்தில் அல்லது முதற்குறிப்பிடப் பட்ட கம்பெனி மற்றதன் வைத்திருக்கைக் கம்பெனியாக

இருக்கும் நேரத்தில் அல்லது அதே தனியாள் அவை இரண்டினதும் பெரும்பான்மைப் பங்குதாரக் கட்டுப்பாட்டாளராக இருக்கும் நேரத்தில், கடன் என்ற வகையாக அல்லது பங்குகளுக்கான ஒப்பப்பணங்கள் என்ற வகையாகச் செலுத்தப்பட்டவொரு பணத்தொகை;

(இ) பணத்தொகையொன்று செலுத்தப்படும் நேரத்தில், அதனைப் பெறுகின்ற ஆளின் உறவினராக அல்லது அதனைப் பெறுகின்ற ஆளின் பணிப்பாளராக அல்லது அதனைப் பெறுகின்ற ஆளின் பணிப்பாளரினது உறவினராக இருக்கும் ஆளொருவரினால் செலுத்தப்பட்டவொரு பணத்தொகை:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின் கருத்துக்குட்பட்ட நிதிக்கம்பெனியொன்றினால் கடன்பெறுகைகள் அல்லது பங்குகளுக்கான ஒப்பப்பணம் என்ற வகையாகவல்லாது வேறுவகையாகப் பெறப்பட்டவொரு பணத்தொகை, வைப்பொன்றாகவமைதல் வேண்டும்;

இப்பந்தியின் நோக்கத்துக்காக, ஒரு தனியாள் தொடர்பாக “உறவினர்” என்பது, அவரது வாழ்க்கைத் துணை, பிள்ளைகள் அல்லது அவரது பெற்றார் என்று பொருளாகும்;

(ஈ) அதிகாரமளிக்கப்பட்ட காப்புறுதித் தொழிலைக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக, 2000ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்துதற் சட்டத்தின்கீழ் காப்புறுதித்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவருக்குச் செலுத்தப்பட்டவொரு பணத்தொகை ;

(உ) (3) ஆம் உட்பிரிவுக்கமைய, பங்குகளுக்கான ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்டவொரு பணத்தொகை;

(ஊ) ஒரு கம்பெனியின் ஏதேனும் சொத்தை ஈடு வைப்பதன் மூலம் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட முறிகளுக்கும் கடன்தொகுதிப் பத்திரங்களுக்கும் ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்டவொரு பணத்தொகை;

ஆயின், அத்தகைய முறிகளின் அல்லது கடன் தொகுதிப்பத்திரங்களின் மொத்தப் பெறுமதி, கம்பெனி யின் அத்தகைய சொத்தினது சந்தைப்பெறுமதியை விஞ்சுதலாகாது;

(எ) கலப்புத் தனிசுக்கு அல்லது கீழமைந்ததாக்கப்பட்ட தனிசுக்கு ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்டவொரு பணத்தொகை:

ஆயின், உள்ளுறைவுத் தனிசுச் சாசனம், 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையொன்றின் மீது நிரற்படுத்தப்பட்ட வொரு பிணையமாகவிருத்தல் வேண்டும் ;

(ஏ) (3) ஆம் உட்பிரிவுக்கமைய, ஒப்பந்தமொன்றை நிறைவேற்றுவதற்கான பிணைப்பொறுப்பு என்ற வகையாக அல்லது ஒப்பந்தமொன்றை நிறைவேற்றா மையிலிருந்து விளையக்கூடிய இழப்புத் தொடர்பிலான பிணைப்பொறுப்பு என்றவகையாகச் செலுத்தப்பட்ட வொரு பணத்தொகை;

(ஐ) (3) ஆம் உட்பிரிவுக்கமைய, கலப்புத் தனிசுக்கு அல்லது கீழமைந்ததாக்கப்பட்ட தனிசுக்கு ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்டவொரு பணத்தொகை ; இதன் ஆகக் குறைந்த முதிர்வுக் காலப்பகுதி அறுபது மாதங்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்;

(ஒ) (3) ஆம் உட்பிரிவுக்கமைய, (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட நியதிகளின் மீது குறிப்பிட்ட சந்தர்ப்பங்களின் மீது மட்டுமே ஆளொருவருக்குச் செலுத்தப்பட்டவொரு பணத்தொகை; அத்துடன்

(ஓ) ஒரு கொடுக்கல்வாங்கலில் செலுத்தப்பட்டவொரு பணத்தொகை ; இதன் தன்மை, வர்த்தமானியிலான அறிவிப்பின்மூலம் சபையினால் குறித்துரைக்கப்பட்ட வாறாகவிருக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (உ), (ஏ), (ஐ) மற்றும் (ஒ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறாகக் கொடுக்கல்வாங்கல் நடாத்தப்பட்டவொரு பணத்தொகை, அச்சந்தர்ப்பங்களின் அடிக்கடியான தன்மையையும் அவற்றின் பண்பியல்புகளையும் கருத்திற்கொண்டு, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வைப் பொன்றாகவுள்ளதாவெனச் சபை தீர்மானிக்கலாம்.

**74.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய - பொருள் கோடல்.

''இணைக்கம்பெனி'' என்பது, ஒரு குறிப்பிட்ட கம்பெனி தொடர்பாகப் பயன்படுத்தப்படும்போது, அத்தகைய குறிப்பிட்ட கம்பெனி எந்தக் கம்பெனியில் செலுத்தப்பட்ட சாதாரணப் பங்கு மூலதனத்தின் இருபது சதவீதத்துக் குக் குறையாததையும் ஐம்பது சதவீதத்துக்கு மேற்படாத தையும் வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனி என்று பொருளாகும்;

''சபை'' என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத் தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை என்று பொருளாகும்;

''மூலதனம்'' என்பது, ஒரு கம்பெனியின் செலுத்தப்பட்ட மூலதனம் என்று பொருளாகும்;

''மூலதன நிதிகள்'' என்பது, ஒரு நிதிக்கம்பெனி தொடர்பாக, செலுத்தப்பட்ட மூலதனமும் நிரந்தரமான இலவச ஒதுக்குகளும் என்று பொருளாகுமென்பதுடன், சபை யினால் அவ்வாறு தீர்மானிக்கப்படின், பிணைப் பொறுப்பளிக்கப்படாத கடன்தொகுதிப்பத்திரங்களி னதும் ஏனைய கடன்முறிகளினதும் முகப் பெறுமதி யையும் உள்ளடக்கும் ; ஒரு நிதிக்கம்பெனி ஒடுக்கப்படும் அல்லது மூலதனம் திருப்பிக்கொடுக்கப்படும் அல்லது குறைக்கப்படும்பட்சத்தில், இது நிதிக்கம்பெனியின் வைப்புக்களுக்கும் ஏனைய கடன் பெறுகைகளுக்கும் பின்னர் வரிசைப்படுத்தப்படுதல் வேண்டுமென்பது டன், அவற்றுக்குக் கீழமைந்தாக்கப்படுதலும் வேண்டும்;

“மத்திய வங்கி” என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும் ;

“வர்த்தக வங்கி” என்பது, 1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட ஓர் உரிமம்பெற்ற வர்த்தக வங்கி என்று பொருளாகும்;

“மைய மூலதனம்” என்பது, பின்வருவனவற்றின் கூட்டு மொத்தம் என்று பொருளாகும்:-

(அ) வழங்கப்பட்டவையும் முழுமையாகச் செலுத்தப் பட்டவையுமான சாதாரணப் பங்குகள் அல்லது பொதுப் பங்குத்தொகுதி மற்றும் பகுதியளவில் செலுத்தப்பட்ட பங்குகளின் அல்லது பங்குத் தொகுதியின் விடயத்தில், செலுத்தப்பட்ட தொகை :

ஆயின், எவ்வாறாயினும், காலத்துக்குக் காலம் சபையினால் வழங்கப்பட்ட பணிப்பு களின் நியதிகளின்படி மைய மூலதனத்தில் சேர்க்கப்படுவதற்குத் தகவுடையனவாகவிராத ஒதுக்குகள், மேன்மிகைகள், வைத்திருக்கப்பட்ட இலாபங்கள் என்பவற்றுக்கெதிராக வழங்கப் பட்ட எவையேனும் பங்குகள், மைய மூலதனத் தில் சேர்க்கப்படுதலாகாது :

ஆயின், மேலும், இச்சட்டத்தின்கீழ் உரிம மொன்றுக்காக விண்ணப்பிக்கின்ற ஒரு கம்பெனி தொடர்பாக மைய மூலதனத்தைக் கணக்கிடுவதில், வழங்கப்பட்ட சாதாரணப் பங்குகள், அவை காசுக்காக வழங்கப்படின் மட்டுமே செலுத்தப்பட்டவையாகக் கருதப் படுதல் வேண்டும் ;

(ஆ) பங்கிலாபங்களின் கொடுப்பனவைப் பகுதியளவில் அல்லது முழுமையாக ஆதாரப் படுத்துவதற்கு இலாபம் போதியதாகவிராத பட்சத்தில் அத்தகைய கொடுப்பனவு, குறைக்கப் படக்கூடியவிடத்து அல்லது நிரந்தரமாகத் தள்ளுபடி செய்யப்படக்கூடியவிடத்து, வழங்கப்பட்டவையும், முழுமையாகச் செலுத்தப்பட்டவையுமான குவியாதவையும், மீட்கப்படற்பாலவையல்லாதவையுமான முந்துரிமைப் பங்குகள்:

ஆயின், எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றுக்காக விண்ணப்பிக்கின்றவொரு கம்பெனி தொடர்பாக மைய மூலதனத்தை முடிபுசெய்வதில், வழங்கப்பட்ட குவியாதவையும், மீட்கப்படற்பாலவையல்லாதவையுமான முந்துரிமைப் பங்குகள், அவை காசுக்காக வழங்கப்படின் மட்டுமே செலுத்தப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) ஏற்புடையற்பாலதாயின், சாதாரணப் பங்குகள், பொதுப் பங்குத்தொகுதி அல்லது குவியாதவையும், மீட்கப்படற்பாலவையல்லாதவையுமான முந்துரிமைப் பங்குகளின் சமப்பெறுமதிக்கு மேலான வழங்கல் விலையின் விஞ்சுகை;

(ஈ) இச்சட்டத்தின் 18ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பேணப்பட்ட ஒதுக்கு நிதியமொன்றின் வரவுக்கிருக்கும் தொகை;

(உ) கணக்குகளின் கடைசியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றில் காட்டப்பட்டவாறு வைத்திருக்கப்பட்ட உழைப்புக்கள், பங்குக் கட்டுப்பணங்கள்

அல்லது வேறு தேறிப்பெறப்பட்ட மேன்மிகைகள் என்பவற்றை ஒதுக்கீடு செய்வதன்மூலம் உருவாக்கப்பட்டவையும் அல்லது அதிகரிக்கப்பட்டவையும், பொதுவான அல்லது வேறு இலவசமான ஒதுக்குகள் என்ற வடிவத்திலானவையுமான வெளிக்காட்டப்பட்ட ஒதுக்குகள்;

(ஊ) கணக்குகளின் கடைசியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கூற்றில் காட்டப்பட்டவாறு ஒன்று திரண்ட இலாபம் அல்லது நட்டம்:

ஆயின், எவ்வாறாயினும், முதலீட்டு ஆதனங்களை மீளப்பெறுமதி மதிப்பிடுவதிலிருந்து எழுகின்ற வைத்திருக்கப்பட்ட இலாபங்கள் சேர்க்கப்படுதலாகாது;

(எ) சபையினால் வழங்கப்படக்கூடிய ஏதேனும் பணிப்புக்கமைய, நிலையான மற்றும் நீண்டகால முதலீடுகளின் விற்பனையிலிருந்து எழுகின்ற வரிக்குப்பின்னரான ஏதேனும் மேன்மிகையை அல்லது நட்டத்தைச் சேர்த்து, கடைசியாகக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் முடுகைத் தேதியிலிருந்து உழைக்கப்பட்ட ஏதேனும் இலாபம் அல்லது உறப்பட்ட ஏதேனும் நட்டம்; அத்துடன்

(ஏ) காலத்துக்குக்காலம் சபையினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளை ஈடுசெய்கின்ற வேறேதேனும் மூலதன அம்சம் ;

‘‘தங்கிவாழும் பிள்ளை’’ என்பது, பதினெட்டு வயதுக்குக் குறைவான ஒரு பிள்ளை அல்லது திருமணமாகாதவரும் வேலையற்றவருமான இருபத்தைந்து வயதுக்குக் குறைவான ஒரு பிள்ளை அல்லது வயதைப் பொருட்படுத்தாது, தமது ஜீவனோபாயத்தை உழைப்பதற்கு அவரை ஆற்றலற்றவராக்கும் உடல் அல்லது உள இயலாமையினால் பீடிக்கப்பட்ட ஒரு பிள்ளை என்று பொருளாகும் ;

''பணிப்பாளர்'' என்பது, நிதிக்கம்பெனிகள் என்ற விடயம் இலங்கை மத்திய வங்கியின் எந்தப் பகுதிக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்தப் பகுதியின் தலைவர் என்று பொருளாகும் என்பதுடன், பதிற் பணிப்பாளர் ஒருவரையும் உள்ளடக்கும்;

''நிதித்தொழில்'' என்பது, வைப்புக்களை ஏற்றுக்கெள்ளும் தொழில், அத்துடன் -

(அ) பணம் கடன் கொடுத்தல் ; அல்லது

(ஆ) எத்தகையதுமான ஏதேனும் முறையில் பணத்தை முதலீடு செய்தல் ; அல்லது

(இ) எத்தகையதுமான ஏதேனும் முறையில் பணம் கடன்கொடுத்தல் மற்றும் பணத்தை முதலீடு செய்தல்,

என்று பொருளாகும்;

''நிதிக்கம்பெனி'' என்பது, நிதித்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு இச்சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு கம்பெனி என்று பொருளாகும்;

"வைத்திருக்கைக் கம்பெனி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் அப்பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

''முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர்'' என்பது, நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ ஏதேனும் நிதிக்கம்பெனியின் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கும், பணிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரமும் பொறுப்புடைமையும்கொண்ட ஆளொருவர் என்று பொருளாகுமென்பதுடன், அத்தகைய கம்பெனியின் (நிறைவேற்று அல்லது வேறுவகையான) எவரேனும் பணிப்பாளரையும் உள்ளடக்கும் ;

"சட்டப்படியான பராயமடையும் வயது என்பது, (66 ஆம் அத்தியாயமான) பராயமடையும் வயதுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"திரவச் சொத்துக்கள்" என்பது,-

(அ) கையிலுள்ள காசு ;

(ஆ) எவரேனும் வங்கியாளரின் சோந்தையிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து விடுபட்டனவாக, வர்த்தக வங்கியொன்றில் ஒரு நடப்பு அல்லது வைப்புக் கணக்கிலுள்ள மீதிகள்;

(இ) ஏதேனும் சோந்தையிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து விடுபட்டனவாக, ஓராண்டினுள் முதிர்வடைகின்ற இலங்கை அரசாங்கத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள்;

(ஈ) ஓராண்டினுள் முதிர்வடைகின்றவையும், ஏதேனும் சோந்தையிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து விடுபட்டவையுமான இலங்கை அரசாங்கப் பிணையங்கள்;

(உ) ஓராண்டினுள் முதிர்வடைகின்றனவும், ஏதேனும் சோந்தையிலிருந்து அல்லது பொறுப்பிலிருந்து விடுபட்டனவுமான இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள்;

(ஊ) இலங்கை மத்திய வங்கியுடன் பேணப்பட்ட காசுமீதி, ஏதேனுமிருப்பின்; அத்துடன்

(எ) இலங்கை மத்திய வங்கியின் பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு சொத்துக்கள்;

"கடன்" என்பது, ஒரு வாடகைக்கொள்வனவு உடன்படிக்கை அல்லது குத்தகைகொடுத்தல் உடன்படிக்கை தொடர்பான ஏதேனும் முற்பணத்தையும் அல்லது ஏதேனும் விற்பனையின்மீதான கொடுப்பனவின் பின்போடுதலையும் அல்லது ஒரு கொடுக்கல் வாங்கலிலான கொடுப்பனவின் பின்போடுதலையும் உள்ளடக்கும்;

"மாகாண சபை" என்பது, அரசியலமைப்பின் 154அ என்னும் உறுப்புரையின் பயனைக்கொண்டு ஒரு மாகாணத்துக்காகத் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை என்று பொருளாகும்;

"தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது, -

(i) இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்டதும், கணக்காளரொருவராகத் தொழில்புரிவதற்கானதுமான சான்றிதழொன்றை உடையவரான தனியாளொருவர் என்று பொருளாகும்; அல்லது

(ii) அதன் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்டதும், கணக்காளரொருவராகத் தொழிற்புரிவதற்கானதுமான சான்றிதழொன்றை உடையவரான கணக்காளர்கள் குழுமம் என்று பொருளாகும்;

"உறவினர்" என்பது, ஒரு தனியாள் தொடர்பாக, அத்தகைய தனியாளின் வாழ்க்கைத்துணை அல்லது அவரில் தங்கிவாழும் பிள்ளை என்று பொருளாகும்;

“துணைநிலைக் கம்பெனி” என்பது, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் அப்பதத்துக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

“கணிசமானளவிலான அக்கறை” என்பது,-

(அ) ஒரு கம்பெனி தொடர்பாக, அதன் செலுத்தப் பட்ட பெறுமதியானது கம்பெனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் பத்துசத வீதத்தை விஞ்சுகின்றதாகவுள்ள, தனித்தனி யாகவோ அல்லது ஒன்றாகச் சேர்த்தோ, அதன் பங்குகளில் இன்னொரு கம்பெனியினால் அல்லது ஒரு தனியாளினால் அல்லது அவரது உறவினரால் நன்மைபயக்கும் அக்கறை யொன்று வைத்திருக்கப்படுகின்றமை அல்லது அத்தகைய கம்பெனிசார்பில் தனியாளொரு வரினால் அல்லது அவரது உறவினரினால் அல்லது இன்னொரு கம்பெனியினால் கொடுக் கப்பட்டதும், செலுத்தப்பட்ட மூலதனத்தின் பத்து சதவீதத்துக்குக் குறையாததுமான பணத் தொகையொன்றுக்கான ஓர் உத்தரவாதம் அல்லது நட்டோத்தரவாதம் உள்ளமை என்று பொருளாகும்;

(ஆ) ஒரு குழுமம்தொடர்பாக, குழுமத்தின் எல்லாப் பங்காளர்களினாலும் ஒப்பப்பணமாகச் செலுத்தப்பட்ட மொத்த மூலதனத்தின் பத்துசத வீதத்துக்கு அதிகமானதைக் குறிக்கின்றதாக வுள்ள, தனித்தனியாகவோ அல்லது ஒன்றாகச் சேர்த்தோ தனியாளொருவரினால் அல்லது அவரது உறவினரால் அதன்கண் வைத் திருக்கப்பட்ட நன்மைபயக்கும் அக்கறை அல்லது அத்தகைய குழுமத்தின் சார்பில் தனியாளொருவரினால் அல்லது அத்தனி

யாளின் வாழ்க்கைத்துணையினால், பெற்றோரினால் அல்லது பிள்ளையினால் கொடுக்கப்பட்டதும், அம்மூலதனத்தின் பத்து சதவீதத்துக்குக் குறையாததுமான பணத் தொகையொன்றுக்கான ஓர் உத்தரவாதம் அல்லது நட்டோத்தரவாதம் உள்ளமை என்று பொருளாகும்;

"பிழையானவழியிலான ஈட்டுகை" என்பது, ஈட்டுகின்ற ஆள் எந்த ஆதனத்துக்குச் சட்டப்படி உரித்துடையவராக விராதுள்ளாரோ அந்த ஆதனம் நேர்மையீனமான, மோசடியான அல்லது சட்டமுறையற்ற வழிவகைகள் மூலம் ஈட்டப்படுதலாகும்;

"பிழையானவழியிலான இழப்பு" என்பது, அதனை இழக்கின்ற ஆள் எந்த ஆதனத்துக்குச் சட்டப்படி உரித்துடையவராகவுள்ளாரோ அந்த ஆதனம், நேர்மையீனமான, மோசடியான அல்லது சட்டமுறையற்ற வழிவகைகள் மூலம் இழக்கப்படுதலாகும்.

**75**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்